

நாதஸ்வர

# இசைச்செல்வர்

திரு

# அருணாசலம்

அவர்களுக்கு.

ரிஷிகேஷம் சுவாமி

சிவானந்தா

**நாதஸ்வரகலாநிதி**

என அருளிய

கௌரவ பட்டயம்.



ENQUIRE "WHO AM I"! KNOW THE SELF !! AND BE FREE !!!

The Yoga Vedanta Forest University

ANANDA KUTIR, RISHIKESH, HIMALAYAS.
INDIA

Tat Twam Asi

WHEREAS, by the Grace of God, the Fountain of Eternal Bliss, and by The Will of the Almighty, it has been recognised that Karukurichi Isaichelvan Sri P. Arunachalam is worthy of being awarded The sacred title of Nadaswara-kala-Nidhi in appreciation of Meritorious services rendered in the field of music (nadaswaram) & for unrivalled mastery of nadaswaram & firm devotion to Truth, Love and Purity I hereby make this award In token of such recognition, with my best wishes and devout prayers To the Lord to bless the recipient hereof with health, long life, peace, prosperity, Eternal Bliss, success in all undertakings, Vidya, Tushti, Pushti and Divine Aiswarya.

This 18th day of May 1955.

ADVT.

# கலைக்கதிர்

ஆசிரியர் :

G. R. தாமோதரன் Bsc. Elec., B. Sc. Mech. (Durham), M. I. E. E. (London), A. M. I. E. (India) M. P.

ஒரு தலை சிறந்த மாத வெளியீடு

●

- கலையின் களஞ்சியம்; கருத்தின் கருவூலம்.
- தமிழ்நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர்களின் எழுத்தோவியங்களும் அழகிய புகைப் படங்களும்கொண்டு ஒளிரும் ஓர் ஒப்பற்ற இதழ்.
- விஞ்ஞானம், இலக்கியம், உளவியல் பற்றிய கட்டுரைகளும், கவிதை, கதை முதலியவைகளும் கொண்டதாய், தமிழ்த்தாய்க்கு அணி செய்யும் அரிய இதழ்.

○

| | | |
|---|---|---|
| தனி இதழ் விலை | ரூ. | 0—8—0 |
| ஆண்டுச் சந்தா | ரூ. | 5—0—0 |
| இரண்டாண்டுச் சந்தா | ரூ. | 9—0—0 |

(உள்நாடு இலங்கை உட்பட)

ஆண்டுச் சந்தா (வெளிநாடு) ரூ. 6—0—0

---

ஓர் ஆண்டிற்குக்
குறைவான சந்தா ஏற்றுக் கொள்ளப்பெருது.

---

விவரங்களுக்கு :-

## கலைக்கதிர்

பீளமேடு அஞ்சல் ★ கோயமுத்தூர்.

" காலத்தால் சாகாது! காலத்தின் ஏலத்தால் மலியாது !"

— புதுமைப்பித்தன்

# புதுமைப்பித்தன் நூல்கள்


| | | | |
|---|---|---|---|
| புதுமைப்பித்தன் கதைகள் | | .... | 4—0—0 |
| ,, கட்டுரைகள் | | .... | 2—8—0 |
| ,, கவிதைகள் | | .... | 2—0—0 |
| புதிய ஒளி | .... | .... | 3—0—0 |
| அன்று இரவு | .... | .... | 3—0—0 |
| சித்தி | .... | .... | 1–12—0 |
| ஆண்மை | .... | .... | 1—0—0 |
| வாக்கும் வக்கும் | .... | .... | 1—8—0 |
| மணியோசை | .... | .... | 1—8—0 |
| தெய்வம் கொடுத்த வரம் | .... | .... | 1—8—0 |
| முதலும் முடிவும் | ... | ... | 1—4—0 |
| உலக அரங்கு | ... | ... | 1—4—0 |
| நாரத ராமாயணம் | ... | .... | 1—0—0 |
| நிச்சயமா நாளைக்கு | ... | ... | 1—0—0 |
| பிரேத மனிதன் | ... | ... | 1—0—0 |
| பளிங்குச் சிலை | .... | .... | 1—0—0 |

'சாந்தி' ஆசிரியர்

## ரகுநாதன் எழுதியது

| | | |
|---|---|---|
| புதுமைப்பித்தன் வரலாறு .... | .... | 3—0—0 |

## ஸ்டார் பிரசுரம்

திருவல்லிக்கேணி, சென்னை—5.

★

மேலக்கோபுரத்தெரு, மதுரை.

# சாந்தி

ஆசிரியர் : ரகுநாதன்

ஜூலை ★ 1955


## புதுமைப்பித்தன் மலர்

★


தலையங்கம் .... 5

புதுமைப்பித்தன் எஸ். வையாபுரிப்பிள்ளை 8

கடைசி நாட்களில் .... எஸ். சிதம்பரம் 10

புதுமைப்பித்தனும் இளம் எழுத்தாளரும் .... கு. அழகிரிசாமி 17

பித்தன் .... 'தமிழ்' ஒளி 23

பிள்ளை வரமா? .... சுந்தரராமசாமி 24

படங்கள் .... 31—34

அன்னை இட்ட தீ! .... புதுமைப்பித்தன் 37

பித்துக்குளி .... ஜயகாந்தன் 47

சுதந்திரக் கலைஞர் ... 'இளங்கோவன்' 53

வெட்டரிவாள் பாட்டுண்டு .... ரகுநாதன் 55

சிறப்புப்பாயிரம் .... 59

உன்னைத்தான் .... .... 61


அட்டைப் படம்:

பூங்கொடியின் மத்தியிலோர் பூங்கொடி!
(ஸ்ரீரங்கம் வேணுகோபால் ஆலயத்திலுள்ள சிற்பம்)

உதவியவர் :

டி. ஐ. சந்தாமியான்,
கரூர்.


கதைகளில் வரும் பெயர், சம்பவம் அனைத்தும் கற்பனை; எவரையும் குறிப்பிடுவன அல்ல.

# மணீஸ் [illegible]ப்டார்மென்ட்ஸ்




மிட்டாய்கள் &
சாக்லட் தினுசுகள்.

★

தமிழ்நாட்டின் தலைசிறந்த
தயாரிப்பு

★

★ கனியின் ருசி !
★ கண் கவரும் தோற்றம் !
★ குறைந்த விலை !

நெல்லை ஜில்லாவுக்கு
முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை

**MANI'S CONFECTIONARY WORKS**
No. 2, East Pattamar Street,
MADURAI.


---

## அடுத்த இதழில் ஆரம்பமாகிறது !

ஆசிரியர் ரகுநாதன் எழுதும்

அற்புதமான தொடர்கதை

○

# நெஞ்சிலே இட்ட நெருப்பு !

●

உங்கள் பிரதிகளுக்கு இப்போதே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

○

# சாந்தி

"நமக்குத் தொழில் கவிதை; நாட்டிற்குழைத்தல்" — பாரதி

மலர் 1 | மன்மத, ஆனி ★ ஜூலை 1955 | இதழ் 8


# புதுமைப்பித்தன்

●

மனித இதயத்துக்குள்ளே தேவ சக்திகளை நிலைபெறச் செய்யும் மந்திரச் சொல் வேண்டும் என்றான் பாரதி. வானகத்தை இங்கு தோற்றுவிக்கும் வலிமையையும் உறுதிப் பாட்டையும் மக்கள் மனத்திலே உருவேற்றக்கூடிய சிறந்த இலக்கியங்கள் பல தோன்ற வேண்டும் என்பதைத்தான் பாரதி இவ்வாறு குறிப்பிட்டான். அதுமட்டுமல்லாமல் அப்படிப்பட்ட இலக்கியச் செல்வத்தை அவனே படைத்தும் தந்திருக்கிறான். இருபதாம் நூற்றாண்டின் தமிழ்க் கவிதைக்கு எவ்வாறு பாரதியே இன்னும் தலைவனாக விளங்கி வருகிறானோ, அதுபோலவே, இந்த நூற்றாண்டின் தமிழ் வசனத்துக்குப் புதுமைப்பித்தன்தான் தலைவனாக விளங்கி வருகிறார். மேலும் மாநிலம் பயனுறும் புதிய கவிதைகளைப் படைக்க விரும்பும் இன்றைய புதுமைக் கவிஞர்களுக்குப் பாரதியின் கவிதைகள் எவ்வாறு ஆதர்ச ஜோதியாய் நின்று நிலவுகின்றனவோ, அதுபோலவே, மக்கள் நலங்கருதி இலக்கியம் சமைக்க வேண்டும் என்று முனைந்துள்ள இன்றைய புதுமை எழுத்தாளர்களுக்கும் புதுமைப்பித்தனின் இலக்கியப்பணியே முன்னோடும் பிள்ளையாக நின்று நிலவுகின்றது. பாரதியைப் படித்துத் தெரிந்து கொள்ளாமல் எவ்வாறு புதிய கவிதாபரம்பரையைத் தோற்றுவிக்க இயலாதோ, அவ்வாறே புதுமைப் பித்தனைப் படித்துப் புரிந்து தெரிந்துகொள்ளாமல் புதிய கதா பரம்பரையையும் தோற்றுவிக்க இயலாது. எனவேதான் புதுமைப்பித்தன்

பரம்பரையில் புதிய புதிய எழுத்தாளர்களைத் தோற்றுவிக்கும் உத்தேசமும் உறுதியும் உத்வேகமும் கொண்ட 'சாந்தி'யின் இம்மாத இதழ் புதுமைப்பித்தன் மலராக மலர்கிறது.

உலகத்தின் தலைசிறந்த இலக்கியங்களோடு ஒப்பிடத்தக்க அரிய சிறு கதைச் செல்வத்தைப் புதுமைப்பித்தன் படைத்துத் தந்தார் என்பது மட்டும் அல்ல. தமிழ் இலக்கியத்திலேயே புதுமைப்பித்தன் தான் வாழ்க்கையை நேர் நின்று நோக்கும் யதார்த்தவாதியாகத் தோற்றமளிக்கிறார். வாழ்க்கைக்குப் புறம்பான வறட்டுக் கற்பனைகளையும், சொப்பனவஸ்தைப் புலம்பல்களையும் கதை என்ற பெயரில் தமிழ் நாட்டு எழுத்தாளர்கள் மேய விட்டு வந்த காலத்தில், புதுமைப்பித்தன் ஒருவர்தான் வாழ்க்கையின் குரூர வசீகரங்களைக் கண்டு கூசி ஒதுங்காமல், அவற்றையே தமது சிருஷ்டிகளுக்குக் கருப்பொருளாக்கினர். வாழ்க்கையின் சிறுமைகளையும் கொடுமைகளையும் கண்டு அவர் ஒப்பாரி வைக்கவில்லை. அவற்றைக் கண்டு சீறியெழுந்தார். அந்தக் கொடுமைகள் ஒழிய வேண்டும் என்ற ஆவலையும் பிரதிபலித்தார். எனினும் அந்த ஆவலை அனுபவ சித்தியாக்கும் மார்க்கத்தில் அவர் பிரவேசிக்கவில்லை. அதற்கு அவர் வாழ்ந்த காலத்தின் சூழ்நிலையும், இலக்கிய உலகின் தன்மையும், அவரது கண்ணோட்டமுமே காரணங்களாகும். எனவே புதுமைப்பித்தனின் இலக்கிய பாரம்பரியத்தின் பலாபலன்களை நாம் நன்கு ஆராய்ந்து தெளிவதன் மூலமே, நமது எதிர்கால இலக்கிய மார்க்கத்தையும் நாம் கண்டுணர முடியும். அந்தப் பணியையும் நாம் விரைவிலேயே மேற்கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்.

புதுமைப்பித்தன் புகழுடல் எய்தி ஏழு ஆண்டுகள் முடிந்துவிட்டன. எனினும், தமிழ் நாட்டு எழுத்தாளர்களோ புதுமைப்பித்தனின் மறைவு குறித்து, பிதுர்க்கடன் கழிப்பதுபோல் ஒன்றிரண்டு வருடங்கள் அழுது புலம்பியதோடு ஆத்ம திருப்தியடைந்து அடங்கிப் போய்விட்டார்கள். இவ்வாறு போனதற்குக் காரணம் அவர்கள் புதுமைப்பித்தனின் ஸ்தானத்தையும் இலக்கிய பரம்பரையையும் உணரத் தவறிவிட்டார்கள் என்பதல்ல; உணர்ந்தாலும் ஒப்புக்கொள்ள மறுக்கும், உதறித் தள்ளத் துணியும், அவரது பரம்பரையை வளர விடாது தடுக்கும் உத்தேசம்தான் காரணம் என்று சொல்ல வேண்டும். எனினும் சூரிய ஒளியைச் சுளகைக்கொண்டு மறைத்துவிட முடியாது. இன்று ஜீவிய வந்தராயிருக்கும் எண்ணற்ற

எழுத்தாளர்கள் பலரது எழுத்துக்களும் அவர் தம் கண்முன்னேலேயே நீர்மேல் எழுத்துப்போல் சீரழியும்போதும்கூட, புதுமைப்பித்தனின் சிருஷ்டிகள் மட்டும் கல்மேல் எழுத்துப்போல் பல்லாண்டு பல்லாண்டு இலக்கிய உலகின் ஆதர்ச ஜோதியாய், கலங்கரை விளக்கமாய் நின்று நிலவத்தான் செய்யும் என்பதை மட்டும் நாம் உறுதியுடன் கூற முடியும்.

இம் மலரில் பல புதிய அரிய விஷயங்கள் அடங்கியுள்ளன. மலரை உருவாக்கி உங்களுக்குத் தருவதில் எங்களுடன் ஒத்துழைத்த எழுத்தாளர்களுக்கும், பிரசுரகர்த்தருக்கும், புகைப்படங்கள் தந்துதவிய புதுமைப்பித்தனின் சுற்றத்தாருக்கும் உங்கள் சார்பாக எங்கள் மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

## வரவேற்கிறோம்

இந்திய அரசாங்கத்தார் அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாகி வந்த 'காமிக்' புஸ்தகங்கள் என்னும் நச்சிலக்கியங்களைத் தடை செய்துள்ள மகிழ்ச்சிக்குரிய செய்தியை நாம் மனமுவந்து வரவேற்கிறோம். மிருக குணத்தையும் போர் வெறியையும் ஆபாச வேட்கைகளையும் தூண்டிவிட்டு, இளம் பிள்ளைகள் முதல் இளைஞர் வரை எல்லோருடைய நல்லுணர்ச்சிகளையும் மழுங்கடித்து வந்த, இந்த நீசத்தனமான புத்தகங்களின் பலாபலன்கள் நாம் அறிந்ததே. நாடுகளுக்கிடையே பகைமையையும், மனிதர்களுக்குள்ளே குரோதத்தையும், வாழ்க்கையைப் புறக்கணிக்கும் போதையையும் ஊட்டும் தன்மை வாய்ந்த இந்த இலக்கியங்களால், பச்சிளம் பாலகர்கள்கூட கொலை பாதகர்களாக மாறியுள்ளார்கள். அமெரிக்கப் பிரஜைகளை அசுரர்களாக்கி வந்த இந்த இலக்கியங்கள் நமது நாட்டிலும் ஏராளமாக இறக்குமதியாகி, நமது நாட்டு மக்களின் பண்பையும் பாரம்பரியத்தையும் கலையார்வத்தையும் கலைவளர்ச்சியையும் வெகுவாகப் பாதித்து வந்தன. இவற்றின் பிரவேசத்தால் நமது நாட்டுக் கலைஞர்களும் கலை இலக்கியமுமே கறைப்பட்டுச் சீரழிய நேர்ந்தது. இனி இந்த நிலைமை மாறும் என்று நாம் எதிர்பார்க்கலாம். என்னும், இம்மாதிரியான இலக்கியங்கள் அயல் நாட்டிலிருந்து மட்டும் இறக்குமதியாகவில்லை. நமது நாட்டுப் பத்திரிகைகளிலும் பிரசுரங்களிலும் கூட இப்படிப்பட்ட நாசக் கதைகள் இடம் பெற்று வருகின்றன. இவற்றால் நம் நாட்டுச் சிறுவர் சிறுமிகளும், யுவ யுவதிகளும் சீர்கெட்டு வருகிறார்கள். இந்த நிலைமையையும் அரசாங்கம் நன்கு பரிசீலித்துத் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் விரும்புகிறோம்.

●

முதுபெரும் தமிழ்ப் பேரறிஞரான திரு. வையாபுரிப் பிள்ளையவர்கள் புதுமைப்பித்தனைப்பற்றி மணிச்சுருக்கமாகத் தந்துள்ள மதிப்பீடு இது. புதிய எழுத்தாளர் பரம்பரையினரிடம் மட்டுமல்லாமல், பழந் தமிழ்ப் பேரறிஞர்களிடையேயும் புதுமைப்பித்தன் எவ்வாறு செல்வாக்குப் பெற்றிருந்தார் என்பதை இக்குறிப்பு நமக்கு எடுத்துக் காட்டுகிறது. புதுமைப்பித்தன் தின விழாவுக்குப் பேராசிரியர் அனுப்பிய இந்தச் செய்தி இப்போதுதான் முதன் முதல் அச்சேறுகிறது.

# புதுமைப்பித்தன்

•

**எஸ். வையாபுரிப் பிள்ளை**

•

புதுமைப்பித்தன் அவர்கள் மிகச் சிறந்த எழுத்தாளரில் ஒருவர். நமது நாட்டை நலிந்து வருத்தி வரும் பல வகைக் கேடுகளையும் சிறுகதைகளின் மூலமாகச் சித்தரித்து எடுத்துக் காட்டுவதில் இவர் நிபுணராக விளங்கினார். 'புதுமைப்பித்தன்' என்ற தொடருக்கே நமது சமூகத்தைச் சீர்திருத்தி அதில் புதுமையுணர்ச்சியை உண்டுபண்ணுவதில் பெருநோக்கங்கொண்டு அல்லும் பகலும் அதனையே நினைத்து மனத்தைப் பறிகொடுத்தவர் என்பதுதான் பொருள் என்று நாம் கருதும்படி இவரது சிறுகதைகள் அமைந்துள்ளன. அக்கதைகளைச் சொல்லும் முறையும் யாவரது உள்ளத்தையும் அள்ளிப் பிடிக்கும்படியாக உள்ளது. தற்காலத்தில் எழுந்த கதைகள் இவை என்பதைத் தெரிவிப்பவை போல, இவற்றில் காணும் வார்த்தைகளும், தொடர்களும் உள்ளன. கருத்தை விளக்குவதுதான் முக்கியமான நோக்கம் என்று இவர் கொண்டவர். ஆகவே அதற்குரிய சொல் எதுவாயிருப்பினும்— வடமொழியாயிருந்தாலும், இழிசன வழக்காயிருந்தாலும், ஆங்கில மொழியாயிருந்தாலும்—சிறிதும் கூசாமல் இவர் எழுதி வந்தனர். இதனால் தனிப்பட்ட சுவை இவரது கதைகளுக்கு விளைந்தது. அங்கங்கே காணும் ஹாஸ்யச் சுவை சமூகத்தைச் சிறிது எட்டி நின்று பார்த்து, அதன் நிலையைப் பாரபட்சமில்லாமல் சித்தரிக்கும் இவரது தன்மையை நன்கு புலப்படுத்துகிறது. இது நம்மைப் பெரிதும் வசீகரிக்கிறது.

புதுமையில் மட்டும் இவர் நாட்டங்கொண்டவர் என்று என்னால் கருத முடியவில்லை. பழமையிலும் இவர் பற்றுக்கொண்டவரே யாவர். பழைய நூல்களைக் கற்றுணர்ந்து அவற்றை ஆதாரமாகக்கொண்டு புதுக் கதைகள் புனைந்து எழுதுவதிலும்

இவரது இலக்கிய முயற்சி சென்றதுண்டு. சில பழைய நூல்களைத் தக்க முறையில் பதிப்பிக்க வேண்டுமென்றும் இவர் நினைத்திருந்தனர். இப்பதிப்புக்களைப் பற்றியும் பழைய நூல்களைப்பற்றியும் இவர் என்னோடு பலமுறை பேசிக் கலந்ததுண்டு. அக்காலங்களில் இவர் காட்டிய தமிழார்வமும் அது பலவகை நூல்களாலும் வளமடைய வேண்டுமென்று இவர் கொண்ட பேரவாவும் என்னை மிகவும் களிப்புறச் செய்தன.

கதைகள் எழுதுவதிலும் பண்டை நூல்களைக் கற்றுப் பயன்படுத்துவதிலும் மட்டும் இவரது முயற்சி அமைந்துவிடவில்லை. இலக்கிய விமர்சாரகவும் இவர் விளங்கினர். மேல் நாட்டு இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் எழுதியுள்ள முறைகளை அனுசரித்துச் சில கட்டுரைகள் இவர் எழுதியிருக்கின்றனர். அவைகளிலே இவருடைய உரை நடையின் சிறப்பும் கருத்து வளமும் நன்ருகப் பிரதிபலிக்கின்றன.

இவர்கள் நெடுங்காலம் வாழ்ந்து நோயினல் பீடிக்கப் படாமலிருந்தால் எத்தனையோ துறைகளில் எத்தனையோ புது முயற்சிகள் செய்து சிறந்த இலக்கிய சேவை புரிந்திருப்பார்கள் என்பது உறுதி. இவர்களை இத்தனை சீக்கிரத்தில் இழந்தது தமிழ் நாட்டின் துர்ப்பாக்கியமேயாகும். இவர்களுடைய நினைவை நாம் என்றும் மனதில் வைத்துப் போற்றுவோமாக! ★

●

## கடவுள் துணை !

புதுமைப்பித்தன் 'தினமணியில்' வேலை பார்த்துக்கொண்டிருந்த காலத்தில் அவருக்கு அச்சாகவேண்டிய 'காலி புரூபுகள்' பார்வைக்கு வரும். புரூபை எவ்வளவுதான் கவனமாகப் பார்த்துக் கொடுத்தாலும் சமயங்களில் கம்பாஸிட்டர்கள் பிழைகளைத் திருத்தாமல் விட்டுவிடுவார்கள். இதைக்கண்டு எரிச்சலுற்ற புதுமைப்பித்தன் சமயங்களில் புரூபைப் பார்த்து முடித்துவிட்டு, கடைசியில் 'கடவுள் துணை!' என்று எழுதிவிட்டு விடுவார். கம்பாஸிட்டர் வந்து "இதென்ன ஸார்? கடவுள் துணையைக் கம்போஸ் செய்யவா?" என்று கேட்டால், "இல்லையப்பா! நான் என்னல் ஆனமட்டும் பார்த்துவிட்டேன். இனிமேலும் தவறுகள் திருத்தப்படாதிருந்தால் கடவுள்தான் எனக்குத் துணை! நீ அல்ல!" என்பார் புதுமைப்பித்தன்.

(புதுமைப்பித்தன் வரலாறு)

கட்டுரை ஆசிரியர் சிதம்பரம் சிறந்த கலாரசிகர். 'கவிக்குயில்' என்ற பெயரில் இரு இலக்கிய மலர்த் தொகுதிகளைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். அத்துடன் 'காதலிக்கு' என்னும் நவீன கவிதைத் தொகுதி ஒன்றையும் இயற்றி வெளியிட்டுள்ளார். திருவனந்தபுரத்தில் புதுமைப்பித்தன் தமது அந்திம காலத்தைக் கழித்து வந்த காலத்தில் அவருக்கு உற்ற துணையாக இருந்தவர் இவர். இங்கு இவர் புதுமைப்பித்தனைப்பற்றிய குறிப்பிடத்தக்க சில நினைவுகளைத் தொகுத்துத் தந்திருக்கிறார்.

# கடைசி நாட்களில் புதுமைப்பித்தன்

○

எஸ். சிதம்பரம்

○

திருவனந்தபுரத்திலே எனது தகப்பனுருக்கு நகைக் கடை. அதிலே நானும் தொழில் புரிந்து வந்தேன். வியாபாரத் துறையில் ஈடுபட்டிருந்தாலும் இலக்கியங்களில் ஒரு பற்றும், ஈடுபாடும் இருந்த காரணத்தால் புதுமைப்பித்தனைப் போன்ற எழுத்தாளர்களைப்பற்றி அறிந்திருந்தேன். ஆனால் பலரையும் நேரில் பார்த்ததில்லை.

ஒரு நாள்.........

அன்று கடையில் மும்முரமாக வியாபாரத்தில் ஈடுபட்டு வியர்த்து விதிர் விதிர்த்துப் போயிருந்தேன். அப்போது ஒல்லியான ஒரு மனிதர் வந்தார். நீண்டு தொங்கும் ஒரு ஜிப்பாவை அணிந்து, பித்தானில்லாது தொளதொளப்பாகத் தொங்கவிட்டு, பைத்தியக்காரன்போலக் காணப்பட்டார் அவர்.

''சார், தங்க அரைஞாணமும், காப்பும், மோதிரமும் வேணும். சின்னப் பாப்பாவுக்கு. பிறந்து பதினறு நாள் ஆகவில்லை... கிடைக்குமா?'' என்று கேட்டுக்கொண்டே உட்கார்ந்தார் அவர். நெற்றியிலே விழுந்த கேசத்தைக் கைவிரல்களால் பின்னுக்குக் கோதி விட்டார். வெற்றிலைக் காவியேறிய பற்கள் முழுதும் வெளித் தோன்ற கடகட வெனச் சிரித்தார்.

நான் கவனித்தேன். அவர் யார் எனப் புரியவில்லை. நானிருந்த நிலையில் அதையறியவும் முயலவில்லை.

''நீங்கள் கேட்ட சாமான் ஒன்றும் இப்போதில்லை. ஆர்டர் கொடுத்தால் செய்து தரலாம்'' என்றேன்.

அவர் சிரித்தார்.

''எங்கே போனலும் நமக்கு வெற்றியே கிடையாதுபோலும். பணம் கொடுத்தாலும் ஆசை பூர்த்தியாகாது போலிருக்கு...ம் ...கொஞ்சம் குடிக்கத் தண்ணி கொடுப்பீங்களா?''

''கூல்டிரிங் சாப்பிடுறீங்களா?'' என்றேன் நான்.

புதுமைப்பித்தன்
சிறுகதைப் போட்டி
1955
அறிவிப்பு.

புதுமைப்பித்தன் சிறுகதைப் போட்டி (1955)க்கு ஏராளமான கதைகள் வந்துள்ளன. கதைகள் அனைத்தையும் பரிசீலனை செய்து பரிசுக்குரிய கதையைத் தேர்ந்தெடுக்கும் காரியம் செவ்வனே நடைபெற்று வருகிறது. பரிசீலனை முடிந்த பின்னர் காலக் கிரமத்தில் போட்டியின் முடிவுகள் சாந்தியின் மூலம் வெளியிடப்படும் என்பதைச் சாந்தியின் வாசக நேயர்களுக்கும் போட்டியில் கலந்து கொண்ட எழுத்தாள நண்பர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆசிரியர் 'சாந்தி'

''இல்லை, நல்ல குளுந்த தண்ணியே போதும். சாமான் வாங்காமப் போயிட்டா, அது நஷ்டமாப் போயிடும்!''

''எது?''

''கூல் டிரிங்க்!'

சாதாரணமாக வியாபார நிலையத்திலே பணம் புரளும் பட்டறையிலே விளையாட்டுப் பேச்சோ, கலைத்துணுக்கோ வர நியாயம் கிடையாது. எனினும் இவ்விதம் பேசியவர் நிச்சயம் ஒரு 'கலாகாரன்' ஆகத்தான் இருக்க முடியும் என்று கருதினேன் நான்.

''நீங்கள் யாரு, ஸார்?'' என்றேன் நான்.

''ஏன்? சந்தேகமாயிருக்கா? சொந்தப் பணம் ஸார். சொந்தக் குழந்தைக்கு நகை வாங்கப் போறேன்!'' என்று கூறிவிட்டு மீண்டும் சிரித்தார் அவர்.

''இல்லை. சும்மாத்தான் கேட்டேன். சொல்ல இஷ்டமானால் சொல்லுங்கள்'' என்றேன்.

''கோபம் வந்திருச்சா? சொல்றேன். என் பேரு சோணு. விருத்தாசலம்!''

ஒரு கணம் திகைத்தேன்.

''நீங்கள் தான் புதுமைப்பித்தனா?''

''அடே! ஒரு வியாபாரிக்குக் கூட நம்ம பேரு தெரிஞ்சிருக்கே?''

''ஏன்? வியாபாரியிடம் கலையே இருக்க முடியாதா?''

''தம்பி, நீங்க யாரு?''

'' 'கவிக்குயில்' தெரியுமா? அதில் உங்கள் 'படபடப்பு' என்ற சிறு கதைகூட வெளிவந்ததே. ஞாபகம் இருக்கா?''

''ஆமா!''

''அந்தக் கவிக்குயில் எனது குழந்தை தான்!''

''நீங்கதானா அது?'' என்று வியந்து கூறிவிட்டு, ''அப்போ இந்த ஊரிலே நமக்கு ஒரு நண்பர் கிடைச்சாச்சு!'' என்று வாய்விட்டுச் சிரித்து மகிழ்ந்து கொண்டார் புதுமைப்பித்தன்.

புதுமைப்பித்தனுக்கு எனக்கும் நேர்முகப் பழக்கம் ஏற்பட்டது இப்படித்தான்! அதன் பின் நாங்கள் இருவரும் நெருங்கிய நண்பர்களானோம்.

★ ★ ★

பின்னர் நான் 'கவிக்குயில்' இரண்டாவது மலரைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தேன். புதுமைப்பித்தனுடன் ஏற்பட்ட பரிசயத்தை எனது மலருக்காகவும் பயன்படுத்திக்கொள்ள

எண்ணி, அவரை அணுகினேன். ஊரில் என் தகப்பனுருக்கிருந்த செல்வாக்கினுலும், இலக்கியத்தில் எனக்கிருந்த பற்றுதலினுலும் 'அவர் என்னிடம் ஒரு தனிப்பற்று கொண்டிருந்தார்.

கவிக்குயிலுக்காக கவிதை, கட்டுரை வாங்க எண்ணி, புதுமைப்பித்தனிடம் சென்றேன்.

விஷயத்தைக் கேள்விப் பட்டதும், ''இதுக்காகவா வந்தே? வா, கவிதை எழுத இந்த இடம் சரிப்படாது. உங்க வீட்டுக்கே போவோம்'' என்ருர் அவர்.

இருவரும் எனது வீட்டுக்கே வந்தோம். வீட்டில் புதுமைப்பித்தனுக்கு ஒரு தட்டு நிறைய முறுக்கு, ஏற்றங்காய் வற்றல், வெற்றிலை பாக்கு, புகையிலை எல்லாம் தயாராயிருந்தன. அவற்றையெல்லாம் கண்டதும் புதுமைப்பித்தன் ''ஏது? தளவாடங்கள் எல்லாம் தயாராயிருக்கே, பிரகடனம் கொடுக்கட்டுமா?'' என்று கூறிச் சிரித்தார். பிறகு ''ஏ ராசா! தேங்குழலை எடு, தின்னுக்கிட்டே கவிதை பாடுறேன். நீ எழுதிக்கிட்டு வா!'' என்று கூறினுர்.

நான் எழுத உட்கார்ந்தேன். புதுமைப்பித்தன் சொல்லச் சொல்ல, நான் எழுதிக்கொண்டே வந்தேன். அப்போது அவர் சொல்லி வந்த கட்டுரைதான் 'பாட்டும் அதன் பாதையும்' என்பதாகும்.

கட்டுரை முடிவதற்குள்ளாகவே அவர் ஒரு முறை வெற்றிலை போட்டுக்கொண்டார். பிறகு கட்டுரையைத் தொடங்க எண்ணினுர். அதற்குள் என்ன நினைத்தாரோ என்னவோ? கட்டுரையை அப்படியே நிறுத்திவிட்டு ஒரு பாட்டுச் சொல்ல முனைந்தார்.

''தம்பி. கட்டுரை நிற்கட்டும். ஒரு பாட்டு வருது. உனக்கு என்ன காவியம் வேணும்?''

''எதுவானுலும் சரி.''

''உனக்குக் காவியம் தாரதானு அது பெரிசா இருக்கணும். பிரமாதமா இருக்கணும். ஆமா. பேரை இப்படி வச்சிரு. 'மாகாவியம்' '' என்ருர்.

'' 'மாகாவியம்' '' என்று நானும் திரும்பச் சொல்லிக்கொண்டேன்.

''சரி. வேளூர். வெ. கந்தசாமிக் கவிராயர் பாடுகிருர். எழுதிக்கோ'' என்ருர்.

''காளான் குடை நிழலில்
கரப்பான் அரசிருக்க''

என்று தொடங்கினுர். பாட்டு


# சாந்தி
## சந்தா விபரம்

| | |
|---|---|
| தனிப் பிரதி | ரூ. 0-4-0 |
| ஆண்டுச் சந்தா | ரூ. 3-0-0 |
| (இந்தியா இலங்கை உள்பட) | |
| வெளிநாடு | ரூ. 4-0-0 |

**ஆறுமாதச்சந்தா கிடையாது.**
இலங்கை நேயர்கள் வி. பி. பி. மூலம் சந்தாதாரர்கள் ஆகலாம்.

விபரங்களுக்கு:
**''சாந்தி''**
81, ஹைரோடு,
**திருநெல்வேலி ஜங்ஷன்.**

இத்தனைக்கும் மேலே
இனி ஒன்று:
ஐயா, நான்
செத்ததற்குப் பின்னால்
நிதிகள் திரட்டாதீர்!
நினைவை விளிம்பு கட்டிக்
கல்லில் வடித்து
வையாதீர்!
வானத்து அமரன்
வந்தான் காண்! வந்தது போல்
போனான் காண் என்று
புலம்பாதீர்!

—புதுமைப்பித்தன் (ஓடாதீர்)

விறு விறு வென்று சென்றது. பிறகு இடையில் தடைப்பட்டு நின்றது.

புதுமைப்பித்தன் மீண்டும் சொன்னார். "சரி, ராசா பாட்டு ஸ்டாக் தீர்ந்து போச்சு. கட்டுரையை எடு!"

அந்தப் பாட்டும் (மாகாவியம்) கட்டுரையும் (பாட்டும் அதன் பாதையும்)தான் நான் வெளியிட்ட கவிக்குயில் இரண்டாவது மலரில் வெளிவந்தன.

★ ★ ★

தான் செய்தது தவறு எனத் தெரிந்தவுடன் அவர் தவறுக்காக எவ்வளவு வேதனைப் படுகிறார் என்பதை நான் அன்றுதான் கண்டேன்.

இலக்கிய மேதை என்பதால் ஏற்பட்ட அத்தியந்த மரியாதையால் மனம் விட்டுப் பழகினேன். அதனால் உருவான நெருங்கிய அன்பால் அவர் பல தடவை என்னை அதிகாரமே செய்வது உண்டு. அதை நானும் பெரும் பேறாகவே கருதிவந்தேன்.

"டே ராசா! மழை சிணுங்குகிறது. மப்பும் மந்தாரமும் இருக்கிறது. எனக்கு நடக்க இஷ்டமில்லை. சோம்பேறித்தனம். உடனே என்னை வந்து பார்!" என்று குறிப்பு அனுப்புவார்.

சில சமயங்களில் "தேவைக்கு உதவாத நீயும் தமிழனா?" என்று இரைந்து கேட்பார்.

"பார், ராசா! கோவம் வந்தா, நொறுக்கிப் பிடுவேன் நொறுக்கி!" என்று சொல்வதும் உண்டு.

இவையெல்லாம் அன்பு தோய்ந்த அஸ்திரங்கள் என்பதை அறிவேன். அவற்றில் வேகம் இருக்காது; தைக்காது.

ஆயினும் ஒரு நாள்—

ஏதோ ஒரு கடிதம் கொடுத்து அனுப்பினார். 'இன்னின்ன செய்' என்ற குறிப்புகளும் அதில் இருந்தன. வேறு சில காரணங்களால் மனம் நொடித்து நானிருந்த சமயம் அது. கடிதத்தை அவ்வளவாக ரசிக்க முடியவில்லை. ஓரளவு கோபம் வந்தது. பதிலளிக்கவில்லை. போய்ப்பார்க்கவும் இல்லை.

மீண்டும் ஒரு குறிப்பு வந்தது.

"ராசா! உனக்குக் கோபம் வந்திருக்குமோ எனச் சந்தேகம். கோபப்படாதே. இந்த ஊரிலே எனக்கென்று நீதானே இருக்கிறாய். நீயும் கோபித்துக் கொண்டால்-?வா, வந்து பார்."

அதற்கும் நான் பதில் கொடுக்கவில்லை. சில மணி நேரம் கழிந்தது. மழை சிணுங்கிக் கொண்டிருந்தது. அந்தச் சாரலையும் பொருட்படுத்தாமல் கையில்

குடையுமில்லாமல் அவர் என்னைத் தேடி வந்து விட்டார்.

'டே, ராசா! நீ தமிழன் தாண்டா, கோபப்பட்டாலும் கடைசிவரை தோற்கமாட்டேன் என்கிறுயே. வா, எங்காவது போய்ப் பேசுவோம். வாடா ராசா!'' என்று கொஞ்சுவது போலப் பேசினுர் அவர்.

மீண்டும் நான் பேசாதிருப்பதைக்கண்டு, ''டே, வெத்திலை கூடப் போடாமல் வந்து விட்டேண்டா! எவ்வளவு ஆவேசமாய் வந்திருக்கேன் பாரு!'' என்ருர்.

பிறகு நானும் அவரும் கடற்கரைக்குப் போனதுமே அவர் என் கைகளைப் பிடித்துக் கொண்டு, ''ராசா. நீ கோபப்படலாமா? தப்புத்தாண்டா. தப்பு செஞ்சா, ஏண்டா ஏசாமல் கப்சிப்பின்னு இருந்திட்டே? ஏசக்கூடத்தெம்பு இல்லையடா! மன்னுச்சுக்கோடா!'' என்றெல்லாம் தன் தவற்றை உணர்ந்து பேசத் தொடங்கினுர்.

அப்போது அந்த இலக்கிய மேதையின் முன்னுல் என்னுல் இரண்டு துளி கண்ணீரைத் தான் உகுக்க முடிந்தது.

* * *

**பு**துமைப்பித்தன் ஏசும் போதும் மனப்பூர்வமாக ஏசுவார்; அன்பு காட்டும் போதும் அணைக்காதவாறு அணைத்துப் பேசவும் செய்வார். எவ்வுணர்ச்சிக்கு எப்போது வசப்படுகிருரோ, அப்போது அந்த உணர்ச்சி ஒன்றே அவராக மாறிவிடும். அவர் நிலைமையே இதனைத்தான்

> ''கடையில் பிஸ்கோத்து வாங்குவது போலவோ கவர்மெண்ட் அதிகாரம் செய்வது போலவோ கவிராயருக்கு 'ஆர்டர்' கொடுக்க முடியாது. அவன் பிறப்பது பாஷையின் அதிருஷ்டம்''
>
> —புதுமைப்பித்தன்
>
> ''நமது இலக்கியம்''

அடிப்படையாக்கி நின்றது என்று நான் கருதுகிறேன்.

ஒருமுறை—

அவர் எங்கள் கடைக்கு வந்திருந்தார். ஏகப்பட்ட கூட்டம். ஆணும் பெண்ணுமாகக் குழுமியிருந்தனர்.

''டே. சிதம்பரம்!'' என்று கூப்பிட்டார். புதுமைப்பித்தன் தான். கூட்டமானுல் என்ன? ஜோலியானுல் என்ன? அவருக்கு அவர் நோக்கமே பிரதானம்.

''சிதம்பரம். வா. வெளியே போவோம். சும்மா வியாபாரமா? லாபத்தைக் கொஞ்சமா எடு. இன்னைக்கு இவ்வளவு போதும், வா. போகலாம்'' என்ருர். அத்துடன் நிற்கவில்லை. கடையிலிருந்த எனது சகாவைப் பார்த்து ''வே, கணக்கப்பிள்ளை! உம்ம முதலாளியைக் கொத்திக்கிட்டுப் போருனே இவன் என்று ஏசாதேயும். இப்போ சிதம்பரம் எனக்கு வேணும். வேறெ ஒருத்தருக்கும் அவன் இப்போ சொந்தமில்லை. அவனை அனுப்பும். நீர் வியாபாரத்தைக் கவனியும்!'' என்றும் கூறத் தொடங்கி விட்டார்.

பிறகு நானும் அவரும் புறப்பட்டுச் சென்ருேம். அவர் கூப்பிட்ட அவசரத்துக்குக்காணுது. சும்மா பேசிக்கொண்டிருப்பதற்

**பாரதியின் மூத்தபிள்ளை**

''பாரதி பரம்பரையிலே வசனத்தின் மூத்த பிள்ளையாக வந்தவர் புதுமைப்பித்தன்.

—எஸ். எஸ். மாரிசாமி

குத்தான் என்னை அழைத்துப் போக வந்திருந்தார். அவருடைய வீட்டுக்குச் சென்றதும் நானும் அவரும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தோம். அதற்குள் அவருக்குப் பேச்சும் சலித்துப் போய் விட்டது.

''தம்பி. எனக்குத் தூக்கம் வருது. நான் தூங்கப் போறேன். நீயும் தூங்கிறியா? இல்லேன்னு, போ. சாயந்திரமா வா!'' என்ருர்.

நான் புறப்பட்டேன். இது என்ன குணவிசித்திரம் என்று அதிசயித்தேன். போவது வரையிலும் நான் அவருடன் போவது மட்டுமே அவருக்குக் குறி. ஆனுல் அதன் பிறகோ தூக்கமே அவருக்குக் குறியாகி விட்டது. நான் எவ்வளவு பெரிய கடமையை விட்டு வந்தேன் என்பதல்ல அவர் சிந்தனை. தமது சிந்தனை போகும் வழியொன்றே அவர் சரியென்று சொல்வதும் செய்வதும் என்றே எனக்குப்பட்டது. இது அவரது குறையா? அல்லது மேதாவிகளின் குண விசித்திரங்களில் ஒன்றுதானு? அது எனக்குத் தெரியாது.

★ ★ ★

**அந்திம காலத்தில்...**

டி. பி. க்கு இரையாகி, மரணப் படுக்கையில் படுத்துக் கிடந்த புதுமைப்பித்தனிடமிருந்து எனக்கு ஒரு குறிப்பு வந்தது:

''ஒளி அணைந்து வருகிறது. நீ வந்தால் ஒரு வேளை தூண்டி விடுவாய். கொஞ்ச நேரமாவது வெளிச்சமாக இருக்கும். வா.''

இந்தக் கடிதம் என் நெஞ்சை என்னவோ செய்தது. அவசரமாக ஓடினேன். புதுமைப்பித்தன் படுக்கையில் மூடிப் புதைத்துக் கொண்டு படுத்திருந்தார். என்னைக் கண்டதும், ''வாடா, ராசா! தமிழுலக இலக்கிய மேதை கிடக்கிற கிடையைப் பார்த்தியா?'' என்ருர்.

நான் ஒன்றுமே சொல்லாமல் நின்றேன்.

''எத்தனையோ பேர் செத்தவங்களுக்குக் கோபுரம் கட்டருங்க பாரு. ஒத்தனுவது சாகிறவனுக்கு ஒத்தாசை பண்ண வாரானுகளா? ராசா. நீயாவது என் பக்கத்திலே இருக்கியே! செய்யணும்கிறதைச் சாகிறதுக்கு முன்னுலேயே செஞ்சுப்பிடு'' என்ருர் அவர். பிறகு இருமல். இருமலால் அவரது உடல் முழுவதும் பஞ்சாகப் பதறியது. பக்கத்திலிருந்த 'பேசினி'ல் காறி யுமிழ்ந்தார். எச்சிலில் குங்கும ரேகை போன்ற குருதியின் வரி வடிவம் தோன்றியது. நான் ஒன்றுமே சொல்ல முடியாமல் வாயடைத்து நின்றேன்.

''ராசா, நான் செத்துப் போனுல் நீ என்ன செய்வே? என்ன செய்ய முடியும்? ஒரு கட்டுரை எழுதுவாய். புதுமைப்பித்தனின் அந்திம நாட்களில் உடனிருந்தவன் நான் என உனக்கு விளம்பரம் செய்து கொள்ளலாம்...''

அவர் மீண்டும் இருமினுர்

"ராசா. நான் உயிரோடிருக்கும்போதே உன்னைத் தமிழுலகு அறிய வேணும், தெரிய வைக்கணும் என விரும்பினேன். சமயம் போதாது. முடிவு நெருங்கிவிட்டது!" என்று மேலும் சொன்னார்.

பிறகு மீண்டும் இருமல். எனினும் பேச்சு மட்டும் நிற்கவில்லை.

"மணியார்டர் வந்தால் எவ்வளவு சந்தோஷமாயிருக்கும்? நான் இப்போ மணியார்டரைத்தான் எதிர்பார்த்துக்கிட்டிருக்கேன். தெரியவில்லையா? சாவைத்தானப்பா நான் மணியார்டரை எதிர்பார்ப்பது போல எதிர்பார்த்திருக்கேன்" என்றார்.

பின்னர் அவர் தமது பாட்டரி லைட்டை என்னிடம் கொடுத்து அதற்குப் பாட்டரி போட்டுக் கொண்டு வரச் சொன்னார். அப்போதும் புதுமைப்பித்தனின் அறிவும் ஆசையும் மங்கி விடவில்லை.

பாட்டரியைத் தூக்கி என் கையில் கொடுத்து விட்டு, "எழுத்தாளனுக்கே ஒளி பேரில்தான் ஆசை போலிருக்கு. நான் போகிற பாதையெல்லாம் வெளிச்சமாக்க விரும்பினேன். இப்போ இருட்டிலே நடக்க ஒளியை விரும்புகிறேன்..." என்று கூறிப் பெருமூச்செறிந்தார்.

"சரி, பாட்டரி போட்டுக் காலையில் அனுப்புகிறேன்" என்று கூறி விடை பெற்றுக் கொண்டு வந்தேன்.

ஆனால் மறுநாள் காலையில் அவருடைய வீட்டுக்குப் போவதற்கு முன்பே என்னைத் தேடி 'ஓலை' வந்து விட்டது! புதுமைப்

"பெரிய மீன் சின்ன மீனைத் தின்னலாம், ஆனால் சின்ன மீன் அதற்கும் சின்ன மீனைத் தின்றால் பெரிய மீன் 'குற்றம் செய்கிறாய்!' என்று சண்டிக்க வருகிறது. இது தான் சமூகம்!"

**புதுமைப்பித்தன் (வாழ்க்கை)**

பித்தன் இறந்து போனார்! செய்தியைக் கேட்டதும், வேண்டியவர்களுக்கெல்லாம் தந்தியனுப்பிவிட்டு, அவருடைய வீட்டுக்குச் சென்றேன் நான்.

குளிப்பாட்டி மணவடையில் படுக்க வைத்திருந்த புதுமைப்பித்தனின் சடலத்தின் காலருகேயே நின்றேன். உலகையே மறந்து புதுமைப்பித்தனின் மனைவி கமலா விருத்தாசலம் கதறிய சோகக் குரல் பயங்கரமாக இருந்தது. ஒன்றுமே யறியாத அவரது இரண்டு வயதுக் குழந்தையான தினகரி ஏனோ தேம்பித் தேம்பி அழுதாள். நான் அவளை என்னருகே இழுத்து அணைத்துக்கொண்டேன்......

நான் கொடுத்த அரைஞாணும், காப்பும், பிற நகைகளும் தினகரிக்குத்தான். எனினும் அதிலிருந்த தொடர்ந்த கதை இந்த முடிவுக்கா வரவேண்டும்?...

யாரையுமே அலட்சியம் செய்யாத அந்த அலட்சியச் சிரிப்பு அந்த சடலத்தின் உதட்டினிலே தவழ்வது போல ஒரு உணர்ச்சி.

இரு துளி கண்ணீர். அதுதான் என் கடமை. பார்த்தவாறே நிற்பதைத் தவிர, நான் வேறு என்ன செய்ய முடியும்? ★

எழுத்தாளருக்கு எழுத்தாளராக விளங்கியவர் புதுமைப்பித்தன். புதுமைப்பித்தனின் எழுத்தினால் பல எழுத்தாளர்கள் தோன்றினார்கள் என்று சொல்வதுண்டு. புதுமைப்பித்தனின் இலக்கிய சிருஷ்டிகளின் ஆதர்சத்தால் தோன்றிய சில எழுத்தாளர்களில் கட்டுரை ஆசிரியர் கு. அழகிரிசாமியும் குறிப்பிடத்தக்கவர். சிறந்த சிறு கதைகள், கவிதைகள் முதலியன பலவும் எழுதியுள்ள இவர் இன்று மலேயா கோலாலம்பூரிலிருந்து வெளிவரும் 'தமிழ் நேசன்' என்ற பத்திரிகையின் சஞ்சிகை ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். புதுமைப்பித்தனின் அன்புக்கும் ஆதரவுக்கும் பாத்திரர்களான ஒரு சில தமிழ் எழுத்தாளர்களில் ஒருவரான அழகிரிசாமி இங்கு புதுமைப்பித்தனைப் பற்றிய சில ரசமான நினைவுகளைத் தருகிறார்.

# புதுமைப்பித்தனும், இளம் எழுத்தாளரும்

●

கு. அழகிரிசாமி

●

தமிழ் நாட்டு எழுத்தாளர்களில் புதுமைப்பித்தனுடன் குறைந்த காலப்பழக்கம் உடையவன் நான். பல எழுத்தாளர்கள் அவருடன் வருஷக் கணக்கில் என்னை விடப் பன்மடங்கு அத்தியந்தமாக நெருங்கிப் பழகியிருக்கிறார்கள். நான் அதிகமாகப் போனால் ஆறுமாதந்தான் பழகியிருப்பேன்.

1946-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் என் நண்பர் ரகுநாதன் என்னைப் புதுமைப்பித்தனிடம் அழைத்துச்சென்று அறிமுகப் படுத்தி வைத்தார். அன்றிலிருந்து ஜூன் மாதம் வரையிலும் நண்பர் ரகுநாதனுடன் நான் வாரத்துக்கு மூன்று நாட்களாவது தவறாமல் அவருடைய வீட்டுக்குப் போய் வருவேன். ஜூலையில் நான் என் சொந்தக் கிராமத்துக்குப் போய்விட்டு எட்டு மாதங்களுக்குப் பிறகு சென்னைக்கு வந்தேன். அதற்கு இரண்டொரு மாதங்களுக்குப் பிறகு 'ராஜமுக்தி' படத்துக்கு வசனம் எழுத அவர் புனாவுக்குப் போய்விட்டார். அதன் பின் நான் அவரைச் சந்திக்கவே இல்லை.

ஆறேழு மாதகாலமே பழகியிருந்த போதிலும் என்னை ஒரு நெருங்கிய நண்பனாய்ப் பாவித்தேபழகினார். அவருடைய அறிமுகம் கிடைத்த தினத்தன்றே நண்பனாக என்னை ஏற்றுக்கொண்டு விட்டார். அந்தச் சந்தோஷ நாளில் நிகழ்ந்த ஒவ்வொரு சிறுநிகழ்ச்சியும் எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது.

> "புது உலகத்தைச் சிருஷ்டிப் பவனை இன்று உடலை அறுத்து விடலாம். அவன் பிரம்மா! அவனை அழிக்க முடியுமா?"
>
> **புதுமைப்பித்தன் (பறிமுதல்)**

காலை சுமார் பத்துமணியிருக்கும். நண்பர் ரகுநாதனும் நானும் மாம்பலத்திலிருந்து ராயப்பேட்டையிலுள்ள புதுமைப்பித்தன் இல்லத்துக்குச் சென்றோம். அப்பொழுது அவர் மட்டுமே தனியாக அங்கு வசித்து வந்தார். அவருடைய மனைவியார் பிரசவத்திற்காகத் திருவனந்தபுரத்திலுள்ள தம் தாய்வீட்டுக்குச் சென்றிருந்தார்கள். என்னை ரகுநாதன் அறிமுகம் செய்து வைத்தபிறகு, புதுமைப்பித்தன் சொன்னார்: "ஏற்கனவே உங்களைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். ரகு வந்து சொல்வான்: நம் ஆள் ஒருவர் மாம்பலத்தில் இருக்கிறார் என்று."

சிறிது நேரத்திற் கெல்லாம் தமிழ்ப் பேரறிஞர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் வீட்டுக்குப் புறப்பட்டோம். வெற்றிலை, சீவல், புகையிலை இவற்றை ஒரு பெரிய பொட்டலமாகக் கட்டி எடுத்துக்கொண்டார். போகும் வழியில் அவர் சொன்ன ஒரு சமாசாரத்தை இன்று நினைத்தாலும் சிரிக்காமல் இருக்கமுடியவில்லை. எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் திருவள்ளுவரின் நூல் ஆராய்ச்சி குறித்து எழுதிய ஒரு கட்டுரை அந்தச் சமயத்தில் மதுரை 'செந்தமிழ்' பத்திரிகையில் வெளிவந்திருந்தது. அதில் திருவள்ளுவர் காலம் இன்னது என்று அத்தமிழ்ப் பேரறிஞர்வரையறுத்திருந்தார். இதைப் படித்த என் தமிழ்ப் பண்டித நண்பர், "இந்த வையாபுரிப் பிள்ளை எப்பொழுதும் இப்படியேதான் அநியாயம் பண்ணிக் கொண்டிருக்கிறார்! பழந்தமிழ்ப் புலவர்களின் காலத்தையெல்லாம் பிற்பட்ட காலமாகவே குறிப்பிடுகிறார். இது வம்புக் காரியமே ஒழிய நியாயமான ஆராய்ச்சியில்லை" என்று கோபத்துடன் சொன்னார்.

நான் அந்தக் கட்டுரையை அப்பொழுது படிக்கவில்லை. ஆனாலும் அவருடைய மற்றக் கட்டுரைகளைப் படித்திருக்கிறேன். வையாபுரிப் பிள்ளையவர்கள் ஆராய்ச்சிதான் காய்தல் உவத்தல் இல்லாத நடுநிலைமையான ஆராய்ச்சி என்பது என் தீர்மானமான கருத்து. அதனால் என் நண்பரைப் பார்த்து "வையாபுரிப் பிள்ளையவர்களின் ஆராய்ச்சி தப்பு என்று தக்க ஆதாரத்துடன் நிரூபித்து நீங்கள் ஒரு மறுப்பு எழுதிக் கொடுங்கள், அல்லது எந்தப் படிப்பாளியையாவது விட்டு எழுதச் சொல்லுங்கள். அதை என் பத்திரிகையில் பிரசுரிக்கிறேன்" என்றேன். என் நண்பர் அந்தக் காரியத்தைச் செய்யவில்லை. இன்று வரையிலும் அவர் மறுப்பு எழுதவில்லை. அவர் மட்டுமல்லாமல் எந்த ஒரு ஆராய்ச்சியாளரும் தக்க காரணங்களைக் காட்டி வையாபுரிப் பிள்ளையவர்களின் ஆராய்ச்சி தவறு என்று நிரூபிக்கவும் இல்லை.

இந்த விஷயத்தைப் புதுமைப்பித்தனிடம் தெரிவித்தேன்: "நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பழைய தமிழ் இலக்கியங்களை மற்றவர்கள் மிகப் பழங்காலத்தைச் சேர்ந்தனவாகச் சொல்லியிருக்க, இவர் பிற்காலத்தைச் சேர்ந்தன என்று சொல்கிறார். பண்டித நண்பர்கள் இதைக் கண்டு கோபப் படுகிறார்கள்.''

''நம்மவர்களுக்கு நம் இலக்கியங்கள் பல்லாயிரம் வருஷங்களுக்கு முந்தினவை என்று சொல்லிக் கொள்வதில் ஒரு பெருமை. டார்வினின் பரிணாம தத்துவப்படி தோன்றிய முதல் குரங்கு தமிழ்க் குரங்கு என்றால்தான் நம்மளவனுக்குத் திருப்தி!'' என்றார் புதுமைப்பித்தன். அப்புறம், வையாபுரிப் பிள்ளையவர்களின் நடு நிலைமை பிறழாத ஆராய்ச்சியைப் பற்றி பலவாறாகப் பாராட்டிக் கூறினார்.

வையாபுரிப் பிள்ளையவர்களுடைய வீட்டில் சுமார் இரண்டு மணி நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு, மாலையில் புரசைவாக்கத்திலுள்ள ஒரு நண்பர் வீட்டுக்குப்போய் இரவில் அங்கேயே தங்கினோம். அன்று முழுவதும் இலக்கிய சர்ச்சையிலேயே பொழுது கழிந்தது. விடிந்த பிறகு அவரிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டேன். அப்பொழுது ரகுநாதனைப் பார்த்து, ''சதா இங்கு வரும்போதெல்லாம் இவரை அழைத்துவர மறந்து விடாதே'' என்று சொல்லியனுப்பினார். அறிமுகமான தினத்திலேயே இவ்வளவு நெருக்கமானவர்களாக மாறியதை எண்ணி என் மனம் சந்தோஷப்பட்டது.

★ ★ ★

**பி**ற்காலத்தில் நல்ல எழுத்தாளர்களாகத் தலையெடுப்பார்கள் என்ற நம்பிக்கையை அளிக்கும் எழுத்தாளர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிப்பதில் புதுமைப்பித்தன் பெரிதும் விருப்பம் கொண்டவர். அப்படிப்பட்ட ஆரம்ப எழுத்தாளர்கள் வயதில் சிறியவர்களானாலும், தமக்குச் சமதையான அந்தஸ்துகொடுத்துப் பழகுவார் புதுமைப்பித்தன். ''தனக்குக் கீழே இருப்பவனைத் தனக்குச் சமானமானவனாகக்கருதாதவன் ஒரு மனிதனா?'' என்று அவர் அடிக்கடி சொல்லிக்கொள்ளுவார். புதுமைப்பித்தனைப் பொறுத்தமட்டிலும் நண்பர் ரகுநாதன், நான், எங்களைப் போன்ற பலர் 1946-ல் ஆரம்ப எழுத்தாளர்கள் மாதிரிதான். ஆனால் எங்களிடம் அவர் வாத்தியார் மாதிரி பழகாமல் நண்பனைப்போலவே பழகினார். என்னைப் புதுமைப்பித்தனுக்கு அறிமுகப் படுத்தி எங்களிடையே நட்பை உண்டாக்கியவர் நண்பர் ரகுநாதன். ஆனால் அதற்கு ஒரு வருஷத்துக்கு முன் என்னை அவருக்கு அறிமுகப் படுத்த முயன்றவர் வேறொருவர். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் பிறந்த நாள் சென்னையில் முதன் முதலாக சக்தி காரியாலயத்தில் கொண்டாடப் பட்டது. அந்த வைபவத்துக்கு நான் போயிருந்தேன். புதுமைப்பித்தனும் வந்திருந்தார். அப்போது அவருக்கு என்னை அறிமுகப் படுத்த விரும்பியவர்

> ''வறுமை முதலாளித்துவத்தின் விலக்க முடியாத நியதி; வியாதியும் கூட.''
>
> —புதுமைப்பித்தன்
> (பக்த குசேலா)

> "ஒளி வராமல் போய் விடுமா? அதுவரை காத்திருக்க வேண்டியதுதான். எத்தனை காலமோ? ஒளி வரும்பொழுது நான் இருக்க வேண்டும் என்ற அவசியம் உண்டா? என் சிருஷ்டிகள் இருந்தால் போதும்."
>
> — புதுமைப்பித்தன் (கடிதம்)

என்னைப் பக்கத்தில் அழைத்து புதுமைப்பித்தனிடம் பின்வருமாறு சொன்னார்: "இவர் உங்கள் சிஷ்யர். உங்கள் எழுத்துக்களில் அபாரப் பிரேமை உடையவர். உங்களைப் பார்க்கவேண்டுமென்றும் ஆவலோடு இருந்தார்..."

உடனே புதுமைப்பித்தன் இடைமறித்து "சிஷ்யன் என்று சொல்லாதீர்கள். சிஷ்யன் என்றால் மேல் வீடு காலி என்று அர்த்தம். 'நண்பர்' என்று சொல்லுங்கள்" என்று சிரித்துக்கொண்டே சொன்னார். வயதிலும் அறிவிலும் சிறியவர்களாக இருந்தாலும் அவர்களை அவர் தமக்குச் சமதையானவர்களாகக் கருதுவதற்கு இந்தச் சம்பவம் ஒரு உதாரணம்.

★ ★ ★

புதுமைப்பித்தன் எந்தத் தமிழ்ப் பத்திரிகையையும் படிக்க மாட்டார். வீட்டுக்கு அன்பளிப்பாக வரும் பத்திரிகைகள் பிரிக்கப்படாமல் அப்படியே கிடக்கும். இப்படிப்பட்டவர் 1946-க்கு முன் சுமார் ஐந்து வருஷ காலமாக வெளிவந்த என் கதைகளிலோ கவிதைகளிலோ ஒன்றைக்கூடப் படித்திருக்க முடியாது. ஆகவே என்னுடைய இலக்கிய ஞானத்தை என் வாய்மொழியைக்கொண்டுதான் அவர் கண்டு கொள்ள முடிந்ததே தவிர, என் எழுத்துக்களினால் அல்ல. இந்தச் சந்தர்ப்பத்தில் சிவபெருமான், நக்கீரன் தகராறை அடிப்படையாகக் கொண்டு நான் ஒரு சிறுகதை எழுதி வைத்திருந்தேன். அதை ஒரு நாள் இரவு என் நண்பர் ரகுநாதனிடம் சொன்னேன். கதை முழுவதையும் கவனித்துக் கேட்டார். அதைப் பெரிதும் பாராட்டினார். "கதைக்கு என்ன பெயர்?" என்று கேட்டார் ரகுநாதன். "இன்னும் பெயர் வைக்கவில்லை" என்று நான் தெரிவித்ததும், "வெந்தழலால் வேகாது! என்று பெயர் வையுங்கள்" என்றார். அதுவே எனக்கும் பொருத்தமாகத் தோன்றியது. அப்படியே பெயரிட்டேன். இரண்டொரு தினங்களுக்குப் பிறகு இந்தக் கதையைப் புதுமைப்பித்தனிடம் ரகுநாதன் சொல்லியிருக்கிறார். உடனே அவர் அந்தக் கதையைக் கொண்டு வரும்படி அவரிடம் கூறினார். என்னிடமும் கூறினார். கதையைச் சுத்தமாகப் பிரதி செய்து கொண்டுபோய்க் கொடுத்தேன். புதுமைப்பித்தன் வாசித்த எனது முதல் கதை இதுதான் என்று நினைக்கிறேன். கதையைப் படித்து முடித்துவிட்டு அவர் என்னிடம் சொன்னதாவது: "நீங்கள் நம் ஆள். நம் வழியில் கதை எழுதுகிறவர்கள். பழந்தமிழ் இலக்கியங்களில் நமக்குப் பயிற்சி இருப்பதனால்தான் இப்படிப்பட்ட கதைகளை உயிராற்றல்துள்ளும்படியாக நம்மால் எழுத முடிகிறது. இந்தக் கதையைக் 'கலைமகள்'ளில் கொண்டுபோய்க்

கொடுக்கிறேன். இனிமேல் நீங்கள் எது எழுதினுலும் என் மூலமாகவே அச்சுக்குப் போக வேண்டும். நல்ல பத்திரிகைகளில் நல்ல முறையில் அவை வெளிவர வேண்டும். கண்ட கண்ட இடங்களில் கதைகளைக் கொடுத்துப் பாழாக்கி விடக் கூடாது'' என்ருர். அடுத்த மாதத்தில் அந்தக் கதை 'கலைமக'ளில் வெளிவந்தது.

★ ★ ★

**அ**தற்குச் சில மாதங்களுக்குப்பின் நான் எழுதிய 'ஏய்த்துவிட்டார்!'என்றகவிதை நண்பர் ரகுநாதன் ஆசிரியராக இருந்த 'முல்லை' பத்திரிகையில் வெளிவந்தது. அது அச்சேறுவதற்கு முன் புதுமைப்பித்தன் அதை வாசித்து மிகவும் பாராட்டியதாக ரகுநாதன் எனக்குத் தெரிவித்தார்.அந்தக்கவிதையில் பின்வருமாறு ஒரு பாட்டு.

தனியானேன்; இந்தத்
தாரணியில் வந்ததற்கு
எனது செயல் என்றிடுவீர்!
யாது செய்தேன்? ஆராரோ
மனசு வக்க நான் நடந்து
பொய்யாய்மன மகிழ்ந்தேன்!
அநியாயமாய், விழலாய்
—வாழ்வும்
அவமே கழிந்ததடா!

இந்தப் பாட்டின் மூன்ருவது அடியை 'மனசுவக்க நான் பிறந்தேன்; மனசுவக்க நான் நடந்தேன்' என்று திருத்திஞர் புதுமைப்பித்தன். இந்தத் திருத்தத்துடனேயே கவிதை வெளிவந்தது.

என் விஷயம் இப்படி. நண்பர் ரகுநாதனிடத்தில் அவருக்கிருந்த அன்பும் உரிமையும் அளவிட முடியாதவை. ஒரு முறை ரகுநாதன் எழுதிய 'கி. பி.' என்ற கதையின்

> ''நல்ல இலக்கிய மென்ருல் எத்தனை நந்திகள் வழி மறித்துப் படுத்துக்கொண்டாலும் அவை உரிய ஸ்தானத்தை அடைந்தே தீரும்.''
>
> — புதுமைப்பித்தன்

கையெழுத்துப் பிரதியை வாங்கிப் படித்து விட்டு, மிகமிகப் புகழ்ந்து, ''ரகுநாதா! நான் என்னையே உன்னிடம் காண்கிறேன்!'' என்று ஆங்கிலத்தில் வியந்து பாராட்டினுர்.

இவ்வளவையும் நான் எழுதுவது என்னையோ ரகுநாதனையோ விளம்பரப் படுத்துவதற்காக அல்ல. புதுமைப்பித்தனின் பாராட்டினுல் மட்டும் எங்கள் எழுத்துக்கள் உயிர் வாழ முடியாது என்று எங்களுக்குத் தெரியும். எங்கள் எழுத்துக்களுக்குஆற்றல்இல்லையென்ருல் அவற்றை ஆயிரம் புதுமைப் பித்தன்கள் முயன்ருலும் இலக்கியமாக்கிவிட முடியாது. அப்படியிருக்க 'அவர் அப்படிப் பாராட்டினுர்' என்று நான் எழுதுவதன் நோக்கம் வயதிலும் அறிவிலும் அனுபவத்திலும் குறைந்த எழுத்தாளர்களை அவர் எப்படியெல்லாம் கௌரவம் கொடுத்து நடத்திஞர், எப்படியெல்லாம் தமக்குச் சமதையான நண்பர்களாகக் கருதினுர் என்பதைக் காட்டுவதற்காகவே. நான் கூறியுள்ள நிகழ்ச்சிகள் அனைத்தும் புதுமைப்பித்தனுக்குப் பெருமையளிப்பவை.

★ ★ ★

**அ**வர் 'சோதனை' என்று ஒரு பத்திரிகை நடத்த விருப்பம் கொண்டிருந்தார்–மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வெளி வரும் பத்திரிகையாக.அதில் ஒரு முழு

நீள நாவல் வெளிவரவேண்டும் என்பது அவர் விருப்பம். அந்தப் பத்திரிகைக்கு ரகுநாதனையும் என்னையும் உதவியாசிரியர்களாக நியமித்து விட்டார்! மேலும் அந்தப் பத்திரிகையில் வெளிவரும் சிறுகதை ஒன்றுக்கு நூறு ரூபாய் அன்பளிப்பு கொடுக்க வேண்டும் எனவும் சொன்னார். கடைசியில் 'சோதனை' வெறுங்கனவாகவே போய்விட்டது. அதை ஆரம்பித்திருந்தாலும் வெற்றிகரமாக நடந்திருக்குமா என்பது குறித்து இப்போது ஒன்றும் நிச்சயமாகக் கூறுவதற்கில்லை.

புதுமைப் பித்தன் அப்புறம் சினிமாத் துறையில் பரிபூரணமாக இறங்கி விட்டார். அவருடைய கவனமெல்லாம் அங்கே திரும்பிவிட்டது. இன்று அவர் இருந்தால் எங்களுக்கு எவ்வளவோ ஆதரவாக இருந்திருக்கும் என்று நான் அடிக்கடி நினைத்துக்கொள்வதுண்டு. ★

○

## புத்தகம் எரிந்தால்!

நவயுகப் பிரசுராலயத்தில் புதுமைப்பித்தனின் நூல் ஒன்று அச்சாகி, பாரங்கள் ஒரு புறத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அந்த அடுக்கின் மீது ஏறி உட்கார்ந்துகொண்டு சிகரெட் பிடித்தார் புதுமைப்பித்தன். ஞாபக மறதியாக சிகரெட் கட்டையை அடுக்கின்மீதே போட்டு விட்டார். சிறிது நேரத்தில் புகை கிளம்பி, பாரங்கள் தீப்பிடித்து விட்டன. உடனே பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி வந்து தீயை அணைத்து விட்டனர். புதுமைப் பித்தன் மட்டும் சும்மா அசையாது இருந்தார்.

"அட, என்ன மனுஷனையா நீர்? உம்முடைய புத்தகம் எரியுது. சும்மா இருக்கிறீரே!" என்று சத்தமிட்டார் பக்கத்திலிருந்த காரைக்குடி சா. கணேசன்.

"எரிகிற நெருப்பை என் அணைக்க வேண்டும்? சாம்பல் குவியல் எத்தனையோ தத்துவங்களைத் தந்திருக்கும். அதெல்லாம் இப்போ நஷ்டமாப் போச்சு!" என்று சாவதானமாகப் பதில் கூறினார் புதுமைப்பித்தன்!

(புதுமைப்பித்தன் வரலாறு)

## சங்கப் பலகை

புதுமைப்பித்தன் வீட்டுக்குச் சில எழுத்தாள நண்பர்கள் சென்றார்கள். புதுமைப்பித்தன் தரையில் கிழிந்து போன பாயில் உட்கார்ந்திருந்தார். வந்தவர்களை வரவேற்று உட்கார வைப்பதற்காகக் கிழிந்து போயிருந்த இன்னொரு பாயை இழுத்து ஒட்டுப்போட்டு விரித்து, "உட்காருங்கள். இதுதான் எழுத்தாளரின் சங்கப் பலகை! சும்மா உட்காருங்கள்!" என்று கிழிந்த பாயைச் சுட்டிக் காட்டினார் புதுமைப்பித்தன்!

(புதுமைப்பித்தன் வரலாறு)

# பித்தன்

○

'தமிழ் ஒளி'

○

'பித்தன்' எனத்தன்
பெயர்சூடி வந்த
பெரியனை நீரறி வீரோ?
அத்தன் அமரன்
அமுதொத்த சொல்லின்
அறிஞனை நீரறி வீரோ? 1

உரைகெட்டிருந்து
உணர்வற்றிருந்து
சிறையுற் றிருந்த தமிழில்
கரைதத்தி வந்த
பெருவெள்ள மென்னக்
கதைகொண்டு வந்த கலைஞன்! 2

இடர்வந் ததெிர்க்க
எதிர்கொண் டடித்த
இணையற்ற வயிர நெஞ்சன்!
கடல் என்ற புலமை
அலைகொண் டெறியக்
கவிமுத் தளித்த கவிஞன்! 3

( வேறு )

சின்னவர் வஞ்சகர்
சீர்கெட்ட மூடர்கள்
சீய்த்துக் கிடந்த தமிழில்
'மன்னவன்! செந்தமிழ்
மணிவாசகக் கடல்!
மாதவம்!' என்ன வந்தான்! 4

பித்தன் என்றூர் சிலர்;
பேயன் என்றூர் சிலர்;
பிரமன் என்றுரு முளரால்!
சித்தம் தெளிந்தவர்
தெரிந்தனர் செந்தமிழ்ச்
செய்தவச் செல்வன் எனவே! 5

அருளோடு வந்தொளி
அணையாச் சுடர் மொழி
ஆக்கிப் படைத்த அறிஞன்
இருளோடு வந்து மண்
ணிருளோடு முழல்பவர்
இருந்திட-மறைந்த தென்னே?6

வறுமைக்கு வாழ்க்கையைப்
பலியிட்ட வள்ளலை
வந்தாத ரிக்கா தவர்
சிறுமைக்கு நாணவோ?
தேசத்து மாந்தரின்
செய்கைக்கு நாணமுறவோ? 7

நாணுவோமாயினும்
நம்பிக்கை மாய்ந்திலோம்;
நாளுமவன் கலையின் ஒளியைக்
காணுவோம்; அவன் கலை
காட்டிய நெறியினைக்
கருத்தினில்கொண்டு வளர்வோம்! 8

'பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த மக்கள் பேறல்ல பிற' என்கிறார் வள்ளுவர். குழந்தைகள்தான் ஒரு நாட்டின் தலையாய செல்வம்; எதிர்காலத்துப் பிரஜைகள்; சிற்பிகள். ஆனால் இன்றோ குழந்தைகளைப் பெறுவதையே 'குற்ற'மாகக் கூறும் பிரசாரம் மலிந்து வருகிறது. பசி பட்டினி, யுத்தம் எல்லாவற்றுக்கும் ஜனப் பெருக்கமே காரணம் என்றும், எனவே இன விருத்திக் கட்டுப்பாடு அவசியம் என்றும் உபதேசம் செய்கிறார்கள். யுத்தம், பசி, பட்டினி முதலியனவற்றுக்கு அணுகுண்டு வெறியர்கள், ஆதிக்க வேட்டையர், லாபக் கொள்ளைக்காரர் முதலியோரும், சமுதாய அமைப்பின் கோளாறும் தான் காரணமேயன்றி, ஒரு பாவமும் அறியாத குழந்தைகள் அல்ல. பூமாதேவியோ, மனித குலத்தின் புத்தியோ தம் புத்திரச் செல்வங்களைக் காப்பாற்ற முடியாதவாறு மலடு தட்டிப் போவதில்லை. குடும்பக் கட்டுப்பாடு என்ற பெயரால் நமது நாட்டிலும் புகுந்து விட்ட இந்தக் கேலிக் கூத்தின் தோல்வியைச் சித்தரிக்கிறது இந்தக் கதை.

# பிள்ளை வரமா? பிறவா வரமா?

•

சுந்தர ராமசாமி

•

தலைக்குப் பின்னாலுள்ள முடிச்சை அவிழ்த்து, மூக்குக் கண்ணாடியை எடுத்து மடியில் வைத்துக்கொண்டார், பரமசிவம் பிள்ளை. தலையைக் கொக்கு மாதிரி கடைக்கு வெளியே நீட்டி நோட்டம் பார்த்தார். வீதியெல்லாம் வெறிச்சோடிக் கிடந்தது. உயிரியக்கமே இல்லை.

கல்லாப் பெட்டியைத் திறந்து சில்லறையை எண்ணினார். அன்று விற்று முதல் பதிமூன்றரை அணா! "யாவாரம் செஞ்சு பொளந்தாப்லெதான்! எளவெடுத்த யாவாரம்!" என்று முணுமுணுத்துக் கொண்டார். வாடிய வெற்றிலையை அப்படியே சுருட்டி வாயில் தள்ளிக்கொண்டு, உலர்ந்த சுண்ணத்தைப் பொடித்துத் தூவிக்கொண்டார். கடையை இழுத்துப் பூட்டிவிட்டு, பூட்டைப் பலமுறை இழுத்துப் பார்த்தார். பக்கவாட்டுச் சந்தினுள் நுழைந்து வீட்டை நோக்கிப் பொடி நடை நடந்தார் பிள்ளை.

கணபதி கோயிலைத் தாண்டியதும் தான், மனைவி காலையில் சொல்லியனுப்பியது ஞாபகத்திற்கு வந்தது. ஒரு பிடி நல்ல மிளகு கொண்டு வரும்படி மனைவி சொல்லியிருந்தாள். அவர் மூத்த பெண் பிரசவத்திற்காகத் தாய் வீடு வந்திருந்தாள். எழு

மாத கர்ப்பம். ஏற்கனவே பெண் நோஞ்சல். சோகை பிடித்த உடம்பு. விரலை வெட்டினல் கூட ரத்தம் வராது என்றுதோன்றும். இந்த அழகில் வருடம் தப்பினுலும் பிரசவம் தப்புவதில்லை. திருமணம் நடந்து இன்னும் ஐந்து ஆண்டுகள் நிரம்பவில்லை. அம்மாள் நாலாவது பிரசவத்திற்குத் தாய் வீடு வந்திருக்கிருள்!

அன்று பரமசிவம்பிள்ளையின் மனம் வெந்து கொண்டிருந்தது. ஒரே கசப்புணர்ச்சி. வாழ்வின் அபஸ்வரங்கள் மனத்தில் எதிரொலித்துக்கொண்டே இருந்தன.

சின்னஞ்சிறு பிள்ளையாக இருக்கிறபொழுது பகலில் ஓய்வும், இரவில் தூக்கமும் இல்லாமல் புகையிலை மண்டியில் மாடாய் உழைத்தது ஞாபகத்திற்கு வந்தது. ஏழு ரூபாய்ச் சம்பளத்தில் கணக்குப்பிள்ளை என்ற அந்தஸ்தைப் பெறுவதற்கு முன்பே ஆயுளில் பதினைந்து வருடம் தாண்டி விட்டது. வாழ்க்கை என்பது அவருக்கு மேடு பள்ளம் அல்ல; ஒரே பள்ளம்தான்! அப்புறம், அவருக்கும் கல்யாணம் நடந்தது. கல்யாணத்தை நினைத்து விட்டாலே பிள்ளைக்குப் பிரசவம்தான் ஞாபகத்திற்கு வரும். நலுங்கு ஊஞ்சலின் ஆட்டம் நிற்பதற்கு முன்னுலேயே குழந்தை பிறந்து குதித்து விட்ட மாதிரி தோன்றும். கல்யாணமாகி பத்து மாதத்திற்குப் பின்னுல் குழந்தை பிறந்தது; இல்லை, குழந்தைகள் பிறந்தன. தாம்பத்திய வாழ்க்கைக்குப் பிள்ளையார் சுழி போட்

> "நாலு திசையிலும் ஸ்டோர் குமாஸ்தா ராமன், சினிமா நடிகை சீதம்மாள், பேரம் பேசும் பிரமநாயகம் இத்தியாதி நபர்களை நான் தவருமல் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, இவர்களது வாழ்வுக்கு இடமளிக்காமல் காதல் கத்திரிக்காய் பண்ணிக்கொண்டிருப்பது போன்ற அனுபவத்துக்கு நேர் முரணன விவகாரம் வேறு ஒன்றுமில்லை. நடை முறை விவகாரங்களைப்பற்றி எழுதுவதில் கௌரவக் குறைச்சல் எதுவுமில்லை."
>
> —புதுமைப்பித்தன்
> (கதையின் கதை)

டதுமே 'டபிள் பிரசவம்!' அப்புறம் வருடா வருடம் பிரசவம்.... கர்ப்பம்... பிரசவம்.... குழந்தை.... மீண்டும் கர்ப்பம். ஸ்ரீமதி பிள்ளை மாதாந்திர அவஸ்தை போன்ற தொல்லைகளுக்கொன்றும் ஆளாவதில்லை. இதற்கு நடுவில் பிள்ளை கொளும்புக்கு வேறு போனர். கொளும்புக்குப் போய் எல்லோரும் சம்பாதித்தார்களாம். ஒரு தேயிலைத் தோட்டத்தில் கணக்குப்பிள்ளையாக வேலை பார்த்தார். ஐந்து வருடத்தில் திரும்பி வந்தார். சம்பாத்தியம் மலேரியா ஒன்றுதான்! மூன்றுவது குழந்தைக்கும் நான்காவது குழந்தைக்கும் ஆறு வருஷம் இடைவெளி. அதுதான் கொளும்பு யாத்திரையில் கண் கண்ட லாபம்!

பிள்ளைக்கு ஐந்து பெண்களும் நான்கு பிள்ளைகளும் உண்டு. சட்டென்று, 'அவ்வளவு குழந்

தைகள் பெயரையும் வரிசையாகச் சொல்லும்' என்ருல் ஒரு நிமிஷம் திணறிப்போவார் பிள்ளை. ஐந்து பெண் பெற்ருல் அரசனும் ஆண்டியாம்! பிள்ளை எற்கனவேயே ஆண்டி. அஷ்ட தரித்திரம்தான் பிதிரார்ஜிதச் சொத்து. மனைவி வழியில் ஒரு சின்ன வீடு வந்து சேர்ந்தது. மூத்த பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுத்ததில் அந்த வீடும் மற்ருெருவனுக்குச் சொந்தமாகி விட்டது. அவருடையதாக இருந்த வீட்டில்தான் இப்பொழுது அவர் இருக்கிருர். வாடகையை மட்டும் சொந்தக்காரனுக்குக் கொடுத்து விடவேண்டும்.

"இதுவும் ஒரு வாழ்க்கையா?" என்று பிள்ளை அலுத்துக்கொண்டார். "இது வாழ்க்கை இல்லை. உயிர் போகமாட்டாத அவஸ்தைதான்!" என்று தோன்றிற்று.

"என் பெண்ணிற்கும் இந்தக் கஷ்டம்தானே. நாளைக்கு அவளும் திண்டாடத்தான் போகிருள். மாப்பிள்ளைதான் என்ன கலெக்டரா?.... கலெக்டர்தான். ஏதோ ஒரு ராப்பாடி பாங்கில் பில் கலெக்டராக இருக்கிருன். முப்பது ரூபாய் சம்பளம். இவனுக்குத்தான் எதுக்கு இவ்வளவு குழந்தைகள்? முன் யோசனையே இல்லை...."

ஆனல் பிள்ளையைப் பொறுத்த வரையில் அவருக்கு அய்யங்காரின் சிநேகம் ஏற்படுவதற்கு முன்னல், இந்த மாதிரி சிந்தனையே தோன்றியது கிடையாது. எல்லாம் ஆண்டவன் செயல் என்று நம்புகிறவர்

> "இலக்கியத்தின் ஜீவநாடி உணர்ச்சியும் சிருஷ்டி சக்தியும்; இந்த இரண்டும் இல்லாவிட்டால் அது வெறும் குப்பை."
>
> —புதுமைப்பித்தன்
> (நமது இலக்கியம்)

அவர். "என்னய்யா, நேத்து பிரசவமாச்சாமே. தாயும் பிள்ளையும் சவுக்கியமா?" என்று இந்த இருபத்தைந்து வருட காலத்தில் எத்தனைபேர் எத்தனை தடவை அவரிடம் விசாரித்திருக்கிருர்கள்! அப்பொழுதெல்லாம் பிள்ளையின் பதில் ஒன்றுதான்: "என்னமோய்யா, ஆண்டவனுகப் பார்த்துக் கொடுக்கிருன். நம்ம கையிலெ என்ன இருக்குது? கொளந்தெ வேணும்னு வருதா? அட, வேண்டாம்னுதான் நிக்குதா? இதெல்லாம் மனுச காரியமா? ஒம்ம குடும்பத்துக்குத் தாங்குமான்னு கேப்பிய. மரம் வச்சவன் தண்ணி விடருன்!"

ஒரு முறை வழக்கம் போல் சர்வசாதாரணமாக இப்படிப் பதில் சொல்லப் போய்தான், பிள்ளை அய்யங்காரிடம் அகப்பட்டுக்கொண்டார்.

★ ★ ★

செல்லப்பிள்ளை அய்யங்கார் சாதாரண மனிதர்தான். ஆனல் சமீபகாலமாக அவருக்குக்கொஞ்சம் மவுஸு ஜாஸ்தி. ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி நாற்பத்தேழாம் வருடம் வரை 'ரூல் பிரிட்டானிக்கா' பாடிய ராஜவிசுவாசிதான் அவர். இப்பொழுது 'ஜன கண மன' பாடுவதில் தொண்டை கிழிகிறது. அதோடு ஜில்லா போர்டு

தேர்தலிலும் வெற்றி. பொதுநல ஊழியர்தான் என்றாலும், சமீப காலமாக 'குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம்' என்ற தீவிரச் சீர் திருத்தத்தில் ஐம்புலன்களையும் கேந்திரப்படுத்தி வேலை செய்து வருகிறார். பிரசாரத்தின் வலு ஏற ஏற 'அய்யங்கார் வருகிறார்' என்றாலே எல்லோரும் ஓட்டம் பிடிக்கும் நிலைமை வந்துவிட்டது.

"என்னங்காணும் சொல்கிறீர்? மரம் வச்சவன் தண்ணீர்விடுவ வானும். இதெல்லாம் பத்தாம் பசலி! தண்ணீர் எவ்வளவு இருக்கோ, அதுக்கு மரம் வச்சா போரும். இப்போ என்ன குடி முழுகிப்போயிடும். சொல்லும்! எப்பவும் வீட்டிலெ நாலு தூளி போட்டு ஆட்டிணுத்தான் ஜாதிலே சேத்தியோ? நானெல்லாம் இதை ஒப்புக்கொள்ள மாட்டேன். இதென்னடா இது? ஓயாமல் பிரசவம்....இப்படியா வருஷா வருஷம் கொழுந்தையெப் பெத்துட்டு ஆலாப் பறப்பீர்! அட, பயித்தியார மனுசா!"

பிள்ளையைத் தாக்குத் தாக்கென்று தாக்கிவிட்டார் அய்யங்கார். அய்யங்காரின் கர்ஜனையில் அசந்துபோனார் பிள்ளை. பிள்ளையின் மாப்பிள்ளையும் கூட இருந்தார். அவர் கேட்டார்:

"அதுக்கு நீங்க என்ன வேணுமிங்கறிங்க?"

"அப்படிக் கேளு! என்ன வேணும்னு சொல்றேன்ணு,குடும்பத்தைகட்டுப்படுத்தணும். ஆம். என் கட்டுப்படுத்தணும்? நம்ம தேசத்திலெ உணவு கம்மி.செழிப்பில்லே. ஊர்விஷயத்தைத் தள்ளு.

> "தாளால் உலகளந்தான்
> சினமறந்து தூங்கி விட்டான்!
> மூளாத சீற்ற
> முக்கண்ணனும் இன்று
> ஆழாக்கு அரிசிக்காய்
> அல்லாடித் திரிகின்றான்!"
>
> —புதுமைப்பித்தன் 'மாகாவியம்'

ஒம்ம விஷயத்தை எடுத்துக்கும். உமக்குப்போதியவசதி இருக்கா? பணச் சௌகரியமிருக்கா? டஜன் டஜனு கொழந்தையெப் பெத்து என்ன செய்யப் போகிறோம்?"

"அப்பொ வசதி இருந்தா புள்ளெ பெறலாம்னு சொல்லுங்க. கம்மிஷன் கடை நாடாருக்கு ஒரு டஜன் தாண்டிட்டுத்தே. அவர்ட்டெ போயி 'அட்வைஸ்' பண்ணப்படாது? அங்கேபோய் வாயைத் திறந்தா..."

"திறந்தா என்ன, தலையைச் சீவிடுவானே? அவன் அப்பன் கிட்டயே சொல்லுவேனே! இந்தப் பேச்செல்லாம் எதுக்கு? அவன் லகாரமா வார்ரான். உமக்குத்தான் வக்கில்லையே!"

"அப்போ சம்பாத்தியத்துக்கு தகுந்தாப்போல, கொழந்தையையும் பெத்துக்கிடலாம்னு சொல்லுங்க. அட, மனுசன் துட்டுக்குப் போக்கத்துப் போயிட்டான்ணு, புள்ளெ கூட பிறக்கூடாதுன்னு சொல்லுவீங்க போலிருக்குதே. அப்படின்ணு..."

"சரி, சரி, பேச்சை நிறுத்து" என்று அதட்டினார் பிள்ளை.

சண்டை கிளம்பிவிடக்கூடாதே என்ற பயம் அவருக்கு.

மறுநாள் பரமசிவம் பிள்ளையின் வீடு தேடிவந்து மாப்பிள்ளையைத் தன் வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு போனார் அய்யங்கார்.

இரவு மாப்பிள்ளையிடம் விஷயத்தை விசாரித்தார் பிள்ளை.

"அவரு கூட்டிக்கிட்டுப்போய் கதை அளக்க ஆரம்பிச்சாரு. மனுசன் 'பிரேக்' இல்லாமப் பேசறான். எல்லாத்தையும் பச்சை பச்சையாச் சொல்றாரு. நமக்குத் தான் கேக்கக் கூச்சமா இருக்குது. அவருக்குச் சொல்லிச் சொல்லி குளிர் விட்டுப்போச்சு. ரெண்டு மூணு சின்னப் பொஸ்தகமும் கொடுத்திருக்கிறாரு. எல்லாம் சர்க்கார் வெளியிட்டதாம்!"

பிள்ளை இனிமேலாவது பெண் தன் வீட்டிற்குப் பிரசவத்திற்கு வராமல் இருந்தால் போதும் என்று எண்ணினார்.

"அவர் பேச்சைக் கேட்டா என்ன? குடி முழுகியா போயுடும்? அவரு சொல்றதும் சரிதானே. அவரு சொல்றபடி நடந்துக்கிட்டா , எல்லாருக்கும் கயிஷ்டமில்லெ, ஆமா!"

மாப்பிள்ளை மறுநாள் ஊருக்குப் போய்விட்டார்.

இது நடந்து ஒரு வருடமாகவில்லை.

இப்பொழுது பெண் பிரசவத்திற்குத் தாய்வீடு வந்திருக்கிறாள்.

★ ★ ★

"என்ன பிள்ளைவாள், கடை பூட்டிப் போறேளாக்கும்!"

> "நல்ல இலக்கியத்தைக் காணும் போது அதைத் தெரிந்துகொள்ளவும் பரிசயம் செய்து வைக்கவும் திராணி வேண்டும். போலியைக் காணும்போது யார் வந்து நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் அது போலி என்று சொல்வதற்கு நெஞ்சழுத்தம் கொண்டிருக்க வேண்டும்."
>
> — புதுமைப்பித்தன்

பிள்ளை திரும்பிப் பார்த்தார். அய்யங்கார் நின்றுகொண்டிருந்தார். கீற்று நாமம்; கதர் உடை; கையில் தங்கச் செயின்; வாய் நிறைய வெற்றிலை.

"ஆமாம், ஊரிலேருந்து பெண் வந்திருக்காளாமே! நேத்து அப்படிவரச்சே, வாசலிலெ நின்னுண்டு இருந்தாப்லெ தோணித்து."

"ஆமா வந்திருக்கு."

"என்ன விசேஷம்? பொறந்த நாளோ?"

"கொளந்தைக்குப் பொறந்த நாளு இனிமேதான் வருது. அதுக்குள்ளார இவ வந்தாச்சு!"

"ஒடம்பு சரியில்லையோ!"

"ஒடம்புக்கு ஒண்ணுமில்லெ. இந்தப் பொம்புளைகளுக்கு வேறே சோலி? வருஷா வருஷம் வயத்தெ தள்ளிட்டு வந்து என் கழுத்தெ அறுக்குது. சவத்தெ விட்டு தள்ளுங்க!"

"ஓஹோ, அப்படியா சமாச்சாரம்? நம்ம மாப்ளேட்டெ கிளிப்பிள்ளைக்கு சொல்றாப்லெ சொன்னேனே. சேச்சே! மோசம்! கொஞ்சம் விஷயம் தெரிஞ்ச

ஆசாமீன்னு நெனச்சேன்!''

"நம்ம பேச்செ விடுங்க. ஒங்களுக்குத்தான் என்ன, கொளந்தைகளுக்குக் கொறவா?''

"நாலு!''

"பின்னென்ன?''

"பின்னென்னவா? நாலு. நாலுன்னு நாலுதான். அதுக்கு மேலே பேசப்படாது. அவளுக்கு ஒருபொண், எனக்கு ஒரு பிள்ளெ. எனக்கு ஒரு பொண், அவளுக்கு ஒரு பிள்ளெ. அவ அப்பா, அவ அம்மா, என் அப்பா, என் அம்மா, எல்லார் பெயரும் இட்டாச்சு. இனிமே கொழந்தே கிழந்தே எங்கிற சமாச்சாரமே கிடையாது. என்ன?''

வீடு பக்கத்தில் வந்ததும் தப்பினேம் பிழைத்தோமென்று உள்ளே தாவினர் பிள்ளை.

வீட்டில் எல்லோரும் தூங்கி விட்டார்கள். குழந்தைகள் வரிசையாகப் படுத்துக்கிடக்கிறார்கள். ஒன்று, இரண்டு, மூன்று..........ஒன்பது!

பிள்ளை சாப்பிட உட்கார்ந்தார்.

சம்சாரம் பேசிக்கொண்டே சோற்றைப் பிழிந்து போட்டாள்.

"........மீனாச்சிக்குக் காலிலெ சிரங்கு...ராசா பரீச்சையிலெ முட்டை போட்டுட்டான்... சம்படத்திலே வச்சிருந்த ரூபாயைத் திருடிக்கிட்டு, கோலப்பன் சினிமாவுக்குப் போயுட்டான்.... பிள்ளெத் தாய்ச்சிக்கு காப்பி போட்டு குடிக்கணும்னு ஆசையா இருக்கு...ஆனா வீட்டிலெ காப்பிப் பொடி இல்லெ... கடைக்குட்டி சுப்பு சிலேட்டை ஒடச்சிட்டு அளுது....நாளெ பால் பணம் கொடுக்கணும்....இனிமே நாளெக் கடத்த முடியாது... திங்குதிங்குனு குதிக்கான்...''

> "பணக்காரர்களான பூலோகத் தெய்வங்கள் மீது சமுதாயக் கட்டுப்பாட்டின் ஜம்பம் பலிக்காது.''
>
> — புதுமைப்பித்தன்

பிள்ளை ஒரு வார்த்தை பேசாமல் வாசலில் வந்து படுத்துக் கொண்டார். படுக்கை கொள்ளவில்லெ. நெஞ்சில் பாரத யுத்தம் நடந்துகொண்டிருந்தது.

திடீரென்று வீட்டினுள் ஏதோ சத்தம் கேட்டது.

உள்ளே பாய்ந்தார். மனைவி கீழே விழுந்து கிடந்தாள்.

"என்ன? என்ன செய்யுது?''

பதிலில்லெ.

"என்ன, சொல்லேன்! வைத்தியரைக் கூட்டிக்கிட்டு வரட்டுமா?''

பதிலில்லெ.

"அட, வாயைத்திறந்துதான் பதில் சொல்லேன். என்ன செய்யுது?''

மெல்லக் கண்ணை விழித்தாள் மனைவி.

"பதறுதீங்க. எல்லாம் வருஷா வருஷம் வர்ற வியாதிதான். பத்து மாச வியாதி!''

★ ★ ★

பல மாதங்களுக்குப் பின்னல் ஒருநாள் பிள்ளையை அய்யங்கார் பிடித்துக்கொண்டார்.

"என்ன பிள்ளைவாள், ஆத்திலெ புத்திரன் அவதாரமாகியிருக்கானுமே. ரொம்ப சந்தோஷம்..."

பிள்ளை பதில் சொல்லவில்லை. அவர் முகத்தைப் பார்க்க, அய்யங்காருக்குப் பரிதாபமாக இருந்தது.

"அட, இதெல்லாம் மனசிலெ போட்டுக்காதேயும். எல்லா நாம நெனக்கிற மாதிரி நடக்கிறதா? இப்போ...."

பேச்சை முடிக்குமுன் அய்யங்காருக்கு ஒரு தந்தி வந்தது. பிரித்துப் பார்த்தார்.

"என்னய்யா விசேஷம்? தந்தி வந்திருக்குதே!"

"ஊரிலெ நம்ம சம்சாரம் பெத்துருக்காளாம்!" என்றார் ஐயங்கார்.

"அடி சக்கை! நீங்களும் விட்டேளில்லே போலிருக்கே!" என்று குதூகலத்தோடு கூறி மகிழ்ந்துகொண்டார், பரமசிவம் பிள்ளை! ★

●

## உரையும் உறையும்.

பி. ஸ்ரீ. ஆசார்யா 'சித்திர ராமாயணம்' எழுதுவதற்காகக் கம்பனுக்குப் பலபேர் எழுதியுள்ள உரைகளைத் தம் அருகே வைத்து ஏதோ பார்த்துக் கொண்டிருந்தார். தாம் சொல்ல வேண்டிய பாடலுக்குச் சரியான அர்த்தம் அந்த உரைகள் எதிலும் அவருக்குப் புலப்படவில்லை. இந்தச் சமயத்தில் புதுமைப்பித்தன் அங்கு வந்து சேர்ந்தார்.

பி. ஸ்ரீ. புதுமைப்பித்தனைப் பார்த்து "என்ன சோ. வி., இந்தப் பாட்டுக்கு என்ன பொருள்? இந்த உரையாசிரியர்கள் எவருமே தெளிவாகச் சொல்லவில்லையே" என்றார்.

உடனே புதுமைப்பித்தன் "ஆமாமா, எல்லாரும் கம்பனுக்கு உறைதானே போட்டிருக்கானுக!" என்று அழுத்திக் கூறினார்.

— புதுமைப்பித்தன் வரலாறு

## கட்டபொம்மு!

பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்முவைப்பற்றி ஒரு புத்தகம் வெளிவர வேண்டும் என்று விரும்பினார் புதுமைப்பித்தன். ஒரு பதிப்பாசிரிய நண்பர் சரித்திரப் பரிசயமுள்ள ஒரு எழுத்தாளரைக்கொண்டு அதை எழுதச் செய்து வெளியிட்டார்.

புத்தகம் வெளி வந்த பிறகு அந்தப் பதிப்பாசிரியர் ஒரு பிரதியைப் புதுமைப்பித்தனிடன் கொடுத்து, "படித்துப் பார்த்து எப்படியிருக்கிறது என்று சொல்லும்" என்றார்.

புதுமைப்பித்தன் புத்தகத்தைப் படித்துப் பார்த்து விட்டுச் சொன்னார்: "வே! இது காயடிச்ச கட்டபொம்மு!"

புத்தகத்தில் வேகமில்லை என்பதையே அவர் இப்படிக் குறிப்பிட்டார்.

— புதுமைப்பித்தன் வரலாறு



**புதுமைப்பித்தன்**

தோற்றம்: 25—4—1906 — மறைவு: 30—6—1948



சிறுவயதில் புதுமைப்பித்தன்



புதுமைப்பித்தனின் தந்தை
வி. சொக்கலிங்கம் பிள்ளை



புதுமைப்பித்தனின் தாய்
பர்வதத்தம்மாள்

புதுமைப்பித்தனின் குழந்தை
பர்வதகுமாரி என்ற தினகரி





புதுமைப்பித்தனின் மனைவி
கமலாம்பாள்



திருவனந்தபுரத்தில் புதுமைப்பித்தன் தமது அந்திம நாட்களைக் கழித்த இடம். இங்குதான் புதுமைப்பித்தன் காலமானார்.



அமர இலக்கியங்கள் பலவற்றையும் படைத்துத்தர உதவிய ஆயுதமான புதுமைப்பித்தனின் பேனா இது. பேனாவில் காண்பது புதுமைப்பித்தனின் இயற்பெயரான சொ. விருத்தாசலம் என்னும் கையெழுத்தாகும்.



★
"புதுமைப்பித்தன்"
★

உலகத்துக்குக் கதாசிரியர்களில் சிறுகதைகள் மட்டும் எழுதி, சிரஞ்சீவித்தன்மை பெற்ற கதாசிரியர்கள் மிக அபூர்வம். சிறுகதைகள் எழுதுவதில் கைதேர்ந்தவர்கள் பலரும் பெருங்கதைகளான நாவல்களையும் எழுதித் தமது பெயரை நிலைநாட்டியுள்ளார்கள். புதுமைப்பித்தன் உலக இலக்கியத்தோடு ஒப்பிடத்தக்க அரிய சிறுகதைகள் பலவற்றைச் சிருஷ்டித்துத் தந்தவர். சிறுகதைகள் தவிர, கட்டுரை, கவிதை, நாடகம், இலக்கிய விமர்சனம் முதலிய துறைகளிலும் பல சிருஷ்டிகளைப் படைத்துத் தந்துள்ளவர். பாத்திர சிருஷ்டியிலும், கதை சொல்லும் பாணியிலும் கைதேர்ந்த புதுமைப்பித்தன் தமது அகண்டமான மேதா விலாசத்தை நன்கு புலப்படுத்தக்கூடிய ஒரு நாவலைக்கூட எழுதாமல் போய்விட்டாரே என்ற வருத்தம் பல வாசகர்களுக்கும் எழுத்தாளருக்கும் உண்டு. தலைசிறந்த கதாசிரியரான புதுமைப்பித்தன் தமது இருபது வருஷ இலக்கியப் பணியிலும் ஒரு நாவலைக்கூட எழுதி வெளியிடாமற் போனது விசித்திரமாகக்கூடப் படக்கூடும். நாவல் எழுதவேண்டும் என்ற ஆசையும் ஆர்வமும் புதுமைப்பித்தனுக்கு இல்லாது போகவில்லை. தாம் எழுத எண்ணும் நாவல்களைப்பற்றிய கற்பனைத் திட்டங்கள் பலவற்றை அவர் என்னிடம் பலமுறை கூறியதுண்டு. ஆனால் வாழ்க்கைத் தேவையை முன்னிட்டு அசுரப்பசி கொண்ட தினசரிப் பத்திரிகைகளின் அச்சு யந்திரங்களுக்கு தமது காலத்தையும் கரத்தையும் இரைகொடுத்து வாழ்ந்த புதுமைப்பித்தனுக்கு 1944-ம் வருஷம் வரையிலும் நாவல் எழுதுவதற்கான சூழ்நிலை கிட்டாமலே போய்விட்டது; அதன் பின்னர் அவர் மீண்டும் வாழ்க்கைத் தேவையை முன்னிட்டு சினிமாத்துறையில் புகுந்த போதும் போதிய கால அவகாசம் கிட்டவில்லை. எனவே அவரது நாவல்-கற்பனைகள் பலவும் அவரது சித்த கர்ப்பத்துக்குள்ளேயே புதையுண்டு சிதைந்து போயின. எனினும் புதுமைப்பித்தன் தமது அந்திமகாலத்தில் ஒரு தலைசிறந்த நாவலை எழுத முனைந்தார். அந்த நாவலின் பெயர்தான்: "அன்னை இட்ட தீ!"

'அன்னை இட்ட தீ!' என்ற அந்த நாவலின் திட்டத்தைப்பற்றி புதுமைப்பித்தன் என்னிடம் நேரில் பலமுறை குறிப்பிட்டிருக்கிறார். தேசிய மணமும், சிந்தனை யாழமும், அற்புதமான கதாபாத்திரங்களும் நிறைந்த தலைசிறந்த அரசியல் நாவலாக அதனை எழுதவேண்டும் என்பது அவரது திட்டம். இந்திய

தேசிய இயக்கத்தின் பேரலை மக்களின் இயக்க வெள்ளமாகப் பெருக்கெடுத்த காலத்திலிருந்து, இரண்டாவது உலக யுத்த, 1942 ஆகஸ்ட் போராட்ட காலம் வரையிலும், அதாவது ஒரு தலைமுறைக் காலம் முழுவதையும் தமது நாவலுக்குரிய கால வரம்பாக அவர் கணித்திருந்தார். இந்தக் கால கட்டத்தில் தென்பாண்டி நாட்டு மக்களைப் பாத்திரங்களாகக் கொண்டு, அவர் தம் நாவலை எழுதத் திட்டமிட்டுச் செயலிலும் இறங்கிவிட்டார். ஆனால் 'அன்னை இட்ட தீ!' என்ற நாவலில் சுமார் நூறு பக்கங்கள் எழுதி முடிப்பதற்குள்ளாகவே, பல்வேறு வாழ்க்கைத் தொல்லைகள் அவரது கையையும் கருத்தையும் வேறுவகையில் செயலாற்றச் செய்து விட்டன. அதன்பின் அவர் காலமாகும் வரையிலும் அந்த நாவல் எழுதி முடிக்கப் பெறாமல் தொட்டகுறைப் பிறவியாக, அபூர்ணமாகவே நின்று விட்டது.

புதுமைப்பித்தனின் சிறுகதைச் செல்வங்களைப் படித்துத் தலை சுற்றியாடும் இலக்கிய ரசிகர்களுக்கு புதுமைப்பித்தனின் இந்த அரைகுறை நாவலையும் படித்து அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை எழுவது இயல்பு. புதுமைப்பித்தனின் இலக்கிய சிருஷ்டிகள் அனைத்தையும் முறையாக வெளியிட்டு வரும் சென்னை ஸ்டார் பிரசுரத்தினர் கூடிய விரைவில் புதுமைப்பித்தனின் இந்த நாவல் முயற்சிமுழுமையையும் நல்லமுறையில்வெளியிடுவார்கள் என்று ரசிகர்கள் எதிர்பார்க்கலாம். புதுமைப்பித்தனின் நூல்களை வெளியிடும் உரிமைபெற்ற ஸ்டார் பிரசுரத்தினரிடமிருந்து 'அன்னை இட்ட தீ!' என்ற நாவலின் கையெழுத்துப் பிரதியைப் பெற்று, 'புதுமைப்பித்தன்' ரசிகர்களுக்கு அந்நாவலிலிருந்து ஒரு பகுதியை மட்டும் இங்கு அறிமுகம் செய்து வைக்கிறோம்; இந்தப் பகுதி இப்போதுதான் முதன்முறையாக அச்சேறுகிறது என்பதையும் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

'அன்னை இட்ட தீ!' என்னும் புதுமைப்பித்தனின் கற்பனை உலக வாழ்வின் நெளிவு சுழிவுகளைப்பற்றிய சிந்தனையாற்றல் மிகுந்த நீண்டதொரு தத்துவ தர்க்க விசாரத்தோடு ஆரம்பமாகி, திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள மறுகால் நல்லூர் கிராமத்தைக் களமாகக்கொண்டு, மறுகால் நல்லூர் வாசிகளான கதாபாத்திரங்களின் அறிமுக விஸ்தாரத்தோடு விகசிக்கத் தொடங்குகிறது. மறுகால் நல்லூர் வாசிகளில் ஒருவரும், ரிட்டயர்ட் தாசில்தாருமான ஆலம் உகந்த பெருமாள் பிள்ளை வெள்ளைத் தோலின் 'மகிமை'யை உணர்ந்த பழம் பெரும் ராஜ விசுவாசி; அவரது மகனான சிரஞ்சீவி சுப்பிரமணியம் பி. ஏ. தேசபக்தி போன்ற லட்சியக் கனவுகளில் ஈடுபட்டவன். ஆனால் ராஜ விசுவாசி ஏ. யு. பெருமாள் பிள்ளையோ தம் மகனையும் தம்மைப்போல் சர்க்கார் உத்தியோகஸ்தனுக்கிப் பார்க்கவேண்டும் என்று ஆசை கொள்கிறார். சுதந்திரப் பித்துப் பிடித்த சுப்பிரமணியத்துக்கோ அதில் இஷ்டமில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் தாம் தாசில்தாராக இருந்த சமயத்தில் சப்கலெக்டராகவும், தாம் ரிட்டயர்ட் தாசில்தார் ஆனபின்னர் திருநெல்வேலி ஜில்லா கலெக்டராகவும் உள்ள 'கடுவா துரை பர்டட்'டிடம் தம் மகன் சுப்பிரமணியத்தைக் கூட்டிக் கொண்டு செல்கிறார் ஸ்ரீமான் ஏ. யு. பெருமாள் பிள்ளை......

இனி மேலே படியுங்கள்.

— ரகுநாதன்

# அன்னை இட்ட தீ!

○

"புதுமைப்பித்தன்"

○

**மா**லை சுமார் நான்கு அல்லது ஐந்து மணி இருக்கும். சுலோசன முதலியார் பாலத்துக்கு வலது பாரிசத்தில், விஸ்தாரமான சோலைக்கு மத்தியில் மறைந்து கிடக்கும் கலெக்டர் பங்களா. கிழக்கிந்தியக் கம்பெனி காலத்து மதில் கோட்டைகளை விட்டு வெளியேறி, பிரிட்டிஷ் ஆட்சி அந்தப் பிராந்தியத்துக்கு ஆதிக்கம் வகிக்க முற்பட்ட காலத்தில், அதற்கு உற்ற துணையாக நின்ற எட்டயபுர ஜமீன் கட்டிடமும் நிலமும் அது. ஆலை முதலாளி ஆலைக் கூலியிடம் ஐந்து ரூபாய் கடன் வாங்கும் பான்மையிலே, அந்தக் கட்டிடம் ஜமீனுடைய இஷ்டத்தின் பேரில், பிரிட்டிஷ் அதிகாரப் பிரதிநிதி தங்கும் இடமாக வாடகைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறது. ஒரு காலத்தில் கும்பெனி வியவகாரம் வெறும் வியாபாரமாக இருந்த காலத்தில், ஷை கட்டிடம் குறுக்கே கிடக்கும் ஆற்றைத் தாண்டி அமர்ந்துள்ள பட்டணத்துத் துபாஷ் முதலியார்களுடைய சாணக்கிய நிலைக்களத்துக்கு ஈடு கொடுத்து எதிராக நின்றது. துபாஷ் தயவுகளை உதறித் தள்ளி, கும்பெனி தன்னுதிக்கம் பெற்றுத் தட்டிப் பறித்த அதிகாரத்தை,சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேணுமென்று கனவு கண்ட பிரிட்டிஷ் காமன்ஸ் சபையிடம் ஒப்படைத்து விலகிய பிற்பாடு, எட்டயபுரமும் 'சகா' என்ற அந்தஸ்தைத் தானறியாமலே இழந்து, பிரிட்டிஷ் ஆளுகைக்குட்பட்ட ஜமீனுக மாறியது. இந்த ஞானம் அதன்பிரக்ஞையில் பதிவதற்கு வெகுநாட்களாயினும், ஜில்லா கலெக்டர்களுக்கு அதன் அந்தஸ்துபற்றிச் சந்தேகம் எழுந்ததே கிடையாது. அறுபது தடவை ஓடி ஓடி, பிறகு வந்த பிரிட்டிஷ் அதிகாரத்தை, பொதியைப் பாசன மண்ணில் ஆணியடித்தரம்போல்ட் லூஷிங்டன் முதல், அவருக்கப்புறம் வாழையடி வாழையாக வந்த பிரிட்டிஷ் கலெக்டர்களுக்கு நிழல் கொடுத்து வருவது அந்த எட்டயபுரக் கட்டிடம்தான். முன்பு தானுபதிக்குத் தங்குமிடமாக இருந்த புழுதி படிந்த ரோட்டடிக் கட்டிடம் ஜமீன் தலைவருக்கு லபித்ததிலிருந்து, தமது திடீர் திருவிளையாடல்களுக்கும், ஜமீன் பாரம்பரிய வளமுறைகளான வாரீசு வியாச்சியங்களுக்கும் ஜில்லாத் தலைநகரை நாடும்போதும் உபயோகமாகி வந்து, இப்போது அவரது அடியார்க்கு மடியார்க்கு மடியார்களின் திருட்டு விளையாடல்களுக்கு ஒத்தாசை செய்து வருகிறது.

சுலோசன முதலியார் பாலம், பிறகு அவரது ஞாபக ஸ்தூபி, முன்பு எந்தக் காரியத்துக்குக் கட்டப்பட்டது என்ற நினைவற்றுப்

போன ஒற்றையறைக் காரைக் கட்டிடம் - இவற்றிற்கு எதிரே பாதாள லோகப் பாதை மாதிரி ரஸ்தாவிலிருந்து ஒரு கிளைப்பாதை திடுதிடுப்பென்று இறங்கும். எதிரேயுள்ள காரைச் சுற்றுச் சுவருக்கு ஊடே, இருள் மண்டிக் கவியும் ஆலமரத்துக்கு மறைவில் தென்படும் வாசல் வழியாக, சர்க்கார் ரஸ்தாவை விட அடிக்கடி பழுது பார்க்கப்பட்டு, ரொம்பவும் சுத்தமாகவும் உள்ள பாதை வளைந்து வளைந்து செல்கிறது. இரண்டு பக்கமும் கொடுக்காப்புளிக் கன்றுகள் அடர்த்தியாக வளர்த்து, ஒரு ஆள் உயரத்துக்கு மட்டமாகக் கத்தரித்து விடப்பட்டிருக்கும். இந்தப் பாதையின் போக்குப்படி வளைந்து வளைந்து சென்றால், "என்னடா, எல்லையில்லாத் தூரம், எல்லையில்லாக் கோணல்!" என்று மனச் சோர்வு தட்டும் கட்டத்தில் திடீரென்று வளையும் திருப்பம் விஸ்தாரமான புல்வெளியும், சூரிய காந்தியும், சிவப்புக் கல்வாழையும் நிறையப் பூத்துச் சொரியும் பிரமாண்டமான ஒரு கட்டிடத்தை நமது கட்புலனுக்குக் கொண்டு வரும். அதுதான் திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் பங்களா. முன் வராண்டாவில் நாற்காலிகள் உண்டு. அது காலியாக இருக்கும். அதற்கு அருகில் டவாலி போட்ட சேவகன் உட்கார்ந்து, சுவரோட்டை வழியாக வரும் பங்காக் கயிற்றைப் பிடித்து அசைத்துக்கொண்டிருப்பான். வாசல் அருகே வேறு இரண்டு டலாயத்துக்கள் வெள்ளித் தடி பிடித்து, பெரிய தலைப்பாகை கட்டி நிற்பார்கள். இவர்களது வேலையெல்லாம் யாரானாலும் உள்ளே புகவிடாமல் தடை செய்வதுதான். கறுப்பர்களானால் இவர்கள் நிச்சயம் உள்ளே விடமாட்டார்கள். வெள்ளைக்காரர்கள் வந்தால், 'துரைக்கு'ப்பிரியமில்லாதவரானால் உள்ளே விட்டுவிட்டு, திட்டோ, உதையோ வாங்கிக்கொள்வதைப் பொருட்படுத்த மாட்டார்கள். இவர்கள் பல கலெக்டர்களைக் கண்டவர்கள். வருவோர் போவோர் கலெக்டர்கள்தான்; இவர்கள் நித்ய வஸ்துக்கள்; சாட்சாத் கடவுளர்கள்! கலெக்டராக வந்தவர் புதியவராக இருந்தால், அவரது போக்கு இன்ன மாதிரிதான் என 'அத்துபடி' யாகும் வரை தலை போகும் காரியமாயினும் யாரையும் உள்ளே விடமாட்டார்கள். உள்ளே விட்டபிறகு, உதை கிடைத்தால் வாங்குவது யார்? வந்தவர்களுக்கென்ன? சமயம் சரியாயில்லை என்று வசவை வாரிக் கட்டிக்கொண்டு, மீண்டும்-பிறகு-முற்றுகையிட வாபஸாகி விடுவார்கள்.

புதுக் கலெக்டரான ஜான் ஸாமுவேல் எவரட் பர்டர்ட் போக்கே இவர்களுக்குப் பிடிபடவில்லை. இவருக்கு, வந்த நாலைந்து தினங்களுக்குள்ளாகவே, 'கடுவா பர்டட் துரை' என்று நாமகரணமாயிற்று. கலெக்டராபீஸிலும், மேலரத வீதி கிட்டங்கி முதலாளிகளிடையிலும் கடுவா பர்டட் என்ற பாஷைப் பிரயோகம் சர்க்கார் நோட்டு மாதிரி செலாவணியாகி வருகிறதென்றாலும், அந்தப்

புதுப் பெயர் வைத்த பண்டிதர்கள் வாசல் காக்கும் சப்ராஸிகள் தான் என்பது யாருக்கும் தெரியாது.

ஜான் எவரட் பர்டர்ட் வறட்டு வெள்ளைக்காரர் அல்ல. காமன்ஸ் சபையில் கபடு, சூது அற்றிருந்தற்காக, ஷெல்டன் ஆன்ட் வீட் தொகுதி வாக்காளர்கள் மறுபடியும் தெரிந்தெடுத்து வந்த ஸாமுவேல் எவரட் பர்டர்டின் கடைசிமகன். லிபரல் கட்சிக்கு இவர் வெற்றிபெறுவார் என்பதில் நம்பிக்கை உண்டு. இவருக்கு லிபரல் கொள்கையில் நம்பிக்கை உண்டு. இப்படியாக, ஒரு உப கேள்வி கூடக் கேட்காமலும், வலுக்கட்டாயமாகக் குடத்து விளக்குப் போலும் இருந்துவந்த ஸாமுவேல் எவரட் பர்டர்ட் வாலிப தசையில் மான்செஸ்டர் துணி முதலாளி ஒருவரின் மகளைக் கலியாணம் செய்து கொண்டு அரசியலில் இறங்கினர். மாமனர் முதலில் அவரை கன்ஸர்வேட்டிவ் கட்சி மூலம் காமன்ஸ் சபைக்குள் சேர்ப்பித்தார். வாலிப ஸாமுவேலுக்கு ஜோஸப் சேம்பர்லேனுடைய லிபரல் கொள்கையும் தொடர்பும் பிடித்துப்போனது மாமனருடைய கோபத்துக்கு அவரை ஆளாக்கியது. ஷெல்டன் ஆன் ட்வீட் என்ற ஊரில் லிபரல் கட்சி அபேட்சகராக நின்ருர். வெற்றி பெற்ருர். பிறகு ஊரில் குடி புகுந்தார். ஊர்க்காரர்கள் நம்பிக்கைக்குப் பாத்திர மாகும்படி நடந்துகொண்டார். காமன்ஸ் சபை ஸ்தானம் உறுதியா யிற்று. தேர்தல்கள் என்பதெல்லாம் எப்போதோ ஒரு தடவை எழுந்திருந்து, சற்று நாற்காலியைத் துடைத்துக்கொண்டு உட்காரும் வியவகாரமாயிற்று. தொகுதிக்கே எவரட் பர்டர்ட் தொகுதி என்ற பெயர் வந்தது. ஷெல்டன் ஆன் ட்வீட் தொகுதி என்ற ஒன்று இருக்கிறது என்ற விஷயம் காமன்ஸ் சபை தொகுதிவாரி ஜாப்தா வில்தான் உண்டு. மற்றப்படி எவரட் பர்டர்ட் தொகுதிதான். காமன்ஸ் சபையின் சாசுவத மெம்பராக இருந்து வந்த எவரட் பர்டர்ட்டின் கட்சி பக்தி அவருக்கு ஒரு 'ஸர்' பட்டத்தை வாங்கிக் கொடுத்ததுதான் மிச்சம். கடைசி மகன் ஜான் எவரட் பர்டர்ட் வெள்ளைக்காரர்களின் புத்திரர்கள் நாலெட்டுத் திக்கிலும் சென்று, வெள்ளைக்காரர்களுக்கு மட்டும் எனக் கருத வேண்டிய நாகரிக வசதிகள் எல்லாம் பெறுவதற்கு முற்படும் போது, ஆப்பிரிக்காவில் போயர் யுத்தம் முடிவடைந்த சமயம். ஐ. ஸி. எஸ். பரீட்சை பாஸ் பண்ணி விட்டு, சென்னை மாகாணத்தில் பிரிட்டிஷ் ஆட்சியைக் காத்து நிற்க உத்தரவு வாங்கி வரும் போது 'ஹோம் ரூல்' இயக்கம் பிரமாதப்பட்டது.

'ஹோம் ரூல்' என்ற வார்த்தையைச் சொல்லுகிறவர்களும், 'வந்தே மாதரம்' என்ற வார்த்தையை உச்சரிக்கிறவர்களும் ஜெயிலுக்குப் போக வேண்டும். அன்னி பெஸண்டின் பிரசங்கத்தைப் பத்தி பத்தியாய் இங்கிலீஷில் படித்தார்கள்; சந்தர்ப்பம் கிடைத்தால் போய்க் கேட்டார்கள். அவளுடைய இங்கிலீஷ் நடையைப்பற்றி

மெச்சினார்கள். சனாதன பக்தியைப் புகழ்ந்தார்கள். கிடைத்த உத்தியோகத்தை விட்டு, மேலுத்தியோகத்துக்குப் போகவும், புது உத்தியோகம் தேடவும் காக்காய் பிடித்துக்கொண்டிருந்தார்கள்.

அந்தக்காலத்தில்தான் ஸ்ரீ எ. யு. பெருமாள் பிள்ளை தம் தாலுகா எல்லைக்குள் நிர்த்தாட்சண்யமாக யூனியன் ஜாக் கொடியைப் பறக்க விட்டுக் கொண்டிருந்தார். முதல் முதலாக சப்கலெக்டராக நியமிக்கப்பட்ட ஜான் எவரட் பர்டார்ட்டுக்கு ஸ்தல நிர்வாக நெளிவு சுளுவுகளும் 'வா போ' என்ற பதப்பிரயோகமும் கற்றுக்கொடுத்ததுடன், கணக்கனும் மணியமும் சேர்ந்துகொண்டு சர்க்காரை எப்படி ஏமாற்றக்கூடும் என்பதைச் சொல்லிக்கொடுத்ததுடன், கணக்கனும், மணியமும் ஒன்று சேர்வது என்பது சூரிய சந்திரர்கள் சேர்ந்து உதயமாவதற்குச் சமம் என்றும் சொல்லிக் கொடுத்து விட்டார். பிறகு எவர்ட் பர்டார்ட் அதிகாரம் பண்ணுவதற்குக் கேட்பானேன்? முதலில் தீட்டின மரத்திலேயே கூர் பார்ப்பதுபோல, பெருமாள்பிள்ளையையே 'எக்ஸ்பிளனேஷன்' கேட்டான். விவகாரத்தைச் சீக்கிரம் புரிந்துகொள்ளும் சக்தி எவரட் பர்டார்ட்டுக்கு உண்டு என்பதைத்தான் இந்த 'எக்ஸ்பிளனேஷன்' தடபுடல் காட்டியது. பெருமாள் பிள்ளை பெரிய பெருச்சாளி; அவ்வளவு லேசில் பொறிக்குள் மாட்டிக்கொள்ளுவாரா! சுற்றி வளைந்து வேறு ஏதோ பதில் சொல்லி, விஷயத்தைக் குழப்பி தகராறு என்ன என்பதே தெரியாதபடி அடித்து விட்டார். இவ்வளவு மோதிக்கொண்டாலும் இரண்டு பேரும் பரஸ்பரம் ஒருவர் மேலொருவர் மதிப்பு வைத்திருந்தனர். இல்லாவிட்டால் பெருமாள்பிள்ளை மகனையும் கூட்டிக் கொண்டு வந்து பங்களா வாசலில் காத்துக் கிடப்பாரா?

சட்டை செய்யாத சப்ராசிகளைக் காண, சுப்பிரமணியத்துக்குக் கோபம் கோபமாக வந்தது. 'மாஜி சர்க்கார் உத்தியோகஸ்தரிடம் அசிரத்தையா' என்று அவனுக்குக் கோபம். கலெக்டர்கள் சப்ராசிகளிடம் எப்படி யெல்லாம் நடந்து கொள்வார்கள் என்பது அவனுக்குத் தெரியாது. விஸிட்டிங் கார்டைக் கொண்டு போய்க்கொடுத்தால், மூஞ்சியில் காறித் துப்பி, கையில் கிடைத்ததை விட்டெறியும் கலெக்டர்களும் உண்டு. இப்படிப்பட்ட ரகம் குடிகார ஜாதி என்பது அவசியமில்லை. சப்ராசி என்ன இவ்வளவு அயோக்கியத்தனம் பண்ணுகிறானே என்று நினைப்பது எவ்வளவு தப்போ, அவ்வளவு தப்பு கலெக்டர் குடிகாரன் என்று நினைப்பதும். அதிகாரம் எனத் தப்பிதமாக எதையோ கற்பனை செய்துகொண்டு விகாரமான முறையில் நடந்து கொள்ளுகிறார்களே தவிர, அவர்களில் நூற்றுக்குப் பத்து முரடர்களோ, அயோக்கியர்களோ அல்ல. பெண்டாட்டியை—அதாவது துரைசானியைக் கண்டால் பெட்டிப் பாம்பாக நடுங்குவார்கள். அடைமழையில் உதகைக்கோ, 'ஹோமு'க் கோ(தாய் நாடான பிரிட்டிஷ் தீவுகளுக்கு வெள்ளைக்காரனின் இடு

குறிப்பெயர்) புறப்படவேண்டும் என்று கொடி கட்டினல் அந்த உத்தரவுக்கு அப்பீல் கிடையாது.

ஜான் எவரட் பர்டர்ட்டுக்கு துரைசானி தொல்லை கிடையாது. வாலிப முடுக்கில் இருந்த படபடப்பு இப்பொழுது உறுதியாக மாறிவிட்டது. கோபப்படுவதற்கு என்று குரலை மாற்றிக்கொள்ளும் அவசியம் அவனுக்குக் கிடையாது. அவன் சாதாரணமாகப் பேசுவதைக் கண்டாலே சப்ராசிகள் நடுநடுங்குவார்கள். பெருமாள் பிள்ளையின் விஸிட்டிங் கார்ட் கலெக்டர் அறைக்குள் எட்டாமல் தயங்கியதற்குக் காரணம் வேறு எதுவும் அல்ல.

ஸ்தல பிளாண்டர்கள் (தோட்ட முதலாளிகள்) சங்கக் காரியதரிசியான ஒரு வெள்ளைக்காரன் திடுதிடு வென்று "ஜானி! ஜானி!" என்று கூப்பிட்டபடி குடிவெறியில் பாட்டுப் பாடிக்கொண்டு புகும்படி சப்ராசிகள் விட்டுவிட்டதற்காக அவர்கள் பட்ட அவஸ்தைதான் காரணம். "யாரானுல் உனக்கென்ன?" என்பதுதான் பல்லவி. ஒரு மணி நேரம் உட்கார்ந்துகொண்டு சப்ராஸிகளைத் தன் சொந்த முறைகளைப் பிரயோகித்துக் கண்டித்தான். அடியும் உதையும் ஏச்சும் இரைச்சலும் இல்லாமல் ஆட்களை நடுநடுங்க வைப்பதற்கு அவனுக்குத் தெரியும். அதை சப்ராசிகள் அன்று கண்டுகொண்டார்கள்.

சாயங்காலம் தேயிலை அருந்தி விட்டு, கையில் ஒரு நாவலுடன் வெளியே பங்களா மைதானத்தில் உலாவ வந்த ஜான் எவரட் பர்டர்ட் கண்களில் 'வசன'மிருப்பது போல உட்கார்ந்திருக்கும் பெருமாள் குடும்பம் பட்டது.

"முருகேன்!" என்று அதட்டிக் கூப்பிட்டார் கலெக்டர்.

"ஸார்!" என்று பதறிக்கொண்டு ஓடி வந்தான் முருகன்.

"இவர்கள் வந்து எத்தனை நேரமாச்சு?" என்று அதட்டினர்.

"எனக்கு ட்யூட்டி நாலு மணியிலிருந்துதான். வந்த போதே இவர்கள் உட்கார்ந்திருக்கிருர்கள்" என்ருன் முருகன்.

"இப்பொழுது மணி என்ன?"

"ஐந்தே முக்கால்"

"நான் யாரையாவது இவ்வளவு நேரம் காத்திருக்க வைப்பதுண்டா?" முருகன் மவுனமாக நின்ருன்.

"என்ன மேன்! பேசாமே இருக்கிறே? நீ அவுங்க கிட்டே கேட்டியா, அல்லது என்கிட்டே சொன்னியா?"

"சுப்பையா சொல்லி...." என்று ஏதோ முணுமுணுத்தான் முருகன்.

"சுப்பையா!" என்று அழுத்தி ஒரு தடவை சொல்லிவிட்டு, "நீ உன் டயரியிலே பத்து ரூபா அபராதம் என்று எழுதிக்கொள்!" என்று

சொல்லிவிட்டு, திடுக்கிட்டு நின்றவனைக் கவனியாமலே, "ஹல்லோ மிஸ்டர் பெருமாள்! எனக்கு ரொம்ப சங்கடமாப் போச்சு. நீங்க உள்ளே வாருங்க" என்று உள்ளே அழைத்துச் சென்றார்.

இவர்களுடன் பேசும்போது அந்தச் சீற்றத்தின் சுவடுகூடத் தென்படவில்லை. அவ்வளவு மரியாதை.

சுப்பிரமணியனுக்குத் தங்கள் சார்பாக நடந்த இந்த அபராத நாடகம் ஏதோ ஒரு மாதிரியாக இருந்தது. எதற்கெடுத்தாலும் அதிகாரம்; மிடுக்கு. இத்தனையும் யாருக்காக? எதற்காக?....

"இப்பொழுது சவுக்கியம் எப்படி? இது உன் மகனா?" என்று கேட்டார் கலெக்டர்.

உள்ளே வந்து உட்கார்ந்ததும், சுத்தமான தமிழ் பேசுவதைக் கண்டதும் ஆச்சரியப் பட்டான் சுப்பிரமணியம்.

"நான் தமிழ் பேசுவது உனக்கு அதிசயமாக இருக்கிறதா? நான் குறள்கூட, பாராமல் சொல்லுவேன்" என்று சிரித்தார் கலெக்டர்.

*"ஹி இஸ் என் எக்ஸ்பர்ட் லிங்க்பிஸ்ட்!" என்று இங்கிலீஷில் தமது கலெக்டருடைய பாஷா விலாசத்தை வியாக்கியானம் செய்தார் பெருமாள் பிள்ளை.

"அவரை எனக்குப் பரிசயம் செய்து வைக்கவில்லையே" என்றார் கலெக்டர்.

"என் மகன் சுப்பிரமணியம்; என் சீப் (தலைவர்) ஜான் எவர்ட் பர்டட்" என்றார் பெருமாள் பிள்ளை.

"நீங்க அவசரப் படாமல் இருந்திருந்தால் இதற்குள் செக்ரட்டேரியட்டுக்கு வந்திருக்கலாம்" என்று பழைய நினைப்புக்களை குத்திக் கிளறினார் கலெக்டர்.

"என் உடம்பு தளர்ந்து போச்சு; மேலும் நான் ஒரு புஸ்தகம் எழுத ஆசைப்பட்டேன்" என்றார் பெருமாள் பிள்ளை.

"புஸ்தகமா? என்ன புஸ்தகம்?" என்றார் கலெக்டர்.

"உலக சித்தாந்த சாஸ்திரங்களின் சரித்திரம்" என்றார் பிள்ளை.

"சித்தாந்தமா?" என்று வாய்விட்டு விழுந்து விழுந்து சிரித்தார் கலெக்டர்.

தகப்பனார் புஸ்தகம் எழுத ஆசைப்படுகிறார் என்பது முதல் அதிசயம். அதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது என்ற இரண்டாவது அதிசயம். சுப்பிரமணியனுக்குத் தலையைக் கிறங்க வைத்தது.

"ஊரையே சுட்டுப் பொசுக்கு என்று ஆர்ப்பாட்டம் பண்ணின பெருமாள் பிள்ளையா சித்தாந்தம் எழுதப் போகிறார்?" என்று சொல்லிவிட்டு மறுபடியும் சிரித்தார் கலெக்டர்.

"அது வாலிபத்தில், சர்க்காருக்காக — நான் என்ன நியாயத்

---

* அவர் பாஷைப் பாண்டித்தியம் நிறைந்த நிபுணர்.

தப்பாக நடந்துகொண்டேன்? மார்க்கஸ் அரிலஸ் எழுதினபோது, நான் எழுதக்கூடாதா?" என்றார் பெருமாள் பிள்ளை.

"புஸ்தகம் எவ்வளவு தூரம் எழுதி முடிந்திருக்கிறது?" என்றார் கலெக்டர்.

"இன்னும் ஆரம்பிக்கவில்லை. படித்து, குறிப்பு எழுதி வருகிறேன். அது முடியவே இன்னும் ஐந்து வருஷங்கள் ஆகும். அதன் பிறகு எழுத வேண்டும்" என்றார் பெருமாள் பிள்ளை.

தகப்பனரின் ஹிமாசலத் திட்டம் சுப்பிரமணியத்துக்கு தூக்கி வாரிப் போட்டது. எவ்வளவு சாவதானம்! வாழ்வின் அஸ்தமான காலத்திலிருந்துகொண்டு ஐந்து வருஷங்கள் குறிப்பெடுக்கவும், அப்புறம் அகஸ்தியன் சப்த சமுத்திரத்தையும் குடித்ததைப்போல புஸ்தகம் எழுதுவதும் – என்ன நம்பிக்கை! தகப்பனர் பிரமாதமான மனிதர் என்பது அவனுக்கு இன்றுதான் தெரிந்தது. தப்போ சரியோ? எவ்வளவு தெம்பு! எவ்வளவு நம்பிக்கை!

"உங்கள் மகனும் பிலாஸபிதான் (தத்துவம்) பி. ஏ. க்குப் படித்தாரா?" என்று கேட்டார் கலெக்டர்.

"இல்லை இல்லை. சரித்திரமும் ராஜீய சாஸ்திரமும்" என்றான் சுப்பிரமணியம்.

"நான் உன்னைக் கேட்கவில்லையே. உனக்கு ரொம்ப 'பாலிடிக்ஸ்' தெரியுமாக்கும்!" என்றார் கலெக்டர்.

"அவன் பி. ஏ. யிலே முதல் வகுப்பில் பாஸ் செய்திருக்கிறான்" என்றார் பெருமாள் பிள்ளை.

"அப்பொழுது சுதந்திரம் என்றால் என்னவென்று தெரியுமா?" என்றார் கலெக்டர்.

"எதிர்பார்க்கப்படாத இடத்தில் பேசாமல் இருப்பது!" என்றான் சுப்பிரமணியம்.

சிறுவனுக்குத் தனது முந்திய வார்த்தைகள் ரொம்பவும் துன்பப் படுத்திவிட்டன என்பதைக் கண்டுகொண்ட கலெக்டர், எழுந்து வந்து அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு, "நிஜமாக நான் வருத்தப் படுகிறேன்" என்று வருத்தப்பட்டுக் கொண்டார்.

"சிறுவன்தானே. அதொன்றும் பிரமாதமில்லை. அவனுக்காக நீங்கள் வருத்தப்படுவதாவது? நல்ல வேடிக்கை!" என்றார் பெருமாள் பிள்ளை.

"என் இவரை ஐ. ஸி. எஸ்-க்கு அனுப்பக்கூடாது. ரொம்பக் கெட்டிக்காரராகத் தோணுகிறதே, ரொம்பக் கூச்சம்போலத் தெரிகிறது. அதிகாரத்தைக் கையில் கொடுத்தால் எல்லாம் சரியாகப் போய்விடும்" என்றார் கலெக்டர்.

"ஐ. ஸி. எஸ்-க்கு என்றால் என் குடும்ப நிலைக்கு ஒத்துவராது.

இவனுடைய தாயார் ஒரு வியாதியஸ்தி. இவன் எப்பொழுதும் அருகிலேயே இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறவள். இவன் வேலையே பார்க்காமல் வீட்டோடு இருந்தாலும் அவளுக்குத் திருப்தி. ஆனால் எனக்கு என் குடும்பத்திலிருந்து யாராவது ஒருத்தர் சர்வீஸிலிருக்க வேண்டும் என்பது என் ஆசை. இந்தியர்கள் வேறு எந்தமாதிரி விசுவாசத்தைக் காட்டமுடியும், இந்த காலத்திலே....'' என்று முடுக்கிவிட்ட அலாரம் டைம்பீஸ் மாதிரி பேச ஆரம்பித்தார் பெருமாள் பிள்ளை.

கலெக்டர் அதற்கு விட்டுக் கொடுக்காமல், "உனக்கு – இந்த நாட்டில் தோன்றி இருக்கிறதே, சுதந்திர இயக்கம். அதைப்பற்றி என்ன நினைக்கிறாய்?'' என்று கேட்டார் கலெக்டர்.

"நான் அவ்வளவாக ஈடுபட்டதில்லை. படிப்பைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது என்றிருந்தேன். சுதந்திரம் எல்லோருக்கும் இயற்கைதானே'' என்றான் சுப்பிரமணியம்.

"சுதந்திரம் இயற்கை அல்ல. மனிதனுக்கு இரண்டுவித குணங்கள்தான் உண்டு. ஒன்று அதிகாரத் திமிர்; இரண்டாவது கட்டின சங்கிலிக்குப் பூமாலை போட்டுப் பூசை பண்ணுவது. அடிமைத் தனத்திலே அதிகாரத்தை வைத்திருப்பவன் சாதாரண க்ஷேமத்தைக் காப்பாற்றித் தருகிறான். சாதாரண மனிதருக்கு க்ஷேமந்தானே மோட்சம். அதனால்தான் ஆள முடிகிறது....''

''நிஜமான க்ஷேமத்துக்காக சாதாரண மக்கள்கூட சாதாரண க்ஷேமத்தை விட்டுக்கொடுப்பார்களே....'' என்று கலெக்டரின் தர்க்கத்தை பின்பற்ற முயன்றான் சுப்பிரமணியம்.

"எதிர்வாதம் பண்ணாதே. கலெக்டர்வாள் சொல்வதுதான் சரி!'' என்று ஒரு போடு போட்டார் பெருமாள் பிள்ளை.

'தகப்பனார் ஏன் இப்படி வியவகார நியாயத்தையும் உதறித் தள்ளிவிட்டு, கலெக்டர் ஆட்சியைத் தாங்கிப் பிடிக்கவேண்டும்? இப்படி உத்தியோகம் பார்க்காவிட்டால் என்ன? இவர் இந்த அழகில் உலக சித்தாந்தங்களின் சரித்திரத்தை எப்படி நடு நிலைமையோடு நின்று அடித்துப் பேசப் போகிறார்?' என்று எண்ணினான் சுப்பிரமணியம்.

"சுப்பிரமணியத்தை முதலில் என் பெர்ஸனல் (சொந்த) குமாஸ்தாவாக நியமிக்கலாம் என்று நினைக்கிறேன். வந்திருந்து கொண்டு டெஸ்ட் எதுவும் பாஸ் செய்தால் போகிறது'' என்றார் கலெக்டர்.

"ரொம்ப தாங்க்ஸ்!'' என்றார் பெருமாள் பிள்ளை.

"என்ன சுப்பிரமணியம்? திருப்திதானே!''

"என்ன! எனக்கா? கதை யோசித்துச் சொல்ல வேண்டும்''

என்றான் சுப்பிரமணியம்.

"முட்டாள்!" என்றார் கலெக்டர்.

"நாளை முதற்கொண்டு வேண்டுமானாலும் அவனை அனுப்பி வைக்கிறேன்" என்றார் பெருமாள் பிள்ளை.

"நான் எழுதுகிறேன். நாளைக்கு முதல் ஜில்லா முழுவதும் முகாம் போகப் போகிறேன். அவசரம் ஒன்றுமில்லை. மிஸ்டர் பெருமாள்! உங்கள் புஸ்தகத்தைப் படிக்க ரொம்ப ஆசை. அச்சடித்ததும் முதல் காப்பி எனக்கு அனுப்புங்கள்" என்றார் கலெக்டர்.

பெருமாள் பிள்ளைக்கு உச்சி குளிர்ந்து விட்டது. கலெக்டராகப் பார்த்து தம் புஸ்தகத்தை, அதிலும் எழுதாத புஸ்தகத்தைப் பற்றி ஆசைப்படுவதைக் கண்டு ஒரே பரவசம்.

சுப்பிரமணியனுக்கு கலெக்டர் ஏளனம் பண்ணுகிற மாதிரி பட்டது. இந்தியாவில் ஏதாவது ஒரு மூலையில் இருபது வருஷம் ஜபர்தஸ்து பண்ணிவிட்டு, சீமைக்குப் போனதும் கன்னாபின்னாவென்று எழுதுவதற்கு வெள்ளைக்காரருக்கு மட்டும்தான் தனிப்பட்ட உரிமையோ என்று மனசு கேள்வி கேட்டது. தகப்பனாருடைய புஸ்தகத்தை பழிக்குப்பழி என்று மட்டும் ஒப்புக்கொள்ள அவனுக்கு மனம் வரவில்லை என்றாலும், பழிக்குப் பழியாகவே ஏன் இருக்கக் கூடாது என்று அவனுடைய மனசு பிடிவாதம் பண்ணியது.

கலெக்டர் மேஜையிலிருந்த மணியை அடித்தார். முருகன் வந்து நின்றான்.

"டீ கொண்டு வரச்சொல்லட்டுமா?" என்றார் கலெக்டர்.

"நான் இப்போது வைதீகமாகிவிட்டேன். ஓரிடத்திலும் சாப்பிடுவதில்லை; மன்னிக்கவேண்டும்" என்றார் பெருமாள் பிள்ளை.

"அப்பொழுது நான் இப்போது உங்களுக்குத் தீண்டாதவனாக ஆகிவிட்டேனா?" என்றார் கலெக்டர்.

"நீங்கள் அப்படியல்ல; உங்கள் பட்லர் எங்களூர்ப் பள்ளன். அதனாலே...." என்று விளக்கினான் சுப்பிரமணியன்.

சிரித்துக் கொண்டே இளநீர் கொண்டு வரும்படி உத்தரவிட்டார்.

சுபபிரமணியன் தாராளமாக ஒரு தம்ளர் இளநீரை விட்டு விட்டு நிறைத்துக் கொண்டான். "என் தகப்பனாருக்கு இளநீர்கூடப் பிடிக்காது" என்று சொல்லிக்கொண்டே அடுத்த தம்ளரையும் எடுத்தான்.

"நீ ரொம்ப கெட்டிக்காரன்!" என்று சிரித்தார் கலெக்டர். கலெக்டரிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு இரண்டுபேரும்

திரும்பி வந்து சேர்மாதேவிக்கு ரயில் ஏறுவதற்குள் பரம சங்கடமாகப் போய்விட்டது. சாயங்காலம் புறப்படும் 6-25 ரயில் புறப்பட்டு விட்டது. இனிமேல் இராத்திரி பத்து மணிக்குத்தான் கடைசி வண்டி.

"நீ ஓட்டலில் போய் ஏதாவது சாப்பிடேன்" என்றார் பெருமாள் பிள்ளை.

"வீட்டுக்குப் போய் பிறகு பார்த்துக்கொள்கிறது. அம்மைக்கு ஒரு மருந்து வாங்கவேண்டும். கடைக்குப் போய்விட்டு வந்து விடுகிறேன். நீங்கள் வெயிட்டிங் ரூமில் இருங்கள்" என்று சொல்லி விட்டுப் புறப்பட்டான் சுப்பிரமணியன். ★

O

**அறம் செய விரும்பு!**

யாழ்ப்பாணம் 'ஈழகேசரி' பத்திரிகை ஆசிரியர் ராஜ அரிய ரத்தினம் சென்னைக்கு வந்திருந்தார். வந்திருந்த இடத்தில் புதுமைப்பித்தனை ஜோதி நிலையப் பிரசுராலயத்தில் சந்தித்தார். அப்போது ஜோதி நிலையத்தில் புதுமைப்பித்தன் மொழிபெயர்த்திருந்த 'பிரேத மனிதன்' வெளிவந்திருந்தது. அதில் ஒரு பிரதியை எடுத்து ஈழகேசரி அரியரத்தினத்திடம் அன்பளிப்பாகக் கொடுத்தார் புதுமைப்பித்தன். அப்படிக் கொடுக்கும் போது அதில் கைப்பட ஒன்றை எழுதிக் கொடுத்தார்.

அவர் எழுதிக் கொடுத்தது இது தான்:

" 'அறம் செய விரும்பு'—ஆனால் செய்யாதே! "

(புதுமைப்பித்தன் வரலாறு)

**ரகர றகர விவகாரம்.**

'கலைமகள்' பத்திரிகையில் புத்தக மதிப்புரைப் பகுதியை 'உரைகல்' என்ற தலைப்பில் வெளியிட்டு வந்தார்கள். அது பற்றிச் சில இலக்கிய கர்த்தாக்களுக்குள் ஏதோ பேச்செழுந்தது. முடிவில் உரைகல் என்ற சொல்லில் வரும் ரகரம் வல்லின 'ற'கரமா, இடையின 'ர'கரமா என்று ஒருவர் ஒரு சந்தேகத்தைக் கிளப்பினார். புதுமைப்பித்தன் சிறிதும் யோசிக்காமல் "வல்லினம்தான்" என்று கூறினார்.

உடனே சந்தேகத்தைக் கிளப்பிய அதே அன்பர், "அது எப்படி? உராய்தல் என்பதிலிருந்து தானே உரைத்தல் வந்திருக்க வேண்டும்!" என்றார்.

புதுமைப்பித்தன் உடனேயே தம் தவற்றை உணர்ந்து கொண்டார். ஆனாலும் தோல்வியை ஒப்புக்கொள்ளவில்லை.

"வாஸ்தவம்தான்! ஆனால் கொஞ்சம் அழுத்தித் தேய்த்தால்?" என்று ஒரு போடு போட்டார். 'ர' வை அழுத்திக் கூறினால் 'ற' தானே!

(புதுமைப்பித்தன் வரலாறு)

**இன்றைய சமுதாய அமைப்பில் பணம் படைத்தவன்தான் பாக்கியவான். ஆனால் இந்தப் பாக்கியவான்களின் பிடியில் சிக்கி, கலைகளும் காவியங்களும் படுகிற பாடு—? கலையுணர்ச்சியைக் காசைக்கொண்டு அளவிட்டுப் பார்க்கும் இந்தப் பித்துக்குளித்தனம் எப்போது மாறும்? இது பித்துக்குளித்தனம் தானா? அல்லது இதனை பித்துக்குளித்தனம் என்று எண்ணி ஏமாறுகின்ற நாம் தான் பித்துக்குளிகளா?**

# பித்துக்குளி

•

**ஜயகாந்தன்**

•

நானும் எனது நண்பரும் பல விதமான வாதப் பிரதிவாதங்களுக்குப் பிறகு அந்த முடிவுக்கு வந்தோம்.

நான் வேண்டாம் என்னும் பொழுது "அதற்கென்ன, முயன்று பார்ப்போமே, இதனால் நமது கௌரவம் என்ன கெட்டுவிடப் போகிறது?" என்பார் நண்பர். நான் "சரி" என்னும் போது, "சே...இருந்தாலும் அது மோசம்தான்" என்பார் நண்பர். இருவரும் சேர்ந்து போவது என்று தீர்மானித்து விட்ட பிறகு "பார்த்தீரா...காலம் நம்மைப் போகக் கூடாத இடங்களுக்கெல்லாம் போக வைக்கிறதே" என்று இருவரும் சலிப்புடன் முனகிக் கொண்டு காலத்தைப்பற்றிப் பிரலாபிக்க ஆரம்பித்து விடுவோம்.

இப்படியாக, வாதி – பிரதிவாதியாகவும், எதிர் தரப்பு வக்கீல் – பப்ளிக் பிராசிக்யூடராகவும் மாறி விவாதித்துக் கடைசியில் 'போகத்தான் போவது' என்று முடிவு செய்து கொண்டோம்.

அந்த முடிவின்படி மறுநாள் காலை நானும் நண்பரும் புரொட்யூஸர் புருஷோத்தம ராவைச் சந்திக்கக் கிளம்பினோம்.

புரொட்யூஸர் புருஷோத்தம ராவுக்கு தமிழ் எழுதப் படிக்கத் தெரியா விட்டாலும் தமிழ் பேசத் தெரியும். அது மெட்ராஸ் தமிழோ திருநெல்வேலித் தமிழோ அல்லாத ஆங்கிலம் கலந்த அலாதியான ஆந்திரத் தமிழ்தான்.

புருஷோத்தம ராவுக்கு தமிழ் தெரியா விட்டால் என்ன? தமிழில் அவர் எடுத்த படங்களுக்கு அதிக வசூல் கிடைத்தது உண்மை! தமிழ்ப் படவுலகில் அவர்தான் சிறந்த படாதிபதி என்பதும் உண்மை!

புருஷோத்தம ராவ் அடுத்து எடுக்க விருக்கும் படத்துக்குக் கதை தேவையாம். ஆமாம்; சினிமா உலகில் கதையைப் படம் எடுப்பது வழக்கமில்லை. படத்துக்குத்தான் கதை! அதாவது அவரிடம் இரண்டு நல்ல ஜாதி நாய்க் குட்டியோ, அல்லது 'நல்ல முக வெட்டு'டைய இரு சகோதரிகளோ, அல்லது அவரது 'அபிமான'த்துக்கும் 'ஆதரவு'க்குமுரிய இரண்டு நட்சத்

> "ஒருவனை அளந்து நிறுப்பதற்கு அவனை வேறு யாருடனும் ஒப்பிட்டுப் பார்ப்பது தவறு. அவனுடைய வேலைகள், ஆசைகள், சாதனைகள் யாவுமே அளவு கோல்கள்"
>
> **புதுமைப்பித்தன்**
> **(பேஸிஸ்ட் ஜடாமுனி)**

திரங்களோ இருப்பார்கள். கைவசமுள்ள அந்தச் சரக்குகளுக்கேற்ப, கதையில், பாத்திர சிருஷ்டி இருக்க வேண்டும். மூன்று இடங்களில்—அவர் வாக்களித்து விட்ட எக்ஸ்ட்ரா நடிகைகளின் அபிலாஷைகள் பூர்த்தியாகும் வண்ணம் 'குரூப் டான்ஸ்' களுக்கு 'சேன்ஸ்' இருக்க வேண்டும். இப்படிப் பல விதங்களில் செருப்புக்குத் தக்கவாறு காலைத் தறித்துக் கதை எழுத வேண்டுமென்று நண்பரொருவர் என்னிடம் கூறினார். (நண்பர் ஏற்கெனவே சூடு கண்ட பூனை).

இன்னிக்குத் தேதியில் கதையுலகின் வாரிசு நாங்கள்தான் என்றோ, தமிழ் நாட்டின் தலைசிறந்த நாடக, வசன எழுத்தாளர்களும் நாங்கள்தான் என்றோ, எங்கள் தலையில் நாங்களே அட்சதையைப் போட்டுக்கொண்டு, எங்களின் திவ்ய மலர்ப்பாதங்களைத் தொட்டு, எங்கள் திருநயனங்களில் நாங்களே ஒற்றிக் கொள்ளாவிட்டாலும் — ''நாங்களும் கதை யெழுதுவோம்; நன்றாகவே எழுதுவோம்; கதையாகவே எழுதுவோம்'' என்று சொல்லிக்கொள்ளும் தைரியமும், தெம்பும், திராணியும்—அல்லது 'பெரியவாள்'சொல்லும் மண்டைக் கனமும் எங்களுக்கும் கொஞ்சம் உண்டு!

பிழைப்புக்காக எழுதாமல், வாழ்க்கையே அதுவாக இருக்கும் பொழுது 'அது' கூடவா இல்லாது போகும்? இருந்தது; நிறைய இருந்தது.

நண்பர் நாவலொன்றை முடித்து வைத்திருந்தார். நல்ல நாவல். என்னிடம் ஒரு நாடகம் இருந்தது, நாங்கள் என்ன செய்வது? எங்களிடம் பத்திரிகை கூடக் கிடையாதே!

வெறும் பேனா, நயத்துப் போன அப்பளம் மாதிரி 'நியூஸ்பிரிண்ட்' காகிதம்—இதில்தான் நாவல், நாடகம், கவிதை, கதை எல்லாம். எங்கள் இலக்கிய சாம்ராஜ்யமே இதனுள் அடக்கம்.

நாங்கள் வாடகை கொடுக்க முடியாமல் வீட்டுக் கடனுக்கு ஜவாப் சொல்லி வாழ்ந்து வரும் அந்த 6×8 அடிக் குச்சுக்குள் தான் எங்கள் கற்பனை சாம்ராஜ்யம் விரிந்து படர்ந்து வியாபித்தது. — இப்படி எதாவது கனவு கண்டு கொண்டிருந்தால் போதுமா? வாழ வேண்டிய அவசியத்தை வயிறு அல்லவா வற்புறுத்துகிறது! சினிமா உலகம் 'வாரி வழங்கும் வள்ளல்' என்று கேள்விப் பட்டு அங்கே செல்வதென்று முடிவு செய்தோம் சபலம்தான்; சலபம்யாரை விட்டது?

★ ★ ★

**பு**ரொட்யூஸர் புருஷோத்தம ராவைச் சந்திக்க நாங்கள் சென்ற போது எங்களை 'முகம் மலர்ந்து' வரவேற்றவன் காவல்காரக் கூர்க்கா!

பாவம், அவனுக்குத் தமிழ் தெரியுமா? எழுத்து தெரியுமா? தமிழ் எழுத்தாளனைத் தெரிந்துகொண்டு உபசரித்துக் கௌரவிக்க? — அவன் வெறும் 'நாய்'களைத் தானே கண்டிருக்கிறான்! தமிழ் நாட்டிலிருக்கும் கூர்க்காவின் அதிகாரம் எனக்குக் கிடைத்தால் தமிழர்களை ஒரு கை பார்த்துத்தான் விடுவேன். கூர்க்கா அகிம்சா வாதி போலிருக்கிறது. போனால் போகிறது என்று விட்டு விடுகிறான்.

கூர்க்காவின் கெடுபிடியிலிருந்து ஒருவாறு சமாளித்துக்கொண்டு உள்ளே சென்றோம்.

‘புரொட்யூஸர் ஸார்’ அவர்கள் மின்சார விசிறிக்குக் கீழே அட்டகாசமாக அரோகணித்திருந்தார். நண்பரும் நானும் உள்ளே சென்று ‘டமில் ரைட்டர்ஸ்’ என்று சுய அறிமுகம் செய்து கொண்டோம்.

“ஆல்ரைட் ...... உக்காருங்கோ” என்று மேல் நோக்கிச் செல்லும் புகைச் சுருள்களுடன் பேசிக்கொண்டார் புருஷோத்தம ராவ்.

நண்பரும் நானும் உட்கார்ந்தோம். வந்த விஷயத்தைக் கூறினோம். அவர் 555 சிகரெட் புகைச் சுருள்களுடன் அளவளாவிக்கொண்டுஎங்கள் பக்கம் ஒற்றைச் செவியை மடுத்தார்.

பிறகு...

“ஸார், உங்கள் நாவலுக்கு ‘ஸினாப்ஸிஸ்’ (கதைச் சுருக்கம்) ஒன்று எழுதிக்கொடுங்கள்” என்று கட்டளை பிறப்பித்தார்.

“தயாராக வைத்திருக்கிறோம்” என்று நண்பர் தம் ‘பைலை’ப் புரட்டி எடுத்தார்.

“சரி...அதைப் படியுங்கள், கேட்போம்...” என்று தம் ‘கிரேப் ஸோல் ஷூஸ்’ அணிந்த பாதங்களைத் தூக்கி மேசையின்மீது வைத்துக் கொண்டார். எங்கள் முகங்களுக்கு நேராக அல்ல; சற்றுத் தள்ளித்தான்!

நண்பர் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டவர். அவர் முகத் தோற்றம் அவ்வளவு நன்றாக இல்லை. நண்பர் கதைச் சுருக்கத்தை வாசிக்கத் தொடங்கினார். தொடக்கமே நன்றாக இருந்தது. புரொட்யூஸருக்கு நிச்சயம் பிடித்து விடும் என்று நான் நினைத்துக்கொண்டேன்.

‘கிணிங்...கிணிங்’ என்று மேசை மணியை அடித்தார் புரொட்யூஸர்.

நண்பர் படிப்பதை நிறுத்தினார்.

“நீங்க படியுங்கோ ஸார்...!” என்று சொல்லிவிட்டு தம் அருகே நின்று

> “பணக்காரர்களான பூலோக தெய்வங்கள்மீது சமுதாயக் கட்டுப்பாட்டின் ஜம்பம் பலிக்காது...
>
> **புதுமைப்பித்தன்**

சல்யூட் அடித்த பையனிடம், “காப்பி...” என்று வெள்ளைக்கார பாணியில் சொல்லிவிட்டு ஏதோ ஒரு அமெரிக்க சஞ்சிகையின் அரை நிர்வாணப் படத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்து,என்னத்தையோ தேடிக் கொண்டிருந்தார்.

நண்பர் கதைச் சுருக்கத்தைப் படித்து முடித்தார். காப்பி வந்தது மூன்று பேருக்கும் தான்.

நாங்கள் ‘வேண்டாம்’ என்றோம்.

அவர் மிகவும் பிரியத்துடன் உபசரித்து காப்பியைக் குடிக்கச் சொன்னார். காப்பி கசந்தது. எக்ஸ்ட்ரா ஸ்ட்ராங்!

“ஸார், ஒங்க கதை நல்லாத்தான் இருக்கு...ஆனா இந்த மாதிரி ‘சென்டிமெண்ட் படத்துக்கு ஸூட் ஆகாது... ஒங்க பாஷை சுத்தங்கா இருக்கு... ‘அப்கோர்ஸ்’ படம் வேறே... ‘பிலிம் லைனே’ தனி சார்... ‘ஐ வில் கிவ் யூ அனதர் சான்ஸ்’—யூ பிளீஸ் லீவ் யுவர் அட்ரஸ்... ஹியர்” (உங்களுக்கு அடுத்த முறை வாய்ப்பளிக்கிறேன். உங்கள் விலாசத்தைக் கொடுத்து விட்டுப் போங்கள்.)

நண்பரின் விஸ்வாமித்திர சொரூபத்தைக் காண முடியாமல் ‘555’ புகை மண்டலம் வியூகமிட்டது.

டெலிபோன் மணியடித்தது ...

புரொட்யூஸர் கைக் கடிகாரத்தைப் பார்த்தார். “எனக்கு ‘டூட்டு-லெவன், ஷூட்டிங்’ இருக்கு...அடுத்த முறை பார்ப்போம்” என்று தமக்கே உரிய பாணியில் கூறிவிட்டு எழுந்தார்.

வேதம் படித்திடுவோம்;
வெறுங்கை முழம் போட்டிடுவோம்
சாதத்துக்காகச் சங்கரனை
விற்றிடுவோம்;
அத்தனைக்கும் மேலல்லோ
அஹிம்சைக் கதை பேசி
வித்தகனும் காந்தியினை
விற்றுப் பிழைக்கின்றோம்.

— புதுமைப்பித்தன்
(இணையற்ற இந்தியா)

நாங்களும் எழுந்து வெளியே நடந்தோம். எங்களுக்கு முன் அவர் கார் எங்கள் கண்ணில் மண்ணை வாரி விட்டெறிந்தவாறு விரைந்து மறைந்தது.

★ ★ ★

எங்கள் ரூமை நாங்கள் அடையும் பொழுது மற்றொரு 'தலைவலி' அங்கே காத்திருந்தது.

சில்க் ஷர்ட், கையில் 'பைல்' சகிதமாகக் காத்துக்கொண்டிருந்த அந்தத் 'தலைவலி' வீட்டுக்காரர் அல்ல. எழுத்தாளர் பட்டியலில் இடம் தேட 'மடலேறும்' பித்துக்குளி ராமதாஸ்!

ராமதாஸுக்கு எழுதவும் தெரியாது, படிக்கவும் தெரியாது. அவருக்குத் 'தமில் எழுத்தாலராக' மாற இருக்கும் ஆர்வம் சொல்லில் அடங்காது. துப்பறியும் கதை நன்றாக எழுதுவேன் என்று எல்லோரிடமும் சொல்லிக்கொள்ளுவார். சில கத்தைக் காகிதங்களை எப்படியோ எழுதி நிரப்பி வைத்திருப்பார். அநேகமாக ஏதாவது பழைய புத்தகத்திலிருந்து எடுத்து எழுதிய திருட்டுச் சரக்குகளைப் படித்துக் காட்டி நமக்குத் தலைவலியை உண்டாக்குவதில் அவருக்கு அதிகத் திருப்தி! அவரை நாங்கள் என்ன செய்ய முடியும்? ஒரு சமயம் நண்பர் அவரிடம் "எழுதுவதை விட நீங்கள் படிப்பது நல்லது" என்று கூறிவிட்டது தான் தாமதம். "நான் எழுதுவதில் அவருக்குப் பொறாமை!" என்று ஊர் பூராவும் சொல்ல ஆரம்பித்து விட்டார். அதிலிருந்து அவரை நாங்கள் 'பித்துக்குளி' என்று எங்களுக்குள் அழைத்துக்கொண்டோம். பொழுது போக்குக்கும் அவர் தேவையாக இருந்தார். வீண் பொல்லாப்பு எதற்கு என்று அவர் கோமாளித்தனத்தை ரசிக்க ஆரம்பித்தோம். அதன் பிறகு எங்களுக்கு இடையறாத தலைவலி தான்!...

"சார், அந்த நாவலை எழுதி முடித்து விட்டேன். முந்தி வந்துதே சினிமா, பதிபக்தி—அந்த மாதிரியே எழுதியிருக்கிறேன், ஸார்... படிக்கிறேன், கேக்குறீங்களா?... கொஞ்சம் எழுத்துப் பிழை இருக்கும்... திருத்தணும்..." என்று ஆரம்பித்து விட்டார் ராமதாஸ்.

"எழுத்துப்பிழை இருந்தா என்னங்க? கருத்து இருந்தா சரி!" என்று கிண்டி விட்டார் நண்பர்.

"நல்லாச் சொன்னீங்க ஸார்... அத்தனையும் கருத்துத்தான்... அந்தக் கடைசி சீனைப் படிக்கிறேன்... கேளுங்களேன்... அதாவது கணவன் கிட்டே பொண்சாதி கெஞ்சுறு... இதை எழுதும்போது, எனக்கே கண் கலங்கிப் போச்சுது, சார்... பாருங்களேன்...

"கைபிடித்த நாளிலிருந்து கண்ணீர் விட்ட வாழ்க்கைதானே... கணவனிடம் களிப்புக் கண்டேனு?... இல்லை; இல்லை... வாழ்வில் புளிப்புத் தானே கண்டேன்...! எத்தனை விதமான பழிப்புக்கள்...! வறுமைச் சுழிப்பில் வண்ணமணிக் குழந்தையை வாரிக்கொடுத்து வாடிக் கிடந்த இந்த வனிதையைப்பார்... சமூகமே! பார்!... சரிந்து போன ஏ, சமூகமே! உளுத்துப் போன ஏ, உலகமே! கட்டிய மனைவியை நட்டாற்றில் தள்ளும் கட்டழகனைப் பார்!.. தீர்ப்புக்கூறு!.."

ராமதாஸ் படித்துக் கொண்டே சென்றார்...

"சபாஷ்... சபாஷ்... வெளுத்து வாங்கிவிட்டீரே!..." என்று அடைக்கும் சிரிப்புடன் ராமதாவின் முதுகில் தட்டிக்கொடுத்தார் நண்பர். ராமதாவின் வதனத்தில் 'சிருஷ்டி மேதத்வம்' எக்களித்தது.

"மிஸ்டர் ராமதாஸ்! புரொட்யூஸர் புருஷோத்தம ராவுக்கு நல்ல கதை வேணுமாம்...நீர் முயன்று பாருமே.." என்றேன் நான்.

"ஆமாம்... நல்ல யோசனே. நாளைக்கே போங்கோ..."என்று நண்பர் முடுக்கினர்...

ராமதாஸுக்கு தலே கிறங்கி ஆடியது! "நாளைக்குப் போகட்டுமா ஸார்?" என்றார்...

"நிச்சயம் போங்க... கதைச் சுருக்கம் ஒன்று எழுதி எடுத்துக் கொண்டு போயிப் படிச்சுக் காட்டுங்கோ... அது புடிச்சிப் போச்சுன்ன, உடனே அட்வான்ஸ்..." என்று மேலும் முடுக்கினர் நண்பர்.

ராமதாஸுக்கு ஏக குஷி. மறு நாள் சாயங்காலம் சந்திப்பதாகக் கூறி விட்டு நடையைக் கட்டினன். அவன் போன பிறகு நாங்கள் வயிறு வெடிக்கச் சிரித்தோம்.

"மோதிரக் கையால் குட்டுப்படட்டும் — அப்பொழுது தான் பித்துக் குளிக்குப் புத்தி வரும்!" என்று நண்பர் கறுவினர்.

★ ★ ★

"என்ன ஸார்,ராத்திரிச் சாப்பாட்டுக்கு ஏதாவது வழிஉண்டா?" என்று கேட்டுக்கொண்டே பாயை விரித்துப் படுத்தார் நண்பர்.

அதற்கு நான் என்ன பதில் சொல்லுவேன் என்று அவருக்குத் தெரியும்.

> "நீங்கள் போட்டிருக்கிறீர்களே பாப்ளின் ஷர்ட்டு, உங்கள் ஷெல் பிரேம் கண்ணுடி எல்லாம் அவர்கள் வயிற்றில் இருக்க வேண்டியதைத் திருடியதுதான்!"
>
> —புதுமைப்பித்தன்
> (கவந்தனும் காமனும்)

"இன்னிக்குக் காலையிலே வீட்டுக்காரர் வந்தார். 'அமுதவல்லி' பத்திரிகையிலிருந்து வந்த சன்மானம் அவர் கைக்குப் போய் விட்டது" என்று கூறி என் 'கையறு நிலே'யைத் தெரிவித்துக் கொண்டேன்.

"அமுதவல்லி! நீங்கள் சொன்ன பிறகுதான் எனக்கு நினைவு வருகிறது... அதில் வந்துள்ள 'மலே' என்ற கவிதை தன்னுடையது என்று கூறிக்கொண்டதே, நமது பித்துக்குளி! உண்மையில் அதை எழுதியவர் வேருெருவராம்...அமுதவல்லி ஆசிரியரே என்னிடம் சொன்னர்..."

"அட, திருட்டு ராஸ்கல்!"

"வரட்டும் கழுதை!..."

"இவன்களை என்ன சார் பண்றது?..."

"வந்தது வரட்டும்'னு செருப்பைக் கழட்டி அடிக்கணும்..."

நண்பரின் ஆத்திரத்தை எதிரொலிப்பது போல் எங்கள் ரூம் வாயிலருகே ஒரு டாக்ஸி உறுமிக்கொண்டு நின்றது!

"நம்ம ரூமுக்கு யாரோ டாக்ஸியில் வருகிறார்களே" என்று தலையை நிமிர்த்திப் பார்த்தேன். ஸ்ரீமான் பித்துக்குளி அவர்கள் டாக்ஸி டிரைவருக்குப் பணம் கொடுத்துவிட்டு ஆர்ப்பாட்டமாக உள்ளே நுழைந்தார்.

"ஸார் புரொட்யூஸர் புருஷோத்தம ராவுக்கு நம்ம கதை புடிச்சிப் போச்சு! அடுத்த மாசம் ஷூட்டிங் ஆரம்பிச்சிடுவார். அட்வான்ஸ் வாங்கிட்டேன்.

என்ன பிரமிச்சு நிக்கிறீங்க? வாங்க சார்...காபி சாப்பிட்டுட்டு வரலாம்...'' என்று ஏக தடபுடல் செய்தான் பித்துக்குளி!

''இல்லே... இப்பத்தான் சாப்பிட்டோம்'' என்று ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு பதில் சொன்னார் நண்பர்.

''வாங்கோ சார்... கூப்பிடறேன், ஒரேயடியா பிகு பண்றீங்களே...'' என்று கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வெளியே நடந்தான் ராமதாஸ்.

நாங்கள் என்ன செய்வது? பித்துக்குளிகள் மாதிரி அந்த 'வசன கர்த்தா'வின் பின்னே நடந்து சென்றோம். காப்பி சாப்பிடத்தான்!

ராமதாஸ் சிரிக்கிறான். அவனுடைய பர்ஸில் பணம் சிரிக்கிறது, நாங்கள் அழவில்லே. அவனா பித்துக்குளி? ச்சீ! சத்தியமாக அவன் இல்லே! நாங்கள் தான்—இந்தப் பித்துக்குளி உலகத்தைப் புரிந்துகொள்ளாத நாங்கள் தான் பித்துக்குளிகள். நீங்கள் மட்டும் என்ன? — புரிந்துகொண்டு விட்டீர்களா? எங்கே, கொஞ்சம் நெஞ்சில் கை வைத்துச் சொல்லுங்கள்!... ★

## காட்சிப் பொருள் அல்ல!

"....இரண்டு தலே மாடு, புதிய சினிமா ஸ்டார், நெருப்பை விழுங்குகிறவன், பெரிய மனிதன், ஜெட்புரொப்பெல்லர் விமானம் இது மாதிரி என்னேக்காட்சிப் பொருளாகமதித்து அல்லது அவை போன்ற பெரிய இடத்து நோக்கங்களுடன் வருகிறவர்களே, நானும் விசித்திர ஜீவன்களாக மதித்து விடுவது என் இயல்பு. நண்பர்களுக்கு இடம் உண்டு; புதிய நண்பர்களுக்கு வரவேற்பு உண்டு."

புதுமைப்பித்தன் (ஒரு கடிதத்தில்)

## குடுகுடுப்பைக்காரன் சட்டை

ஒரு சினிமாக் கம்பெனி பிரம்மாண்டமான செலவில் ஒரு படம் தயாரித்தது. ஆனல் படம் முடிந்த பாட்டைக் காணேம். அந்தப் படத்தில் புதிய புதிய அம்சங்களேப் புகுத்த வேண்டும் என்பதற்காக, அப்போதைக்கப்போது வெளிவரும் ஆங்கிலப் படங்களிலிருந்து பல அம்சங்களேக் காப்பியடித்து, தன் படத்தில் புகுத்திக்கொண்டிருந்தது அந்தக் கம்பெனி.

இதைப்பற்றிப் புதுமைப்பித்தன் குறிப்பிட்டுச் சொல்லும்போது பின்வருமாறு சொன்னர். "கண்ட படத்திலிருந்தும் காப்பியடித்துக்கொண்டிருக்கிறர்கள். கடைசியில் படம் வெளிவரும்போது எப்படியிருக்கும் தெரியுமா? குடுகுடுப்பைக்காரன் சட்டை மாதிரி இருக்கும்!" என்றர்.

அதாவது துண்டுக் துணிகளே ஒட்ட வைத்துத் தைத்துக் கோமாளி மாதிரி குடுகுடுப்பைக்காரன் போட்டிருப்பானே அந்த மாதிரி அதாவது படம் கோமாளித்தனமானமாகத்தான் இருக்கும் என்பதைத்தான் இவ்வாறு குறிப்பிட்டார்.

**சிறந்த சினிமா வசனகர்த்தாவான திரு. இளங்கோவன் புதுமைப் பித்தனுடன் பத்திரிகைத் தொழில் சகாவாகச் சிலகாலம் வேலை பார்த்தவர். இங்கு அவர் புதுமைப்பித்தனைப் பற்றிய சில நினைவுக் குறிப்புக்களைச் சுவை படத் தந்திருக்கிறார்.**

# சுதந்திரக் கலைஞர் சொ. வி.

○

**" இளங்கோவன் "**

○

**1933**-வது ஆண்டு. மாதம், தேதி, கிழமை ஞாபகமில்லை... ஆக ஒரு தினம். சென்னை மண்ணடி நயினியப்பன் வீதியில் 'மணிக்கொடி' ஆபீஸில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். ஸ்ரீ வ. ரா. இளம்எழுத்தாளனுகிய எனக்கு அவரது வழக்கப்படி ஏதேதோ பேசி உற்சாக மூட்டிக் கொண்டிருந்தார். அப்போது ஒல்லியான உடல், கனவுக் கண்கள், வெற்றிலைக் காவியும் புன்னகையும் ஒன்ருெடொன்று இணைந்து ஒளிரும் உதடுகள், சிவப்படாது சிதறுண்டு கிடந்த கிராப்பு – இவற்றுடன் கூடிய ஒரு இளைஞர் உள்ளே நுழைந்தார். 'வாங்கோ வாங்கோ' என்று வாயாரக்கூறி அவரை வரவேற்ருர் ஸ்ரீ வ. ரா. அந்த 'அவர்' தான் ஸ்ரீ சொ. விருத்தாசலம் ('புதுமைப்பித்தன்'). அன்றுதான் அவரை முதன் முதலாக நான் சந்தித்தேன்.

அன்று ஏற்பட்ட நட்பு நாளுக்குநாள்வளர்ந்தேவந்தது. பின்னர் 'தினமணியில்' நானும் அவரும் 'வேலை' செய்தோம். அவருடன் ஆறு வருஷங்கள் பழகும்படியான பாக்கியம் 'தினமணி' யில்தான்எனக்குக்கிடைத்தது. பத்திரிகையில் 'தெய்வமே' என்று சேவை செய்து வந்தாரே ஒழிய, திருவுளச் சம்மதத்தோடு இல்லவே இல்லை. காரணம் அவர் இயற்கையிலேயே சுதந்திரக்கலைஞர். வெறும் தந்திகளை மொழிபெயர்க்கும் வேலை அவருக்குத் தலைவலியாகவே இருந்து வந்தது. தமது கற்பனை உள்ளம் தினமும் தகர்ந்து பொடியாகி வருவதாகவே அவர் கருதி வந்தார். அவரது மேதையை அறிந்து கொண்ட ஆசிரியர் ஸ்ரீ டி. எஸ். ஸி. (டி. எஸ். சொக்கலிங்கம்) அவருக்கு அடிக்கடி வருஷ மலர்கள் இயற்றும் பொறுப்பைக் கொடுத்து, அவருக்கு ஏற்பட்டு வந்த வெறுப்பையும், மந்தத்தையும் ஒருவாறு தணித்து வந்தார். ஆனுலும் அவர் நெஞ்சம் மட்டும் ''ஈஸ்வரா! இத்தனை நாட்களுக்கு இந்த நியூஸ் பேப்பர் வாழ்க்கை?'' என்று எண்ணத்தான் செய்தது. இதை நான் மட்டுமல்ல, அவருடன் பழகிய எல்லோருமே அறிவார்கள்.

அதற்கப்புறம் 'தினசரி'க்கு வந்தார். சில மாதங்களுக்குப் பின் அவருக்கு ஒரு நம்பிக்கை பிறந்தது. அதன் காரணமாக பேப்பர் தொழிலுக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு வெளியே வந்து விட்டார். பின்னர் சினிமாப்பட வசன கர்த்தரானுர்.

கடைசியாக அவர் ஸ்ரீ எம். கே. டி. பாகவதர் நடிக்கும் 'ராஜ முக்தி' என்ற படத்துக்கு வசனம் எழுதினூர். படம் வெளி வருவதற்குள் பாவி எமன் அவரைக் கொண்டே சென்று விட்டான். ''பணத்திற்காகத் தான் சினிமா உலகில் பிரவேசிக்கிறேன். புத்தகங்கள் எழுதினுல் நான் பிச்சை யெடுக்க வேண்டியதுதான்'' என்று 1947-ம் ஆகஸ்டில் என்னிடம் புதுமைப்பித்தன் கூறினுர். நான் அவரைக்கடைசித்தடவையாகச் சந்தித்தது அதுதான். அவரது அந்த வார்த்தைகளின் உட்கருத்தை தமிழ் மக்களும் பிரசுர கர்த்தாக்களும் இனியாவது உணர்வார்கள் என்பதே என் நம்பிக்கை.

★ ★ ★

புதுமைப்பித்தனின் பேச்சுக்களில் அர்த்த புஷ்டியும் கிண்டலும் குத்தலும் நிறைந்தே விளங்கும். எதையும் ஹாஸ்யமாகவே பேசி, எதிரிகளைமட்டம் தட்டுவதில் அவருக்கு அவர் தான் இணை. அப்டன் சிங்க்ளேர், கால்ஸ் வொர்த்தி, இப்ஸன், பிராங்க் ஹாரிஸ், ஷா முதலிய மேனுட்டு ஆசிரியர்களின் நூல்களில் 'புதுமைப்பித்தன்' பெரு மோகம் கொண்டவர். கட்டுப்பாடு, எல்லை, ஒழுங்கு, நியமம், நியதி, வரம்பு என்ற வார்த்தைகளின் நினைவேயில்லாமல் தமக்கென ஒரு நடையைச் சிருஷ்டித்து கலைஞர்களைத் தட்டி யெழுப்பும் நூல்களை எழுதி வந்தார் புதுமைப்பித்தன். கம்ப ராமாயணத்திலிருந்து வருண குலாதித்தன் மடல் வரையிலும் 'சொ. வி.'க்கு தலைகீழ்ப்பாடம் என்று சொல்லும்போது எழுத்தாளர்கள் சிலர் ஆச்சரியப்படலாம். ஆம்! பண்டைத் தமிழ் இலக்கியங்களில் அவருக்கு அபாரமான பற்று இருந்து வந்தது. ஆங்கில இலக்கிய பாணியைக் கைக்கொள்ளாமல் தமிழுக்கென ஒரு பாணியைத் தமிழ் எழுத்தாளர்கள் கைக்கொள்ள வேண்டும் என்பதுதான் அவர் பேராசை, இலட்சியம் எல்லாம். இந்த இலட்சியத்தில் அவர் நூற்றுக்கு நூறு வெற்றி பெற்ருர் என்பதற்கு அவரது நூல்களே சான்ருக உள்ளன.

புதுமைப்பித்தனின் எழுத்துக்கள் ஆரம்ப காலத்தில் பலரைத் திகைக்க வைத்து விட்டன. ''என்ன சார்! இவர் எழுதுவது எழுத்தா? ஒரே குழப்பமாயிருக்கிறதே!'' என்றெல்லாம் பலர் கூறினுர்கள். ஆனுல் வருஷங்கள் ஆக ஆக, மக்கள் அவரது இலக்கியப் பண்பை அறிந்து உணர்ந்து அனுபவிக்கலானுர்கள்.

சினிமா உலகத்தில் பி. யூ. சின்னப்பாவுக்கு 'புதுமைப்பித்தன்' புஸ்தகங்கள் என்ருல் ஒரே கிறுக்கு. 'யானறிந்த புலவனிலே புதுமைப்பித்தன் போல் புவிதனிலே யாங்கணுமே பிறந்ததில்லை' என்று அடிக்கடி கூறுவார் தோழர் ஸ்ரீ பி. யூ. சி.

தாமஸ் ஹார்டி, லூயி ஸ்டீவென்சன், கால்ஸ்வொர்த்தி, சிங்க்ளேர், ஜேம்ஸ் ஜாய்ஸ், கய் டி மொப்பஸான், லைன் ப்யூட்ஸ் வாங்கர், தாமஸ் மான், மாகம் முதலிய மேனுட்டுப் பேராசிரியர்களுடன் சமநிலையில் நிற்கும் புதுமைப்பித்தனுக்குத் தமிழ் நாடு நன்றி செலுத்தியே யாகவேண்டும். ★

★ முற்காலத்துத் தமிழ்ப் புலவர்கள் தமக்குள் லிகிதப் போக்குவரத்தை மேற்கொள்ளும்போது சீட்டுக்கவிகள் எழுதியனுப்புவதுண்டு. பின்பக்கத்தில் காணப்படுவது புதுமைப்பித்தன் ஆசிரியர் ரகுநாதனுக்குத் தமது கைப்பட எழுதியனுப்பிய ஒரு சீட்டுக் கவியின் போட்டோப் பிரதியாகும். இந்தச் சீட்டுக் கவி பிறந்த வரலாற்றைச் சுவைபடக் கூறுகிறது இச் சிறு கட்டுரை.

# வெட்டரிவாள் பாட்டுண்டு!

ரகுநாதன்

1945-ம் வருஷம். அந்தக் காலத்தில் நான் தினமணி பிரசுராலயத்தில் கூலி எழுத்தாளனாக அமர்ந்து 'இலக்கிய சேவை' செய்துகொண்டிருந்தேன். அப்போதுதான் புதுமைப்பித்தனும் 'தினசரி' பத்திரிகையை விட்டு விலகி, சினிமாவுக்குக் கதை வசனம் எழுதுவதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தார். அந்த நாட்களில் நானும் புதுமைப்பித்தனும் பேசாத நாளெல்லாம் பிறவா நாளாகக் கருதி, தினம் தினம் சந்திப்போம்; பேசுவோம். புதுமைப்பித்தன் எழுதியுள்ள மாதிரி 'பாரதி என்ற வாணலியிலே வறுத்தெடுத்த இரும்புக் கடலை'களாகக் காட்சியளிக்கும் தமிழ் நாட்டின் காளான் கவிராஜர்களைப்பற்றிப் பேசுவோம்; தாம் சிருஷ்டிக்கும் இலக்கியங்கள் எல்லாமே நோபல் பரிசுக்குத் தகுதியானவை என்று தமக்குத்தாமே மார் தட்டிக் கொள்ளும் 'இலக்கிய சாம்ராட்'டுகளைப்பற்றிப் பேசுவோம்; நம்பிக்கை தரும் இளம் எழுத்தாளர்களின் நல் முயற்சிகளைப் பாராட்டுவோம். இலக்கியத் திருடர்களின் ரிஷிமூல ரகசியத்தை அம்பலப்படுத்துவோம்; இலக்கிய உலகின் புல்லுருவிகளின் மீது அறம் பாடுவோம். இவ்வாறு இலக்கிய சர்ச்சையிலும் அரட்டையிலும் பொழுது கழிந்து வரும்போது, பொங்கல் தினமும் வந்தது.

பொங்கலுக்கோ மற்ற சுப தினங்களுக்கோ வாழ்த்துக்கள் அனுப்பும் 'கெட்ட' பழக்கம், எனக்கோ புதுமைப்பித்தனுக்கோ கிடையாது. எனினும் நான் அந்த வருஷம் வம்புக்காயினும் ஒரு "வாழ்த்து!" அனுப்புவோமே என்று எண்ணி, 'குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியன்...' என்று

VIRDHACHALAM

12·1·46

[illegible]

1. [illegible]

2. [illegible]

[illegible]

குறிப்பு

“[illegible]”

[illegible] N [illegible]

[illegible]

தொடங்கும் பழைய பாடலொன்றைப் பொறுக்கி, அதனைத் தற்கால நடைமுறைக்கு ஏற்றவாறு சில திருத்தங்களும் செய்து, இலக்கியத் துறையில் உள்ள நண்பர்களுக்கும்,விரோதிகளுக்கும், 'பாட்டு' எழுதும் 'கவிஞர்' பெரு மக்களுக்கும் 'பொங்கல் செய்தி!'' என்று மகுடமிட்டு அச்சிட்டு அனுப்பி வைத்தேன். நான் அனுப்பிய பாடலின் திருவுருவம் பின் வருமாறு:

குட்டுதற்கோ பிள்ளைப்
பாண்டியனு மிங்கில்லை;
குறும்பி அளவாய்க் காதைக்
குடைந்து தோண்டி
எட்டினமட்டு அறுப்பதற்கோ
வில்லியில்லை;
இரண்டொன்றாய் முடிந்துதலை
இறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவி ஒட்டக்
கூத்தன் இல்லை;
விளையாட்டுக் கவிகள் பல
விரைந்து பாடித்
தெட்டுதற்கோ தமிழறியாத்
துறைகள் உண்டு!
தெருத் தெருவாய்ப் புலவரெனத்
திரியலாமே!

பண்டைக் காலத்தில் போலிப் புலவர்கள் பட்டபாடு சாதாரணமானதல்ல. பிள்ளைப் பாண்டியன் போலிப் புலவர்களை தனது மோதிரக்கையால் தலையில் குட்டி அவமானப்படுத்துவானும். பாரதம் பாடிய வில்லிபுத்தூராரோ போலிப் புலவர்களின் காதுகளையே அறுத்து விடுவாராம். ஒட்டக்கூத்தனோ போலிப்புலவர்களின் சிண்டை முடிந்து சிரச்சேதமே செய்து விடுவானும். இவ்வாறெல்லாம் அவர்கள் செய்தார்களா, இல்லையா என்பது ஒருபுறம் இருக்கட்டும். எனினும் போலிப் புலவர்கள் அந்தக் காலத்தில் அவ்வளவு லகுவில் 'வாலாட்ட' முடியாது. ஆனுல் தற்காலத்திலோ? அப்படிப்பட்ட நபர்கள் இல்லாத காரணத்தால், கையில் பேனு எடுத்தவனெல்லாம் கவிஞனுகத் திரிய, கவிஞன் என்று சொல்லிக்கொள்ள ஆரம்பித்து விட்டார்களே என்பதுதான் பாட்டின் பொருள்.

இந்தப் பாடல் மூலம் பெற்ற ''வாழ்த்தை''க் கண்டு, பல எழுத்தாள நண்பர்கள் என்மீது கோபப்பட்டார்கள்; தம்மைத் தாமே ஆத்மவிசாரணை செய்து அடங்கியும் போனுர்கள். இந்தப் பொங்கல் செய்தியைப் பெற்ற தமிழ் நாட்டு இலக்கிய கர்த்தாக்கள் பலர். எனினும், இரண்டே இரண்டு பேரிடமிருந்துதான் எனக்கு எழுத்து மூலமாக எதிரொலி கிடைத்தது. ஒன்று: காலம் சென்ற ரசிகமணி திரு. டி. கே. சி. யிடமிருந்து; மற்றொன்று; வேளூர் வெ. கந்தசாமிக் கவிராயர் என்ற புனைபெயரோடு பாடல்கள் எழுதி வந்த புதுமைப்பித்தனிடமிருந்து, திரு. டி. கே. சி. நான் அனுப்பிய 'பொங்கல் செய்தி'யின் அந்தரங்க அர்த்த பாவமாகத் தொனித்த எனது மன வேதனையை உணர்ந்து, பின்வருமாறு பதில் எழுதினுர். ''ஹிம்சை என்பது அனுதியான தத்துவம். இதற்கு நாமெல்லாம் கவலைப் படுவானேன்.?'' என்பதுதான் அவரது பதில். ஆனுல் இந்தப்

பதிலோ எனக்கு ஏலாத் தனத்தின் விரக்தியிலே பிறக்கும் வேதாந்த விசாரமாகவே பட்டது

ஆனால் புதுமைப்பித்தனோ என் மனத்துக்குக் காயகல்ப சிகிச்சை அளிப்பது போல் 'பொங்கல் நம்பிக்கை' என்று மகுடமிட்டு, இரண்டு பாடல்களின் மூலம் பதில் அனுப்பினார். அவர் அனுப்பிய 'நம்பிக்கை' வருமாறு:

குட்டுதற்கும் வெட்டுதற்கும்
கூட்டமுடன் அன்னவரைச்
சுட்டு எரித்துத்
தகிப்பதற்கும்—வெட்டரிவாள்
பாட்டுண்டு; நானுண்டு;
நீயுண்டு; பாட்டறியா
மோட்டெருமைக் கவிராயன்
உண்டு! 1

மோட்டெருமைக் கவிராயன்
'முக்காரம்' கேட்டக்கால்
நாட்டமுள்ள பாட்டின்
நயம் தெரியும்—பாட்டுள்ள
ரகுநாதா, நெஞ்சே,
ரவை வைத்துப் பாட்டிழைக்கும்
ரகுநாதா ஏங்காதே
நீ! 2

[முக்காரம்: எருது போர் வளைக்கும் குறி]

திரு. டி. கே. சி. யினுடைய வேதாந்த விசாரத்தைவிட, விறுப்பு மிகுந்த இந்த இரு பாடல்களும் உண்மையிலேயே என் மனத்தின் தெம்பையும் திராணியையும் தன்னம்பிக்கையையும் உற்சாகப்படுத்தின. அந்த உற்சாகத்தின் விளைவினால் புதுமைப்பித்தனின் 'பொங்கல் நம்பிக்கை'யை வாழ்த்தி வரவேற்று நானும் சில பாடல்களை எழுதி அவருக்கு அனுப்பி வைத்தேன். நான் புதுமைப்பித்தனுக்கு எழுதிய அந்தப் பதில் இதுதான்.

வேளூர்க் கவிராயா!
விண்ணணைச் செந்தமிழின்
வாளொத்த கவியிரண்டும்
வாசித்தேன் — நாளெல்லாம்
வெந்தழலாற் பாட்டெழுதும்
விருத்தாசலப் பெரியோய்!
தந்திட்டேன் மிகவந்
தனம்! 1

தோணியப்பர் பாடி வச்ச
சூத்திரத்தைப் பார்த்த பின்னும்
வீணுக்கே கவியெழுதும்
வெட்டிகளைக்—கோணிக்குள்
போட்டடைச்சிப் பெருச்சாளி
போலடிச்சிச் சாகடிக்கப்
பாட்டெழுதில் உண்டு
பலன்! 2

காமனையும் சோமனையும்
காவினையும் தென்றலையும்
வாம முலை யழகும்
வருணித்து—சாமத்தில்
குடை பிடித்துக் கூத்தாடும்
கூட்டத்தார் தங்குடுமிச்
சடை பிடித்துச் சாத்தல்
சரி. 3

தங்கக் கவி யெனவே
தமுக்கடிச்சிச் சொல்லிவரும்
வெங்கத் திருக் கூட்டம்
வீடு பெற—சங்கத்து
நக்கீரன் தன் வழியில்
நாமிருவர் சென்று, நிதம்
மொக்க வுண்டு பேணு
முனை! 4

ஆம். 'குட்டுதற்கும் வெட்டுதற்கும்' இன்று நம்மிடையே புதுமைப்பித்தன் இல்லாது போய் விட்டார். எனினும் இலக்கியப் போலிகளை இனம் கண்டு ஒழிப்பதற்கு அவர் கற்றுத் தந்த கலை நோக்கும் கவிதா விமர்சனமும் நம்மிடையே இல்லையா, என்ன? ★

★ புதுமைப்பித்தன் 'அருளிச்செய்த'

# சிறப்புப்பாயிரம்

•

இந்தக் காலத்தில் எழுத்தாளர்கள் பலரும் தாம் எழுதும் நூல்களுக்கு முன்னுரை கேட்டு அறிஞர் பெருமக்களை நாடுவது போல், அந்தக் காலத்தில் கவிஞர்கள் தாம் பாடி முடித்த பிரபந்தங்களுக்குப் பிற கவிஞர்களிடமும் அறிஞர்களிடமும் சாற்றுக் கவிகளும் சிறப்புப் பாயிரமும் கேட்டுச் செல்வதுண்டு. இந்தக் காலத்தில் நூல் நன்றாயிருந்தாலும் நன்றாயிராவிட்டாலும் சிலர் முகத்தாட்சண்யத்துக்காகவேனும் 'அற்புதம் அபாரம்' என்று அளவுக்கு மீறிப் புகழ்ந்து விடுகிறார்கள் அல்லவா? அந்தக் காலத்துப் புலவர்கள் இந்த ஒரு விஷயத்தில் மட்டும் மிகுந்த நேர்மையுடன், அதீதமான கண்டிப்புடன் நடந்து கொண்டார்கள் என்றே சொல்ல வேண்டும். எனவே இவ்வாறு சிறப்புப் பாயிரம் கேட்டுச் செல்லும் புலவர்களுக்கு எப்படிப்பட்ட வரவேற்பு கிடைத்திருக்கும் என்று சொல்ல முடியாது. அது அவரவர்களுடைய கவிதா சக்தியின் பலாபலத்தைப் பொறுத்த விஷயமாகும்.

புதுமைப்பித்தன் தலை சிறந்த இலக்கிய விமர்சகர் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர் முகஸ்துதிக்காகவோ, தெரிந்தவர் வேண்டியவர் என்பதற்காகவோ, தன்னலம் கருதியோ எவருடைய சிருஷ்டியையும் பாராட்டிவிட மாட்டார். நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே என்று சொல்லும் தெம்பும் திராணியும் பெற்றவர் அவர். அவருடைய கையால் 'குட்டுப்பட்டு'ப்போன பிரபல எழுத்தாளர்கள் பலர் உண்டு.

இலக்கிய விமர்சன உலகில் நக்கீரப் பிறவியாகக் காட்சியளித்து வந்த புதுமைப்பித்தனுக்கு சுடலைமுத்து என்ற பெயருள்ள தெரிந்த நண்பர் ஒருவர் இருந்தார். அவருக்குத் தபால் இலாகாவில் வேலை. அந்த நண்பருக்குக் கொஞ்சம் 'கவிதைப் பைத்தியம்' உண்டு. ஒரு நாள் அவர் ஒரு குட்டிப் பிரபந்தத்தை இயற்றி எடுத்துக் கொண்டு, புதுமைப்பித்தனிடம் வந்து அதனை வாசித்துக் காட்டி அதற்கு ஒரு 'சிறப்புப் பாயிரம்' கேட்டார். கவிதா சக்தியோ, கற்பனையாற்றலோ ஒரு சிறிதுமில்லாத அந்தப் பிரபந்தத்தைப் புதுமைப்பித்தன் பொறுமையோடு கேட்டார். நண்பர் என்ற காரணத்துக்காக, அந்தக் 'குப்பை'யைச் சம்பிரதாயமாகக் கூடப் பாராட்டவில்லை. எனினும் நண்பரோ விடுவதாயில்லை.

> "சமூகத்தின் ஊழல்களைத் தமது முரட்டுக் கிண்டல்களால் எள்ளி நகையாடும் லட்சியக் கலைஞர்."
> புதுமைப்பித்தன். —அசோகன்

சிறப்புப் பாயிரம் தந்தேயாக வேண்டும் என்று 'குரங்குப் பிடியில்' நின்றார். பாவம், புதுமைப் பித்தன் தான் என்ன செய்வார்?

''சரி, சிறப்புப் பாயிரம் தருகிறேன்'' என்று கூறிவிட்டு, ஒரு பாடலை எழுதி அந்த நண்பரிடம் கொடுத்தார். அந்தப் பாடல் பின்வருமாறு:

அஞ்சல் சுடலைமுத்தின்
ஆலகவி கேட்டவர்கள்
நெஞ்சம் உலர்ந்துபட்ட
நேர்மை என்னே!—நஞ்சு
தின்றும்
பிறந்திறவா வரம் பெற்றான்
பித்தானான் என்றக்கால்
பிறந்திறப்பார் பெற்றி என்ன
சொல்!

மேலே கண்ட பாடலுக்கு அர்த்தம் என்ன தெரியுமா?

அஞ்சல்-அதாவது தபால் நிலையத்தில் வேலைபார்க்கும் கவிஞர் சுடலைமுத்தின் ஆலகால விஷம் போன்ற கவிதையைக் கேட்டவர்களின் உலர்ந்து உருக்குலைந்து போகும் நெஞ்சங்களின் நிலைதான் என்ன? சிவபெருமான் தேவர்களைக் காப்பதற்காகவா திருப்பாற் கடலிற் பிறந்த விஷத்தை அள்ளிப் பருகினான் என்று நினைக்கிறீர்கள்? இல்லை. நமது கவிஞர் சுடலைமுத்தின் நாராசமான கவிதையைக் கேட்ட கொடுமையைச் சகிக்க முடியாமல்தான் சிவபெருமான் விஷத்தை அள்ளியுண்டு பிராணத் தியாகம் செய்து கொள்ளப் போனான். ஆனால், அவனோ இறப்பும் பிறப்புமில்லாத இறைவனானகையால் அவனால் தற்கொலையும் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே உயிர் போகமாட்டாத இந்தச் சித்ரவதையைப் பொறுக்க மாட்டாமல், சிவபெருமானுக்குப் பைத்தியமே பிடித்து அவன் 'பித்த'னாகி விட்டான். கர்ண கடூரமான சுடலை முத்தின் கவிதையைக் கேட்ட காரணத்தால் பிறப்பும் இறப்புமற்ற ஆண்டவனின் நிலையே, இத்தனை அலங்கோலத்துக்கு ஆளாகி விட்டது என்றால், கேவலம் பிறப்பும் இறப்பும் உள்ள சாதாரண மானிடப் பிறவிகளாக மக்களின் கதி என்னவாகும்? அதனைக் கற்பனை தான் பண்ண முடியுமா?— என்பதுதான் இந்தப் பாடலின் கருத்து; சிறப்புரை!

இந்தப் பாடலைக் கேட்ட பிறகும், அஞ்சல் சுடலைமுத்து புதுமைப்பித்தனின் முன்னிலையில் நிற்பதற்கு அவருக்குப் பைத்தியமா என்ன? அவர் சொல்லாமல் கொள்ளாமல் போயே போய்விட்டார். ★

## எதிர்கால உலகில்....

"எதிர்கால இலக்கிய உலகம் மேனாட்டில் இன்று ஷேக்ஸ்பியர், மில்டன், மாக்ஸிம் கார்க்கி, பெர்னாட்ஷா முதலிய மேதைகளை உயர்த்திப் பாராட்டி வருவதுபோல் புதுமைப்பித்தனையும் சிறப்பித்துப் பாராட்டப் போகிறது என்பது திண்ணம்."

— நாரணதுரைக்கண்ணன்

"வானத்து அமரன் வந்தான் காண்! வந்தது போல் போனான்காண் என்று புலம்பாதீர்!" என்று கூறிச் சென்றார். புதுமைப்பித்தன் அவர் ஏன் அப்படிக் கூறிச் சென்றார்? யாருக்காகக் கூறிச் சென்றார்?...

# உன்னைத்தான் கேட்கிறேன்!

○

திருச்சிற்றம்பலக் கவிராயர்

○

## 1

என்ன விழிக்கின்றாய்?
உன்னைத்தான் கேட்கின்றேன்;
ஒரு வார்த்தை!

என்னருமைத் தமிழ் நாட்டில்
எழுத்துலகின் முடிசூடா
மன்னனென்றும், மறுமலர்ச்சி
மாணிக்கம், தங்கமென்றும்
அன்னை விலங்கறுக்கும்
அவதார மூர்த்தியென்றும்
உன்னையே நீ புகழ்ந்து
உனக்கே நீ மாலையிட்டு
உன்மத்தம் கொண்டலையும்
உன்னைத்தான் கேட்கின்றேன்,
ஒரு வார்த்தை!

அன்றைக்கு

செத்துமடிந்தான்புதுமைப்
பித்தனென்றே உம்முடைய
சித்தத்துளே மகிழ்ந்து
செப்புமொரு ஒப்பனைக்காய்,
'வானத்து அமரன்போல்
வந்தான்காண்! வந்ததுபோல்
போனான்காண்!' என்றுசொலிப்
புலம்பிமுடித் துள்ளம்
பூரித்துப் போய்விட்ட
புண்ணியரே!
உம்மைத்தான் கேட்கின்றேன்;
ஒரு வார்த்தை!

## 2

ஏனையா?

போனான்காண் என்றே
புலம்பிவிட்டுப் போயிடுவீ
ராஞலும் அவன் என்ன,
உம்மைப்போல் —

சிந்தனையை முற்றும்
சிரச்சேதம் செய்துவிட்டு,
சொந்தத்துக் கற்பனையைச்
சுட்டுப் பொசுக்கிவிட்டு,

வெளிநாட்டு மேதையர்தம்
வெளியீட்டை ஒவ்வொன்றாய்
வழிமறித்துக் களவாடி
மொழிபெயர்த்து, பாத்திரத்தின்
ஊர்மாற்றி, பேர்மாற்றி
உடுக்கைதனை மாற்றிச்
சேர்மான வேலைகளும்
சிறிதே இடை கலந்து,

காயடிச்ச வார்த்தைகளில்
கட்டிச் சுருட்டிவைக்கும்
ஈயடிச்சான் காப்பிகளை
இலக்கியமென்றே செப்பி
வாயடித்துக் கையடித்து
வாழ்ந்து மறைந்தானு?

## 3

இல்லையெனில், அவன்என்ன
உம்மைப்போல்,

கற்பனையோ, கலையழகோ
கருத்தின் தனிவலியோ
சொற்படிகச் சிற்பமென்ச்
சொலிக்கும் மொழிவளமோ
அற்பத்தின் அற்பமெனும்
அளவுக்கும் தேருத
கர்ப்பச் சிதைவுகளைக்
கட்டிச் சுமந்துகொண்டு,

பத்திரிகை ஆசிரியர்
பாதத் திருக்கமலம்
நித்தம்தொழுது, அவர்பின்
நீங்கா நிழல்போல
நத்தித்திரிந்து, வெறி
நாயாய் நடைநடந்து,

ஆசிரியர் வீட்டுக்கு
அல்வா ஜி லேபிலட்டு
ஓசியிலே அனுப்பியவர்
உள்ளந்தனைக் கவர்ந்து,

அன்னவரைக் கண்டக்கால்
அடியேன் தெண்டமெனச்
சென்னிதனைத் தாழ்த்திச்
சேவித்து, மேல்துண்டை
முன்னி யவசரமாய்
முழங்கைக்கிறக்கி, சற்றே
முறுவலித்து,

பின்னவரை

வால்பிடித்து, மேல்பிடித்து
வலியெடுத்த திருக்கமலக்
கால்பிடித்து, கைபிடித்து,
காக்காய் பிடித்து,

எழுது

கோல்பிடித்த புண்ணியத்தைக்
கொட்டியளந்தானு?
கொட்டியளந்துயிரைக்
கொள்ளை கொடுத்தானு?

## 4

இல்லையெனில் அவன் என்ன
உம்மைப்போல் —

பெற்றெடுத்த தாய்நாட்டுப்
பிரேமைதனைத் துறந்து,
கற்றறிந்த நற்கலையின்
கடமைதனை மறந்து,
நாட்டுமக்கள் தம்வாழ்க்கை
நலத்தை மறந்துவிட்டு,
ஆட்டுவிக்கும் பொம்மைகளுக்
காள்பிடிக்கும், வலைவீசும்

வேற்றூரான் தரும் பிச்சை
வெள்ளிப் பணத்துக்கும்
சோற்றுக்கும், அவிசாரிச்
சுகபோக வாழ்க்கைக்கும்
ஊற்றூறும் பேனுவை,
உளத்தை, உடலத்தை,
விற்று முதலாக்கி
வீழ்ந்தானு? தன்மானப்
பற்றைப் பறக்கவிட்டுப்
பரிசழிந்து செத்தானு?

## 5

இல்லையெனில் அவன் என்ன
உம்மைப்போல் —

அல்லும் பகலும்
அயராது பாடுபட்டும்
கொல்லும் பசிப்பிணியைக்
கொல்லுதற்குக் கூழுமின்றி,
சற்றே தலைசாய்த்துச்
சயனிக்கக் கூரையின்றி
வற்றி மெலிந்துடலம்
வாடி வதங்குகின்ற
எண்ணற்ற ஏழையர்தம்
இழிநிலையைப் போக்குதற்குக்
கண்ணற்றுக் கருத்தற்று
கடமை உணர்வற்று,

கன்னியரின் மேனிவளக்
கட்டழகை, அன்னவர்தம்
மின்னல் துடியிடையை
மேலாக்கை, மேலாக்கின்

பின்னணியில் மறைந்திருக்கும்
பேரழகை, பேசும்விழிக்
கண்ணழகை, கண்மணியின்
கறுப்பழகை, — ஒவ்வொன்றாய்
எண்ணிக் கணக்கிட்டு
எடைபோட்டு, மதிப்பிட்டுப்
பின்னர்அந்த

எழில் வளத்தை மோனை
எதுகைகளால் வருணித்துத்
தொழில்நடத்தி, தன்மானம்
துறந்தே துட்டடிக்கும்
கழிசடையாய் மாறியபின்
கண்மூடிப் போனானா?

## 6

இல்லை யில்லை!
அவன் உம்போல் —

பழித்துலகம் கூறும்
படைப்புக் களைப் படைத்து
எழுத்துலகை மலிவாக்கி
இழிவாக்கிச் சாகவில்லை!
உளுத்துக் கலகலக்கும்
உரைபயின்று சாகவில்லை!
கொளுத்துகின்ற செந்தழலாய்க்
கொடுமைசெயும் நோக்காடு
அழுத்தியுயிர் குடித்தாலும்
அவனறிவு சாகவில்லை!

கடைப்பட்டு, தரங்கெட்டு,
கருத்தின் உரம்கெட்டு
உடைபட்டு உருக்குலையும்
உம்முடைய 'வானமரப்
படைப்பினங்கள்' எல்லாம்
பரிசைகெட்டுச் சீரழிந்து
நடைப்பிணங்க ளாய்மாறி
நாற்றம் எடுக்கின்ற
நாளையிலும்,

இழிநரகில், சாக்கடையில்
இருட்கிடங்கில் ஒளிகாணும்
வழிவகைகள் தெரியாது
வாடுகின்ற மானிடர்தம்
பழிவாழ்வை உலகறியப்
பறைசாற்றும் முறையறிந்து,

புத்தம் புதுத்தமிழில்,
புல்லரிக்கும், நெஞ்சுலுக்கும்
சித்தந்தனைச் சிலிர்க்கும்
செந்தமிழில், நற்கதைகள்
நத்தி நம்மவர்க்கு
நாளும் அளித்துவந்த
பித்தனவன் கற்பனையில்
பிறப்பெடுத்துத் துள்ளிவந்த
சித்திரங்கள் எல்லாம்
சிரஞ்சீவி யாயுலகில்
நித்தம் நிலைத்திருக்கும்
நிலையை நீர் உணர்வீரோ?

சீதக்காதி யென்பான்
செத்தும் கொடுத்தானென்
றோதுகின்ற கூற்றைப்போல்,
உலகில் தன்னுடைய
பூதவுடல் நீத்துப்
போனாலும், பித்தனவன்
சாதலறியான்; உம்மைப்போல்
சாக்காடும் தானறியான்!
போதலறியான்! எனினும்
புகழறிவான்! செய்நன்றி
நீதிமற வா மக்கள்
நினைவிலே நின்றறிவான்!

ஈதையெலாம் நீரறிந்தும்
ஏனையா புலம்புகிறீர்!
புலம்பாதீர்!

★